நீதிநூற்றிரட்டு விருத்தியுரை 9-ம் பாகம்.

உ

சங்கச் செய்யுள்.

காரியாசான் செய்த

சிறுபஞ்சமூலம்

மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமி நாயுடு அவர்களால்

செய்யப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

றும், என்று மொருதன்மையனா யிருத்தலால் 'மூவாதான்' என்றும் கூறினார். மூவாதான் என்பதற்குப் பகுதி மூ. பிறவிப் பெருங்கடற்கோர் பெருமரக்கல மாதலால் இறைவனது பாதத்திற்கண் வைத்தார். பழுது - வழிபாட்டின் முறையிற் குற்றம். காயத்தின் றொழிலாகிய பணிதலும், வாக்கின் றொழிலாகிய ஏத்துதலும் மனத்தினா வழிபவாதலால் மனத்தின் றொழிலாகிய சிந்தித்தலுங் கொள்ளப்படவே முக்கரண வழிபாடு மடங்கிற்று. உறுதி-அறம் பொருளின்பம் வீடு என்பன.

இச்செய்யுளில், நூற்பெயர்க்கேற்ப ஐந்தென்றுந் தொகை கோடல் யாங்ஙனமெனின், முக்குற்றமொழிதலும், முழுதுணர்சியும், மூவாமையும் ஆகிய ஐந்தினையுங் கொள்க வெனவுருபாயிற்று. ( )

ஒத்த வொழுக்கங் கொலைபொய் புலால்களவோ
டொத்த விவையல வோர்நாலிட்-டொத்த
உறுபஞ்ச மூலந்தீர் மாரிபோற் கூறீர்
சிறுபஞ்ச மூலஞ் சிறந்து.

ப-ரை. ஒத்த-பொருந்திய, ஒழுக்கம்-நல்லொழுக்கம், கொலை பொய் புலால் களவோடு ஒத்த இவை அல-கொலை பொய் புலால் களவோடு பொருந்திய இவையல்லாதனவாகிய, ஓர் நால் இட்டு-ஒரு நான்கையுஞ் சேர்த்து, ஒத்த - பொருந்திய, உறு - மிக்க, பஞ்ச மூலம்-சிறுவிலைக்காலத்தை, தீர்-ஒழிக்கிற, மாரிபோல்-மழைபோல, சிறுபஞ்சமூலம்-சிறுபஞ்சமூலத்தை, சிறந்து - சிறப்பித்து, கூறீர் - (நீங்கள்) சொல்லுங்கள், எ-று.

க-ரை. சிறுவிலைக் காலத்தை யொழிக்கிற மழைபோல, மக்கட்குக்கொலை முதலியவற்றை யொழித்து நல்லொழுக்க முதலியவற்றைத் தருதலால், சிறுபஞ்சமூலத்தை நீங்கள் சிறப்பெடுத்துச் சொல்லுங்கள் என்பதாம்.

வி-ரை. சிறுபஞ்ச மூலமாவன-சிறிய ஐந்துவேர்கள்; அவை:— கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சில் வேர், பெருமல்லிவேர் என்பன, இவ்வைந்தும் மக்களுடற்குப்

பிணிமுதலியவற்றையொழித் திதஞ்செய்வதுபோல, உயிர்க்குறுதியைச் செய்வனவாகிய நல்லொழுக்க முதலிய வைந்தனையுங் கூறுதலால், இந்நூற்குச் சிறுபஞ்சமூலம் என்பது உவமையாகுபெயராயமைந்தது. நல்லொழுக்க முதலியவை வந்தாவன:—நல்லொழுக்கம், கொல்லாமை, பொய்கூறாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை என்பன. கூறீர் என்பதற்கு வினைமுதலாகிய நீங்கள் என்பது வருவிக்கப்பட்டது. ஒழுக்கம் என வாளாகூறினரேனும் கொல்லாமைமுதலியவற்றிற்கேற்ப நல்லொழுக்கமென் றுரைக்கப்பட்டது. (உ)

பொருளுடையான் கண்ணதே போக மறனு
மருளுடையான் கண்ணதே யாகும்-அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியு
முய்யான் பிறர்செவியிற் குய்த்து.

ப-ரை. போகம் - இன்பமானது, பொருள் உடையான் கண்ணதே ஆகும்-பொருளுடையவனிடத்ததே யாகும்; அறம்-அறமும், அருள உடையான் கண்ணதே ஆகும் - அருளுடையவனிடத்ததே யாகும்; அருள் உடையான்-அருளுடையவன் பழி செய்யான்-பழிக்கப்படுங் காரியங்களைச் செய்யான்; பாவம் சேரான்-பாவத்தைத்தருங் காரியங்களைச் சேரான்; புறமொழியும் - புறங்கூற்று மொழிகளையும், பிறர் செவியிற்கு உய்த்து உய்யான்-பிறர் காதுகளிற் செலுத்தான, எ - று.

க-ரை. போகம் முதலிய வைந்தும் பொருளுடையான் முதலிய ஐவரிடத்தவே யாகும் என்பதாம்.

வி-ரை. பொருள் - செல்வம். அருள்-எல்லா வுயிர்களின்மேலுமுளதாகுங் கருணை. அறன் - அறம் என்பதன்போலி. உய்த்தல் - செலுத்தல். (புகுத்தல்) பொருளுடையவன் இன்பமொன்றனையே நுகர்வான்; அருளுடையவன் அறப்பயனைக் கைக்கோடலேயன்றி

பழிபாவங்களைச் செய்யாமையும் புறங்கூறாமையு முடையனுவனென்றதாயிற்று. (ங)

கற்புடைய பெண்ணமிர்து கற்றடங்கி னானமிர்து
நற்புடைய நாடமிர்தந் நாட்டுக்கு-நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிர்து சேவகனு
மாகவே செய்யி னமிர்து.

ப ரை. கற்பு உடைய பெண்-கற்புள்ள பெண்ணானவள், அமிர்து - (தன் கணவனுக்கு) அமிர்தத்தோ டொப்பவளாவள்; கற்று - (அறிவு நூல்களைக்) கற்று, அடங்கினான்-அடங்கினவன், அமிர்து - (உலகத்தார்க்கு) அமிர்தத்தோ டொப்பவனுவன்; நற்புஉடையநாடு - நற்குணமுடையநாடு, அமிர்து - (அந்நாட்டரசனுக்கு) அமிர்தத்தோ டொப்பாகும்; அ நாட்டுக்கு - அந்த நாட்டுக்கு, நற்பு உடைய - நன்மையுள்ள, மேகம் சேர்-மேகத்தின் குணமமைந்த, கொடி-வெற்றிக் கொடியையுடைய, வேந்து - வேந்தனானவன், அமிர்து - அமிர்தத்தோ டொப்பவனுவான்; சேவகனும் - அவ்வேந்தனது சேவகனும், ஆகவே செய்யின்-அவனுக்கு நன்மையா மவற்றையே செய்வனுயின், அமிர்து - அவ்வேந்தனுக்கு அமிர்தத்தோ டொப்பவனுவன் என்பதாம்.

க-ரை. கற்புடைய பெண் முதலானோர் அவள் கணவன் முதலானோர்க்கு அமிர்தத்தை நிகர்ப்பர் என்பதாம்.

வி-ரை. கற்பு - பாதிவிரத்தியம்; அது கணவன் முதலானோரிடத்து நடக்கவேண்டிய முறைமைக ளெல்லாவற்றையுங் கற்றல். கற்பு - தொழிற்பெயர். அடங்கினான் என மேல்வருதலால் கற்று என்பதற்கு அறிவு நூல்களைக்கற்று எனப் பொருளுரைக்கலாயிற்று. நாடு - தேசம். அடங்கினான் என்றது மனமொழி மெய்க ளடங்கப் பெற்றவனை. இவ்வடக்கம் அறிவு நூல்களைக் கல்லாதவனுக் குண்

டாத வருமையென்பது தோன்ற 'கற்றடங்கினன்' என்றார். மேகம்-பொருளாகுபெயர். மேகத்தின் குணம் - கைம்மாறு வேண்டாமை. செய்யின் என்பது செய்தலருமை தோன்ற நின்றது. (௫)

> கல்லாதான் றான்காணு நுட்பமுங் காதிரண்டு
> மில்லாதா ளெக்கழுத்தஞ் செய்தலு-மில்லாதா (௬)
> னெல்லாப் பொருளிலார்க் கீத்தளியா னென்றலு
> நல்லார்கள் கேட்பி னகை.

ப-ரை. கல்லாதான்-(ஆசிரியனிடத்துக் கற்கவேண்டிய முறைப்படியே) கல்லாதவனாகிய ஒருவன், தான்காணும்-தானே ஆராய்ந்து காண்கிற, நுட்பமும் - நுண்பொருளும், காது இரண்டும் இல்லாதாள் - இரண்டுகாது மில்லாதவளாகிய ஒருத்தி, எக்கழுத்தம் செய்தலும் (யான் அழகுடையேனென்று) இறுமாத்தலும், இல்லாதான் - பொருளில்லாதவன், எல்லா பொருள்-இசையாத வோர்பொருளை, இல்லார்க்கு - வறியார்க்கு, ஈத்து - கொடுத்து, அளியான் என்றலும்-அருளுடையானென்று சொல்லப்படுதலும், (ஆகிய இவற்றை) நல்லார்கள் கேட்பின் - நல்லோர்கள் கேட்பாராயின், நகை - சிரித்தற்கேதுவாம், எ-று.

க-ரை. கல்லாதவனொருவன் நுண்பொருள் காண்டல் முதலியவற்றை நல்லோர்கள் கேட்டால் நகைப்பார்கள் என்பதாம்.

வி-ரை. தான்காணு நுட்பமும் என மேல்வருதலால் கல்லாதான் என்பதற்கு, ஆசிரியனிடத்துக் கற்கவேண்டிய முறைப்படியே கல்லாதவனாகிய வொருவன் எனப் பொருள் கூறலாயிற்று. கனவிய குழை முதலியவை யணியப்பெற்று முகத்திற்குப் பேரழகு செய்வது காதாதலால், அவை யில்லாதவள் யான் பேரழகுடையேனென்றல் சிரிப்புக் கிடமாதலால், 'காதிரண்டு மில்லாதா ளெக்க

ழுக்கஞ் செய்தலும்' என்றும், பொருளில்லாதவன் வறியர்க்குக் கொடுத்த அருளுடையா னெனப்படுதல் ஒருவாற்றானு மியைவதன் றாகலான் 'இல்லாதானெல்லாப் பொருளில்லார்க் கீத்தளியானென் றலும்' என்றும், பொருத்த மற்ற இக்காரியங்களை நல்லார்காணின் நகையாதிரார் ஆகலான், 'நல்லார்கள் கேட்பினகை' என்றும் கூறினார். கல்லாதான் றான்காணு நுட்பமும் என்பதற்கு, "கல்லாதா னொட்பங் கழிய நன்றாயினும், கொள்ளா ரறிவுடையார்" என்னுந் திருக்குறளை உதாரணமாகக் கோட லமையும். (ரு)

உடம்பொழிய வேண்டி னுயர்தவ மாற்றீண்
டிடம்பொழிய வேண்டுமே லீகை-மடம்பொழிய
வேண்டி னறிமடம் வேண்டேல் பிறர்மனை
யீண்டி னியையுந் திரு.

ப-ரை. உடம்பு - உடம்பெடுத்தல், ஒழிய வேண்டின்-உன்னை விட்டு நீங்க வேண்டுமாயின், உயர் தவம் ஆற்று - உயர்ந்த தவத்தைச் செய்வாயாக; ஈண்டு - இவ்வுலகத்தில், இடம் - எல்லா விடங்களிலும், பொழிய வேண்டுமேல் - (ஒருவன் தன் புகழினால்) நிறைய வேண்டுவானாயின், ஈகை-ஈதலைச் செய்க; மடம் பொழிய வேண்டின்-மெல்லியலீரம் தனக்குள்ளே நிறையவேண்டினானாயின், அறிமடம் - அறிவின்கண் அடங்கி யொழுகுக; பிறர்மனை வேண்டேல்-பிறர் மனைவியை விரும்பாதொழிக; ஈண்டின் - இவையாவும் பொருந்துமாயின், திரு இயையும்-செல்வம் வந்து தானே நிறையும், எ-று.

க-ரை. பிறவியை யொழிக்க வேண்டுமாயின் தவத்தைச் செய்க; புகழ் வேண்டுமாயின் ஈதலைச்செய்க; வீரம் வேண்டுமாயின் அறிவிலடங்குக; பிறன்மனை நயவாதொழிக; இவை பொருந்துமாயின் செல்வம் தானேவந்து நிரம்பும் என்பதாம்

வி-ரை. வேறுவழியால் ஒழிக்கவொண்ணாத பிறவியையொழித் தற்குரியது தவமாதலால் அதனை 'உயர்தவம்' என்றார். ஆற்றுதல்- செய்தல். "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப் படும்", கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின், "ஆற் றலைப்பட்டவர்க்கு" என்னும் திருக்குறட் செய்யுட்கள் இங்கு உதகரிக்கத்தக்கன. மனையி லுள்ளாளை மனையென்றே கூறினர் இடவாகு பெயரான். அன்றியும், இவளில்லாதது வீடன்று, காடா கும் என்றறிஞர் கூறுதலால் இவளிருத்தல்பற்றி மனையென்று மனைவி மனையும். (சு)

> படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணி
> னிடைதனக்கு நுண்மை வனப்பா-நடைதனக்குக்
> கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகர்க்கு
> வாடாத வன்கண் வனப்பு.

பத-ரை. யானை - யானையானது, படைதனக்கு - சேனைக்கு, வனப்பு ஆகும் - அழகாகும்; நுண்மை-நுட்பமானது, பெண் இடை தனக்கு - பெண்ணின் இடைக்கு, வனப்பு ஆம்-அழகாகும்; கோடா மொழி - ஒருபக்கத்துச் சாயாத சொல்லானது, நடை தனக்கு - ஒருவனது ஒழுக்கத்துக்கு, வனப்பு - அழகாகும்; கோற்கு - செங் கோலுக்கு, அதுவே-அதுவேயழகாகும்; வாடாத வன்கண்-கெடாத வன்கண்மையானது, சேவகர்க்கு - சேவகரா யிருப்பவர்க்கு, வன ப்பு - அழகாகும், எ - று.

க-ரை. யானை முதலியவை படை முதலியவற்றிற்கு அழகு செய்வன வென்பதாம்.

வி-ரை. நால்வகைப் படையுள்ளும் யானைப்படை சிறந்ததாக லான் 'படைதனக்கு யானை வனப்பாகும்' என்றும், இடை சிறுத் திருத்தல் மாதர்க்கழகாதலால் 'பெண்ணி னிடைதனக்கு நுண்மை

வனப்பாம்' என்றும், பக்ஷபாதமின்றிப் பேசுதல் ஒருவனது ஒழுக்கத்துக் கழகாதலால், 'நடைதனக்குக் கோடா மொழிவனப்பு' என்றும், செங்கோலுக்கும் அதுவே யாதலால் 'கோற்கதுவே' என்றும், சேவகர்க்கு ஒருகாலத்துங் குறையாத வீரத்தன்மையே யழகாதலால் 'சேவகர்க்கு வாடாத வன்கண் வனப்பு' என்றும் கூறினர் (எ)

பற்றினான் பற்றற்றா னூற்றவசி யெப்பொருளு
முற்றினா னாகு முதல்வனூற் - பற்றினாற்
பாத்துண்பான் பார்ப்பான் பழியுணர்வான் சான்றவன்
காத்துண்பான் காணான் பிணி.

ப-ரை. பற்று அற்றான் - பற்றற்றவனாகிய இறைவனாற் சொல்லப்பட்ட, நூல் - நூற்பொருளை, பற்றினான் - பற்றியொழுகுவோன், தவசி - தவசியாவான், எப்பொருளும் - எல்லாப் பொருள்களையும், முற்றினான் - முற்றவுணர்ந்தவன், முதல்வன் ஆகும் - முதல்வனாவான்; நூல் பற்றினால் - நூல்களின் பொருள்களைப் பற்றுதலால், பாத்து உண்பான் - பகுத்துண்பவன், பார்ப்பான் - பார்ப்பானாவான், பழி உணர்வான் - பழிக்கேதுவான காரியங்களை யறிந்து விலக்குவோன், சான்றவன் - சான்றோனாவான்; காத்து - (தான் உண்ணத்தகாதவற்றை யுண்ணாமல்) தடுத்து, உண்பான் - (உண்ணத் தகுவனவற்றை) உண்பவன், பிணி காணான் - நோய்களைக் காணாதவனாவான், எ-று.

க-ரை. பற்றற்றனது நூலைப் பற்றினவன் தவசியாவான்; எல்லாமறிந்தவன் முதல்வனாவான்; பகுத்துண்பவன் பார்ப்பானாவான்; பழியறிவோன் சான்றோனாவான், காத்துண்பவன் நோய்காணாதவனாவான் என்பதாம்.

வி-ரை. பற்றற்றான் என்றது முதற்கடவுளை; இவன் இயல்பாகவே பற்றற்றிருப்பவனாதலால் 'பற்றற்றான்' என்றார். இதனை, "பற்றுக பற்றற்றான் பற்றினையப்பற்றைப், பற்றுக பற்றுவிடற்கு"

என்னுந் திருக்குறளானு முணர்க. பற்றற்றானூல் என்றது முதனூலாகிய வேதத்தை. தவசி - தவஞ்செய்வோன். முதல்வன் - தலைமைப்பாடுடையவன். முதல்வனூற்பற்று - வேதார்த்தத்தில் சிரத்தை. பத்தி என்பாலது பாத்து என மருவிற்று. சான்றவன் - கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்தவன். காத்தல் - தடுத்தல். (அ)

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
யெண்வனப் பித்துணையா மென்றுரைத்தல் - பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு.

ப-ரை கண்வனப்பு - கண்ணுக்கழகாவது, கண்ணோட்டம் - பிறர்மேல் கண்ணோடுதலாம்; கால்வனப்பு - காலுக்கழகாவது, செல்லாமை - பிறரிடத்தில் இரக்கப்போகாமையாம், எண்வனப்பு - ஆலோசனைக்கழகாவது, இத்துணையாம் என்று உரைத்தல் - இந்தக்காரியம் இவ்வளவினதென்று துணிந்துரைத்தலாம், பண்வனப்பு - பண்ணுக்கழகாவது, கேட்டார் நன்று என்றல் - கேட்டவர் நன்றென்று சொல்லுதலாம், கிளர் - படைகளோடுகூடி விளங்குகிற, வேந்தன் வனப்பு - அரசனுக்கழகாவது, தன் நாடு - தனது நாட்டை, வாட்டான் - வருத்தான், நன்று - இது அழகிது, என்றல் - என்று சொல்லுதற் குரியனாதலாம் எ-று

க-ரை கண்ணுக்குக் கண்ணோட்டமும், காலுக்கு இரக்கச் செல்லாமையும், சூழ்ச்சிக்குத் துணிந்துரைத்தலும் பண்ணுக்குக் கேட்டோர் நன்றென்றலும், அரசனுக்குத் தன்னாட்டிலுள்ளாரை வருத்தானென்று யாவராலும் புகழப்படுதலும் அழகென்பதாம்.

வி-ரை கண்ணோட்டம் - கண்ணோட்டஞ் செய்தல் இதனை வடநூலார் தாக்ஷிண்யம் என்பர். செல்லாமை - நடவாமை, இது இரக்கச் செல்லாமை யென்றிருக்கும் பொருள்பட்டது இரக்க

செல்லாமையால் காலுக் கழுகுண்டாய விடத்து காலையுடையவனுக் கழுகென்பது சொல்லாமலே யமைந்தது. சூழ்ச்சி முடிவு காண்டற்குச் செய்வதாதலாலும், முடிவுகண்டு துணிந்துரையா விடத்து அச் சூழ்ச்சிக்குப் பயனில்லை யாதலாலும் 'எண்ணவனைப் பித்தனையா மென் றுரைத்தல்' என்றார். பண் - இந்தளம், நட்டபாடை முதலியன; இராகம் எனினுமாம். இராகங்களாவன - நாட்டை, மத்தியமாவதி, தோடி, பைரவி, காம்போதி முதலியன. வாட்டுதல் - வருத்துதல்

கொன்றுண்பா னாச்சாங் கொடுங்கரிப்போ வானாச்சா
நன்றுணர்வார் முன்கல்லா னாவஞ்சா-மொன்றானுங்
கண்டுழி நாச்சாங் கடவான் குடிப்பிறந்தா
னுண்டுழி நாச்சா முணர்ந்து.

ப-ரை. கொன்று - ஓருயிரைக் கொன்று, உண்பான் - அதன் தசையை யுண்பவனுடைய, நா - நாவானது, சாம் - அற்றுவிழும்; கொடு - கொடுமையாகிய, கரி - சாக்ஷிசொல்ல, போவான - போகிறவனுடைய, நா - நாவானது, சாம் - அற்றுவிழும்; நன்று உணர்வார்முன் - மிகவுங் கற்றறிந்தவர்க்கெதிரே, கல்லான் - கல்லாதவனுடைய, நாவும் - நாவும், சாம் - அடங்கும்; ஒன்றானுங் கண்டுழி - கடன்கேட்க வந்தவனைக் கடன்வாங்கினவன் கண்டபோது, நா - அவனது நாவும், சாம் - அடங்கும்; குடிப்பிறந்தான் - குடிப்பிறந்தானொருவன். கடனான - ஒருவர்செய்த நன்றியை மறவாதவனைதான், உண்டுழி - நன்றி செய்தவனிடத்து ஒரு தவறுண்டாய விடத்து, உணர்ந்து - (அவன்செய்த நன்றியை) அறிந்து, நா-குடிப் பிறந்தவனது நாவானது. சாம்-அந்நன்றி செய்தவனது குற்றத்தை யெடுத்துச் சொல்லுதற்கஞ்சி அடங்கும், எ-று.

க-ரை. புலாலுண்போன் முதலியோருடைய நாக்கள் அடங்கு மென்பதாம்.

வி-ரை. கொன்று என்பதற்குச் செயப்படுபொருளாகிய வுயிர் வருவித் துரைக்கப்பட்டது. கொன்றுண்பா னுச்சாம் என்றது கொன்றுண்பவனது நாவானது காலதாதுவரா லறுபட்டுவிழும் என்றபடி. கொடுங்கரி - பொய்ச்சாட்சி. போவான் - நியாயஸ்தலத்துக்குப்போவோன். குடி-இருமாபுந் தூயவாகப்பெற்ற வுயர்குடி. நன்று-நன்மை யெனினுமாம். கண்டவழி உண்டவழி யென்பன கண்டுழி உண்டுழியென விகாரம் பெற்றன. (க0)

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்-வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.

ப-ரை. சிலம்பிக்கு - சிலந்திப்பூச்சிக்கு, தன் சினை-அதன் முட்டையே, கூற்றம் - யமனாகும்; விலங்கிற்கு - மிருகங்களுக்கு, நீள் கோடு - நீண்ட கொம்புகளே, கூற்றம்-யமனாகும்; வலம்படா - வெற்றியுண்டாகாத, மாவிற்கு - கவரிமாவிற்கு, மயிர்தான் - அதன் மயிரே, கூற்றம் - யமனாகும்; ஞெண்டிற்கு - நண்டுக்கு, தன் பார்ப்பு ஆம் - தன் குஞ்சுகளே யமனாகும்; நாவிற்கு - ஒருவனது நாவுக்கு, நன்று அல் வசை - நன்மையல்லாத வசை கூறுதல், (கூற்றம்)-யமனாகும், எ - று.

க-ரை. சிலம்பிக்கு அதன் முட்டையும், மிருகங்களுக்கு அவற்றின் நீண்ட கொம்புகளும், கவரிமாவிற்கு அதன் மயிரும், நண்டுக்கு அதன் குஞ்சுகளும், ஒருவனது நாவுக்குப் பிறரை வசை கூறுதலும் யமனாகு மெனபதாம்.

வி-ரை. சிலந்திப்பூச்சி முட்டையிட்டவுடன் தானழிதலால் 'சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்' என்றும், மிருகங்களுக்கு நீண்ட கொம்பிருந்தால் அது மரங்கள் முதலியவற்றில் குத்தி முறியப்பெ

ற்று வருந்துமாதலாலும், அக்கொம்பு எவர்மீதாயினும் பட்டு அபாயம் விளைக்குமென்று அறுக்கப்படு மாதலாலும் 'நீள்கோடு விலங்கிற்குக் கூற்றம்' என்றும், கவரிமாவானது முட்செடி முதலியவற்றிற் பட்டுத் தன் மயிரொன் றுதிர்ந்தால் அது தன்னுயிரை விட்டுவிடுமாதலால் 'மயிர்தான் வலம்படா மாவிற்குக் கூற்றம்' என்றும், நண்டு தன் குஞ்சுகள் வெளிப்பட்டவுடனே இறந்துபோமாதலால் 'ஞெண்டிற்குத் தன்பார்ப்பு' என்றும், பிறர்பழி கூறுவோனனையும் பயன் இம்மையிற் பலராலும் இகழப்படுதலும், மறுமையில் எரிவாய் நிரயமுமேயாதலாலும் 'நாவிற்கு நன்றல் வசை' என்றும் கூறினார். நீள்கோடு விலங்கிற்குக் கூற்றம் என்றமையால் கொம்புகள் மிகமாயிருத்தலே நன்மையென்றதாயிற்று. விலங்கு - எருது முதலாயின. (கக)

நாணிலான் சால்பு நடையிலான் நன்னோன்பு
ஊணிலான் செய்யு முதாரதையு - சேணிலான்
சேவகமுஞ் செந்தமிழ்த் தேற்றான் கவிசெயலு
நாவகமே நாடி னகை.

ப-ரை. நாண் இல்லான் சால்பும்-நாணமில்லாதவனது அமைதியும், நடையிலான் நல் நோன்பும் - நல்லொழுக்க மில்லாதவனது நல்ல நோன்பும், ஊண் இல்லான் செய்யும் உதாரதையும்-தனக்கே உணவுபொருளில்லாதவன் செய்கிற உதாரத்துவமும், சேண் இல்லான் சேவகமும் - வலியில்லாதவனது சேவகமும், செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்-செந்தமிழ்த்தேர்ச்சியில்லாதவன கவிசெய்தலும், (ஆகிய இவைவந்தும்) நாவகமே நாடின்-நாவினிடத்துக் கொண்டாராயின், நகை - சிரிப்புக்கிடமாம், எ - று.

க-ரை. நாணமில்லாதவன் அமைதி, நன்னடையில்லாதவனது நோன்பு, உண்பொருளில்லாதவனது உதாரத்துவம், வலியில்லாதவனது சேவகம், செந்தமிழ்த் தேர்ச்சியில்லாதவன் கவிபாடுதல் என்னு மிவ்வைந்தும் பயனில வென்பதாம்.

வி-ரை. "அன்பு நாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ டைந்து சால்பூன்றிய தூண்" என்ற திருக்குறளின்படியே, நாணில் வழி சால்பு நிலைபெறாமையின் 'நாணிலான் சால்பும்' என்றும், நல் லொழுக்கமில்லாதவனது நோன்பு முற்றப்பெறாதாதலால் 'நடையி லானன்னோன்பும்' என்றும், தனக்கே யுண்பொருளில்லாதவன் பிறர்க்குபகரித்தல் முடியாதாதலால் 'ஊணிலான் செய்யு முதாரதை யும்' என்றும், உடல்வலி மனவலிகளில்லாதவன் சேவகனாயிருத்தல் தகாதாதலால் 'எணிலான் சேவகமும்' என்றும், செந்தமிழ்ப்பயிற்சி யும் தேர்ச்சியுமில்லாதவன் கவிசெய்யின், அது கற்றுவல்ல அறிஞ ரால் பழிக்கப்படுதலேயன்றி, அவர்க்கு நகையையும் விளைக்குமாத லால் 'செந்தமிழ்தேற்றான் கவிசெயலும்' என்றும் கூறினார். உம்மைக ளைந்தும் எண்ணுப்பொருளில் வருதலையால் எண்ணும்மைகள். நாவகமே நாடினசை யென்பசனைச்சால்பு முதலியவைந்தனீற்றிலும் சேர்த்துரைத்துக்கொள்க. நோன்பு - விரதம், தவம எனினுமாம். உதாரத்துவம் - பெருங்கொடைத்தன்மை. தேற்றாதான் என்பது தன்வினையில் வந்தது. (கஉ)

கோறலு நஞ்சூனைத் துய்த்தல் கொடுநஞ்சு
வேறலு நஞ்சுமா றல்லானைத்-தேறினா
னீடாங்கு செய்தலு நஞ்சா மிளங்கிளையை
நாடாதே நீதுரையு நஞ்சு.

ப-ரை. கோறலும் - ஒருயிரைக் கொல்லுதலும், நஞ்சு - ஒரு வனுக்கு நஞ்சுபோலும்; ஊனை துய்த்தல் - பிறிதொன்றின் தசை யைத் தின்னுதலும், கொடு நஞ்சு - கொடிய நஞ்சுபோலும்; மாறு அல்லானை - தனக்கெதிராகாதவனை, வேறலும் - எதிர்த்து வெல்லு தலும், நஞ்சு - நஞ்சுபோலும்; தேறினான் - ஒரு கருமத்துக்குரியவ னென் றாராய்ந்து தெளியப்பட்டவனாகிய வொருவன், நீடாங்கு செய்தலும் - (அக்கருமத்தின்மேல்விடாமல்) கால நீட்டிப்புச் செய்

தலும், நஞ்சு ஆம் - நஞ்சுபோலும்; இளங்கிளையை - இளையசுற்றத்தாரை, நாடாமை - ஆராயாமலே, தீது உரையும் - தீங்குரைத்தலும். நஞ்சு - நஞ்சுபோலுவர், எ-று.

க-ரை. கொலைசெய்தலும், புலாலுண்டலும், நிகரில்லாதவனை யெதிர்த்து வெல்லுதலும், ஆராய்ந்து அறிந்த ஒருவனை வினைமேற் செலுத்தாது காலநீட்டிச் செய்தலும், இளங்கிளைஞரை ஆராயாது தீங்குசொல்லுதலும் ஆகிய இவ்வைந்தும் ஒருவனை நஞ்சுபோலத் துன்பஞ்செய்யு மென்பதாம்.

வி-ரை. துய்த்தல் என்பதனீற்றில் எண்ணும்மை கூட்டியுரைக்கப்பட்டது. கோறல் என்பதற்குப் பகுதி கொல்; வேறல் என்பதற்குப் பகுதி வெல். இளங்கிளை - புதியவுறவினர். தீதுரை என்பதில் உரை முதனிலைத் தொழிற்பெயர். கோறல் முதலிய வைந்தும் நஞ்சுபோல ஒருவனுயிர்க்கூறு கண் செய்வனவாதலால் இவற்றைச் செய்யலாகாதென்பது இசையெச்சத்தாற் போந்தபொருள். தீதுரையாவது மனம் வருந்தும்படியான பழிமொழிகளை யெடுத்துரைத்தல். நான்காவது நஞ்சு நீங்கலாக ஏனைய நான்கும் நஞ்சுப் பெயர்ப் பயனிலை. (கசு)

இடரின்னா நட்டார்க ணீயாமை யின்னா
தொடர்பின்னா நள்ளார்கட் டூயார்ப் - படர்பின்னா
கண்ட லவிர்பூங் கதுப்பினா யின்னாதே
கொண்ட விரதங் குறைவு.

ப-ரை. நட்டார்கள் - நட்டாரிடத்து, இடர் - (கண்ட) துன்பம், இன்னா - தீயது; (நட்டார்கள்)-நட்டாரிடத்து, ஈயாமை இன்னா-கொடாமை தீயது; நள்ளார்கள்-மனப்பொருத்த மில்லாதவரிடத்து, தொடர்பு இன்னா - நட்புக் கோடல் தீயது; தூயார் - மனந் தூயாரை, படர்பு - விட்டு நீங்குதல், இன்னா - தீயது, கொண்ட விரதம் குறைவு - ஒருவனெடுத்துக்கொண்ட விரதத்தைச் செய்து முடிக்காமல் குறையாய் விடுதல், இன்னாதே-தீமையைத் தருவதேயாம், எ-று.

க-ரை. நட்டார்படத்திற் றுன்பமிருக்கக் காண்டலும், அவர்கட் கீயாமையும், பகைவரை நட்டலும், தாயாரை நீங்குதலும், எடுத்த விரதத்தை முடிக்காமையும் ஆகிய இவ்வைந்தும் தீயவா மென்பதாம்.

வி-ரை. நண்பினர் துன்புறக் கண்டவன் அத்துன்பத்தை யொழிக்க முயலாவிடின் பெரும்பாவமாதலால் 'இடரின்றே நட்டார்கண்' என்றும், அவர்க்கீயாமை உலோபகுணமாமாகலால், 'ஈயாமையின்றே' என்றும், பகைவரை நட்புகொள்ளல் அடாயகரமான பெருங் குற்றமாதலால் 'தொடர்பின்றே நள்ளார்கண்' என்றும். பெரியோரைக் கைவிடுதல் பெருந் துன்பத்துக் கேதுவாதலால் 'தாயார்ப் படர்பின்றே' என்றும். விரதக் குறைவு சாதப்பயனற் றாமையால் 'இன்றுந்தே கொண்ட விரதங் குறைவு' என்றுங் கூறினர். 'கண்டலவிர்பூங் கதுப்பினாய்' என்றது, மகடூஉ முன்னிலை; அதற்குத் தாழை மடலின் மணநாகமழுங் கூந்தலை யுடையாளே என்பது பொருள். கண்டல் - தாழை, கதுப்பு - மென்மயிர். (கச)

கொண்டான் வழியொழுகல் பெண்மகன் றந்தைக்குத்
தண்டான் வழியொழுக றன்கிளையஃ - தண்டாதே
வேல்வழி வெம்முனை வீடாது மன்னனு
நோல்வழி வாழ்தல் குணம்.

ப-ரை. கொண்டான்வழி தன்னைக்கொண்ட கணவன் சொல் வழியே, ஒழுகல் - தவறாது நடத்தல், பெண் - பெண் குணமாகும்; தந்தைக்கு - தந்தைக்கு, தண்டான் - இடையறாதே, வழி - அவன் சொல் வழியே, ஒழுகல் - தவறாது நடத்தல், மகன் - மகன் குணமாகும்; அஃது - அவன்போலவே வழியொழுகுதல், தன்கிளை - தன்கிளையின் குணமாகும்; தண்டாதே - பகைவரோடு கூடாதே, வேல்வழி - அவரை வெல்லும் வழியால், வீடாது - இடைவிடாமல் வாழ்தல், வெம்முனை -

அரசனது வெம்முனையின்கட் போயிருந்தார் குணமாகும்; மன்கோல் வழி வாழ்தல் - அவ்வரசனது கோல்வழியே வாழ்தல், நாடு குணம் - நாட்டின் குணமாகும், எ - று.

கு-ரை. பெண் கணவன் சொல்வழியே யொழுகுதலும், மகன் தந்தையின் சொல்வழியே யொழுகுதலும், கிளை அவன்போலவே வழியொழுகுதலும், வெம்முனையின்கட் போயிருந்தார் பகைவரோடு சேராதே அவரை வெல்லும வழியால் இடைவிடாமல் வாழ்தலும், நாடு அரசனது கோல்வழியே வாழ்தலும், அவ்வவர்க்குரிய குணங்களாகும் என்பதாம்.

வி-ரை. ஒழுகுதல்-நடத்தல். தண்டுதல்-தடைபடல். அண்டுதல் - கூடுதல் வெம்முனை - கொடியபோர். வீடுதல்-ஆடையறுதல். மன - அரசன். குணம் என்பதனைப் பெண்முதலிய வைவர்க்குங் கூட்டி யுரைத்துக்கொள்க. (கரு)

11 பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
யிழைத்ததீங் கெண்ணி யிருத்த - லிழைத்த
பகைகெட வாழ்வதும் பலபொருளார் நல்லார்
நகைகெட வாழ்வது நன்று.

11-ரை. பிழைத்தல்-(தனக்குப் பிறனொருவன் செய்த) பிழையை, பொறுத்தல் - பொறுத்துக்கொள்ளுதல், பெருமை - பெருமையாகும்; இழைத்த - பிறர்செய்த, தீங்கு - தீமையை, எண்ணியிருத்தல் - நினைத்துக்கொண்டே யிருத்தல், சிறுமை - சிறுமையாகும்; இழைத்த - தான்செய்த, பகை - பிழைகள், கெட-கெடும்படி, வாழ்தலும் - வாழ்வதும், பலபொருளார் - பலபொருள்களையு முதவினோரும், நல்லார் - நல்லோரும், நகை - இகழ்ந்து நகைத்தல், கெட - இல்லையாம்படி, வாழ்வதும்-வாழ்தலும், நன்று-நன்மையாம், எ - று.

க-ரை. தனக்குப் பிறன்செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளுதல் பெருமையாகும்; பிறன் செய்த தீமையை நினைத்துக்கொண்டே யிருத்தல் சிறுமையாகும்; தான்செய்த பிழைகள் கெடும்படி வாழ்தலும், உதவிசெய்தவரும் நல்லோரும் நகைத்தல் இல்லையாம்படி வாழ்தலும் நன்மையாம் என்பதாம்.

வி-ரை. பிழைத்தல் - பிழைசெய்தல். எண்ணியிருத்தல் - மறவாதிருத்தல். இழைத்தல் - செய்தல். நகை - நகைத்தல் (தொழிற்பெயர்). பெருமை சிறுமை யென்பன பண்பாகுபெயர்களாய் அவற்றை யுடையாரை யுணர்த்தின. பின்பு அவர்கள் குணங்களை யுணர்த்தினமையால் முதலாகுபெயர்களுமாம். ஆதலால் இவை இருமடியாகுபெயர்கள். (௧௬)

கதநன்று சான்றாண்மை தீது கழிய
மதநன்று மாண்பில்லார் முன்னர்—விதநன்றாற்
கோய்வாயிற் கீழுயிர்க்கீ துற்றுக் குறைத்தெழுந்த
நாய்வாயு ளல்ல தசை.

ப-ரை. மாண்பு இல்லார் முன்னர் கதம் நன்று - நற்குணமில்லாதார் முன்பு கோவம் நன்று; சான்றாண்மை தீது-சான்றாண்மை தீதாகும்; கழியமதம் நன்று - மிக்க வலிசெய்தல் நன்று; கோயவாயின்-கோய்போலும் வாயையுடைய, கீழ் உயிர்க்கு-கீழ்மக்களுக்கு, ஈ - கொடுக்கிற, துற்று - உணவு, குறைத்து எழுந்த - குறைத்துக்கொண்டே எழுந்த, நாய் வாயுள் - நாயின்வாயிற் கொடுத்த, நல்ல தசை விதம் நன்று - நல்ல மாமிச விதத்திலும் நன்மையாம், எ-று.

க-ரை. நற்குண மில்லாதவர்க் கெதிரில் கோவமே நன்று; சான்றாண்மை தீது; மிக்கவலிசெய்தல் நன்று; கீழ்மக்கட் கீயுமுணவு நாய்வாயிற் கொடுத்த தசைக்கு நிகராகும் என்பதாம்.

வி-ரை. கதம் - கோபம். மதம் - வலி. சான்றாண்மை - சால்புடைமை. கழிய - கழியென்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினையெச்சம். மாண்பு - நற்குணம். கோய் - கள்முகக்கும் பாத்திரம். கீழுயிர் என்பதில் உயிர் மக்களுயிரை யுணர்த்திற்று. குறைதல் - சுருங்குதல். (கஎ)

நட்டாரை யாக்கிப் பகைபணித்து வையெயிற்றுப்
பட்டா ரகலல்குலார்ப் படிந்—தொட்டித்
தொடங்கினா ரில்லகத் தன்பிற் றுறவா
வுடம்பினா னாய பயன்.

ப-ரை. நட்டாரை ஆக்கி - தம்மோடு நட்புச் செய்தவரைச் செல்வராக்கி, பகை பணித்து-பகைவரைத் தாழ்த்தி, வை - கூர்மை பொருந்திய, எயிறு - பல்லினையுடைய, பட்டு ஆர்-பட்டாடை யணியப் பெற்ற, அகல் அல்குலார் - அகன்ற அல்குலையுடைய மாதரை, படிந்து - சேர்ந்து, ஒட்டி - தொடாவுற்று, தொடங்கினார் (அகத்து)-முறைபயின்றோரிடத்தும், இல் அகத்து - தாம்பிறந்த குடியிற் பிறந்தவரிடத்தும், அன்பின் - அன்பினால், துறவா-நீங்காமையும் ஆகிய இவ்வைந்தும், உடம்பினான் ஆய-இந்த அரிதான மக்கட் பிறப்புப் பிறந்ததனாலுண்டாகிய, பயன் - பயன்களாம், எ - று.

க-ரை. நட்டாரை உயர்த்தலும், பகைவரைத் தாழ்த்தலும், மாதரைச் சேர்ந்து உறவாதலும், அவரிடத்தும் தாம் பிறந்த குடியிற் பிறந்தவரிடத்தும் அன்புடைமையும் ஆகிய இவ்வைந்தும் உடம்பெடுத்ததனாற் பெற்ற பயன்களாம் என்பதாம்.

வி-ரை. ஆக்குதல் - செல்வத்தா னுயரச்செய்தல். பணித்தல்-தாழ்த்தல். அன்பின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது. துறவாமை யென்பது துறவா என ஈறு தொகுத்தலாயிற்று. உடம்பு என வாளாகூறினாரேனும், நட்டா

ரை யாக்கல் முதலிய குணங்கள் பிறவுடம்புகட்கின்மையால் ப
ருடம்பு என்று பொருள் கூறலாயிற்று. (1

பொய்யாமை பொன்பெறினுங் கள்ளாமை மெல்லியலார்
வையாமை வார்குழலார் நச்சினு—நையாமை
யோர்த்துடம்பு பேருமென் றூனவா யுண்ணுனேற்
பேர்த்துடம்பு கோட லரிது.

ப-ரை. பொன் பெறினும் - பொன் பெற்றுலுயினும், பொ
யாமை - பொய் சொல்லாமையும்; கள்ளாமை - (பிறர்பொருளை
களவு செய்யாமையும்; மெல் லியலார் - எளியாரை, வையாமை
வையாமையும்; வார் குழலார் - மாதர், நச்சினும் - விரும்பினுலு
நையாமை - மனந்தளராமையும்; உடம்பு பேரும் என்று ஓர்த்து
தன்னுடம்பு மெலியுமென்று அறிந்து, ஊன் - பிறிதோருடம்பி
தசையை, அவாய் - விரும்பி, உண்ணுனேல் - ஒருவன் உண்ணு
யின், (அவன்) பேர்த்து - மீட்டும், உடம்பு கோடல் - பிறிதோரு
ம்பைக் கொள்ளுதல், அரிது - இல்லை, எ-று.

க-ரை. பொய் சொல்லாமையும், பிறர்பொருளைக் கள்ளாமை
யும், எளியாரை வையாமையும், பிறமாதர் விரும்பினும் அவனை
தான் விரும்பாமையும், உடம்பு மெலியுமென்று ஊன் உண்ணுமை
யும், ஒருவன் உடையனுயின், அவன் வேறோருடம்பெடுக்கமா
டான் என்பதாம்.

வி-ரை. பொன்பெறினும் பொய்யாமை யென்றதனுல் அ
னது சிறப்பு பெறப்பட்டது. கள்ளல்-பிறர்பொருளை வஞ்சித்து
கொள்ளல். மெல்லியலார் - பொருளில்லாமையால் மெலிந்திருப
வர். வார்குழலார் - நீண்ட கூந்தலையுடையவர். நச்சல் - விரும்புத
நைதல் - மனந்தளர்தல். ஓர்ந்து என்பது ஓர்த்து என வலித்த
பெற்றது. உண்ணுனேல் என்பதில் ஏல் எனின் என்பதன் மரு

பேர்த்துடம்பு கோடலரிது என்றது இனிப்பிறவான் என்றபடி. கோடல்-கொள்ளுதல். "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது", "அறவாழி யந்தணன் றாள் சேர்ந்தார்க் கல்லாற், பிறவாழி நீந்த லரிது" என்னுந் திருக்குறட் செய்யுட்களில் அரிது என்பது இன்மைப் பொருள் தந்ததுபோல ஈண்டும் அரிது இன்மைப் பொருள்தந்து நின்றது. (கக)

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்காற்
பூதரே முன்பொருள் செய்யாதா—ராதரே
துன்பமி லேம்பண்டி யாமே வனப்புடையே
மென்பா ரிருகா லெருது.

ப-ரை. கற்றவர் - அறிவு நூல்களைக் கற்றவர், தேவரே - தேவரை யொப்பாரே யாவர்; கல்லாதார் - அவற்றைக் கல்லாதவரைப்பற்றி, தேருங்கால்-ஆராய்ந்துபார்க்குமிடத்து, பூதரே - பசாசுகளோ டொப்பவரேயாவர்; முன் - முதுமைப் பருவம் வருவதற்கு முன்பே, பொருள் செய்யாதார் - பொருளைத் தேடி வைத்துக் கொள்ளாதவர், ஆதரே-அறிவிலாரேயாவர்; பண்டு-முன்னே, யாம்-யாம் (செல்வ முடையோமா யிருந்ததனால்), துன்பம் இலேம்-துன்ப முடையே மல்லேம், வனப்பு உடையேம் - அழகுடையேம், என்பார் - என்று சொல்லுவோர், இருகால் எருது - இருகால் மாடுகளுக்கு நிகராவர், எ-று.

க-ரை. அறிவு நூல்களைக் கற்றவர் தேவரை நிகர்ப்பார்; கல்லாதவர் பிசாசுகளை நிகர்ப்பார்; முதுமைப்பருவம் வருதற்கு முன்பே பொருள்தேடி வைத்துக்கொள்ளாதவர் அறிவிலாதவரே யாவர்; யாம் முன்னே செல்வரா யிருந்தமையால் துன்பமிலேம், அழகுளேம் என்பவர் இரண்டுகால் மாடுகளை நிகர்ப்பார் என்பதாம்.

வி-ரை. தேவரே என்பதில் ஏகாரம் தேற்றம், அன்றிப் பிரிநிலை யெனினுமாம்; பூதரே, ஆதரே என்பனவு மன்ன. தேர்தல்

ஆராய்தல். முன்பொருள் செய்தலாவது - உடம்பு தளர்ந்து அங்கு மிங்கும் ஓடிப் பொருள்தேட இயலாத முதுமைப் பருவம் வருதற்கு முன்பே, அப்பருவத்தி லுதவும்பொருட்டு இளமைப் பருவத்திற்று னே பொருளீட்டி வைத்துக்கொள்ளுதல். நாற்காலெருதிற் பிரித் தற்கு 'இருகா லெருது' என்றார். (உ0)

கள்ளான்சூ தென்றுங் கழுமான் கரியாரை
நள்ளா னுயிரிரங்க நாவாடான்—நள்ளானூ
னூண்மறுத்துக் கொள்ளானே லூனுடம் பெஞ்ஞான்றுந்
தான்மறுத்துக் கொள்ளான் றளர்ந்து.

ப-ரை. கள்ளான் - (பிறர் பொருளைக்) களவு செய்யாதவனாய்ச் சூது - சூதாட்டத்தில், என்றும் - எக்காலத்தும், கழுமான்-பொருந் சாதவனாய், கரியாரை - கீழ்மக்களை, நள்ளான் - நட்புக்கொள்ளாதவ னாய், உயிர் இரங்க-பிறவுயிர்களிரங்கும்படி, நா ஆடா நாவாடாதவ னாய், ஊண் நள்ளான் ஆய் ஊனுணவைப் பொருந்தாதவனாய் மறு த்து-தடுத்து, கொள்ளானேல் ஊனுணவை ஒருவன் கொள்ளா திருப்பானாயின், தான் - அவனானவன், மறுத்து - மீட்டும், ஊன் உட ம்பு-தசையோடு கூடிய வுடம்பை, எஞ்ஞான்றும் - எந்நாளும், தளர ந்து - ஒழுக்கம் தளர்ந்து, கொள்ளான் - எடுக்கமாட்டான், எ-று.

க-ரை. கள்ளாமலும், சூதாடாமலும், கீழ்மக்களை நட்புக்கொள ளாமலும், பிறர் மனம் வருந்தும்படி வன்சொற் சொல்லாமலும், ஊனு ண்ணாமலும், ஒருவனிருப்பானாயின், அவன் மீட்டும் பிறக்கமாட டான் என்பதாம்.

வி-ரை. கள்ளல் - திருடல். கழுமல் - பற்றல். கரியார் - தீ டர். இரங்கல் - வருந்தல். நாவாடல் - பேசுதல். உயிர் என்றது மக்களுயிரை, இரங்குதற்குரியது அதுவே யாதலான். (உக

பூவாது காய்க்கு மரமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார்—தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்
குரையாமை செல்லு முணர்வு.

ப-ரை. பூவாது காய்க்கும் - பூவாமலே காய்க்கின்ற, மரமும் உள - மரங்களுமுள்ளன; நன்று அறிவார் - நன்மையை யறிபவர், மூவாது மூத்தவர் - ஆண்டுகளால் மூவாராயினும் அறிவினால் மூத்தவரோடொப்பர்; நூல் வல்லார் - நூல்களைக் கற்றுவல்லவர் (அப்பெற்றியரேயாவர்); தாவா - கெடாதிருக்க, விதையாமை - பாத்திகட்டி விதைக்காமலே, நாறுவ - முளைப்பனவாகிய, வித்து உள - வித்து முளவாயிருக்கின்றன; மேதைக்கு - அறிவுடையவனுக்கு, உரையாமை - பிறர் அறிவியாமலே, உணர்வு செல்லும் - அறிவுதோன்றும், எ - று.

க-ரை. பூவாமற் காய்க்குமரம்போல அறிவுடையார் ஆண்டுகளால் மூவாராயினும் அறிவினால் மூத்தவரேயாவர்; நூல்களைக் கற்று வல்லாரும் அத்தன்மையரே; பாத்திகட்டி விதைக்காமலே முளைக்கிற வித்துமுண்டு; அதுபோல, அறிவுடையார்க்குப் பிறர் அறிவியாமலே அறிவு தானேதோன்றும் என்பதாம்.

வி-ரை. பூவாது காய்க்குமரம் - பலா முதலாயின. மூவாது, மூத்தவர் என்பவற்றிற்குப் பகுதி மூ. விதையாமை நாறுவித்து என்றது பாத்திகட்டி விதைக்காமல் தானே முளைக்கும் வித்து; அவை பறவையெச்சம் முதலாயினவற்று ளுள்ள வித்து. மேதை-பேரறிவு; அது அதனையுடையானையுணர்த்தினமையால்பண்பாகுபெயர். (உஉ)

பூத்தாலுங் காயா மரமுமுள நன்றறியார்
மூத்தாலு மூவார்நூ றேற்றாதார்—பாத்திப்

புதைத்தாலு நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு.

ப-ரை. பூத்தாலும்-பூத்திருந்தனவாயினும், காயா-காய்க்கா, மரமும் உள - மரங்களுமுண்டு; (அதுபோல) நன்று அறியார் - நன்மையறியாதவர், மூத்தாலும்-ஆண்டுகளால் முதிர்ந்தாலும், மூவார் அறிவினால் முதிரார்; நூல் தேற்றாதார் - அறிவு நூல்களைக் கற்று தெளியாதவர் (அத்தன்மையரேயாவர்); பாத்தி புதைத்தாலும் பாத்திகட்டிப் புதைத்தாலும், நாறாத வித்து உள - முளைக்கா வித்துமுண்டு; (அதுபோல) பேதைக்கு - அறிவிலானுக்கு, உரை தாலும் - பிறர் சொன்னாலும், உணர்வு செல்லாது - அறிவு தோ றாது, எ-று.

க-ரை. பூத்தாலுங் காய்க்காத மரமுண்டு; அதுபோல, நன்மை யறியாதவர் ஆண்டின் முதிர்ந்தாலும் அறிவின் முதிரார்; அறி நூல்களைக் கற்றுத் தெளியாதவர் அத்தன்மையரேயாவர். பாத் கட்டிப் புதைத்தாலும் முளைக்காத வித்துமுண்டு; அதுபோல, அ விலானுக்குப் பிறர் சொன்னாலும் அறிவு உண்டாகாது என்பது.

வி-ரை. பூத்தாலுங் காயாமரம் என்றது பாதிரிமர முதலி வற்றை. தேற்றாதார் - தன்வினைப்பொருளில் வந்தது. நாறு முளைத்தல். பேதை - அறிவிலான். (உ

வடிவிளமை வாய்த்த வனப்பு வணங்காக்
குடிகுலமென் றைந்துங் குறித்து—முடியாத்
துளங்கா நிலைகாணார் தொக்கிர் பசுவா
விளங்காற் றுறவா தவர்.

ப-ரை. வடிவு - உருவு, இளமை - இளம்பருவம், வாய் வனப்பு - பெற்ற அழகு, வணங்கா குடி - தாழாத குடிப்பிற

குலம் - உயர்குலம், என்கிற ஐந்தும் - என்று சொல்லப்படுகிற ஐந் தும், குறித்து - தாம் குறித்து, முடியா - நுகர்ச்சி முடியப்பெற்று, துளங்கா நிலை காணார் - அழியாத நிலையைக் காணமாட்டார்; (ஆத லால்) இளங்கால் துறவாதவர் - இளம்பருவத்திலே துறவாதவர், தொக்கு - கூடி, ஈர் - பாரத்தை யிழுக்கின்ற, பகு - எருதோடொப் பர், எ-று.

க-ரை. உருவு, இளம்பருவம், அழகு, உயர்குடி, உயர்குலம் இவ்வைந்தும் முடிவுபோக நுகர்வது அருமையாதலால், இளமைப் பருவத்திற்றுனே துறவாதவர் பாரத்தை யிழுத்துச் செல்லுகிற எருதை நிகர்ப்பர் என்பதாம்.

வி-ரை. வணங்காக்குடி யென்றமையால் உயர்குடியென் றுரை க்கலாயிற்று. வணங்கா என்பதனை குலம் என்பதன்முன் சேர்த்து உயர்குலம் என்றுரைத்துக்கொள்க. என்ற ஐந்தும் என்பது என் றைந்தும் என நிலைமொழி யீறு தொகுத்தல் பெற்றது. தொக்கு என்பதற்குப் பகுதி தொகு. துளங்கா நிலை-அசையா நிலை. ஈர்த்தல்- இழுத்தல். ஆல் - அசை. துறத்தல் - இருவகைப் பற்றுக்களையும் விடுதல். இருவகைப் பற்றுக்களாவன - அகப்பற்று புறப்பற்று என் பன. நான் என்றல் அகப்பற்று, எனது என்றல் புறப்பற்று; இவற் றை அஹங்காரம் மமகாரம் என்பர் வடநூலார். (உச)

கள்ளுண்டல் காணிற் கணவற் பிரிந்துறைதல்
வெள்கில ராய்ப்பிறரிற் சேறல்—லுள்ளிப்
பிறர்கரும மாராய்த லீப்பெண் கிளைமைந்
திறமதுநீப் பெண்ணின் றொழில்.

ப-ரை. கள் உண்டல் - கள்ளுண்டலும், காணில் - ஆராய்ந்து பார்க்கின், கணவன் - தன் கணவனை, பிரிந்து உறைதல்-(புணர்ச்சி வேண்டாதே) பிரிந்துறைதலும், வெள்கு இலர் ஆய் - நாணுதல்

இல்லாதவராய், பிறர் இல் சேறல் - பிறர்மனைக்குச் செல்லுதலும், பிறர் கருமம் உள்ளி - பிறர் கருமத்தை நினைத்து, ஆராய்தல் - பிற ருடனாராய்தலும், தீ பெண் - தீய பெண்டிரோடு, இளமை - சிநேக முடைமையும், (ஆகிய ஐந்தும்) திறமது - தனக்கே யுரியதாக, தீ பெண்ணின்தொழில் - தீய பெண்டிரின் தொழில்களாம், எ-று.

க-ரை. கள்ளுண்டல், கணவனைப் பிரிந்துறைதல், பிறர் மனைக்குச் செல்லுதல், பிறர் கருமத்தைப் பிறருடனாராய்தல், தீயபெண்டிரோ டிணங்குதல் ஆகிய ஐந்தும் தீப்பெண்ணின் தொழில்களாமென்பதாம்.

வி-ரை. வெள்கு - முதனிலைத் தொழிற்பெயர். உள்ளல் நினைத்தல். கருமம் - காரியம். ஆராயதல்-ஆலோசித்தல். இளமை உறவாந்தன்மை (இணக்கம்). திறன் - கூறுபாடு (பங்கு). பஞ்ச மகா பாதகங்களுள் ஒன்றாதலால் கள்ளுண்டலை முதற்கட் கூறினார். தீப்பெண்ணின் தொழில்கள் வேறு பலவுளவாயினும் இவ் வைந்தும் அவற்றின் மிக்கன வென்பது தோன்ற இவ்வாறு கூறலாயினர். கள்ளுண்டல் தன் மதிமயக்கத்துக்கும் தன் குடிப்பழிக்கு மேதுவாதலாலும், கணவனைப் பிரிந்துறைதல் கற்பழிவாதலாலும், பிறர்மனைக்குச் செல்லுதல் அவமான மாதலாலும், பிறர்கரும மாராய் தல் தனக்குரிய தன்மையாலும், தீப்பெண்டிரிணக்கம் தனக்குத் தீங்கு பயத்தலாலும் இவ்வைந்துந் 'தீப்பெண்ணின் தொழில்' என்றார். (உ௬)

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள்வெள வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின்—னொருங்குணர்ந்து
தீசொல்லே காமின் வருங்காலன் றிண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு.

ப-ரை. பெருங்குணத்தார் - பெருங்குணத்தாரை, சேர்மின் - சென்றடையுங்கள்; பிறன்பொருள்-பிறன்பொருளை வெளவல்மின் -

கவராதேயுங்கள்; கருங்குணத்தார் - தீக்குணத்தாரது, கேண்மை - நட்பை, கழிமின் - விடுங்கள்; ஒருங்கு உணர்ந்து - முற்றுமறிந்து, தீ சொல்லே - (பிறரைச் சொல்லும்) தீய சொற்களையே, காமின் - (சொல்லாது) தடுங்கள்; காலன்வரும்-யமன்வருவான், திண்ணிதே - இது உண்மையே, வாய்ச்சொல்லே அன்று-இது வாய்ச் சொல்லே யன்று, வழக்கு - உண்மை வழக்கேயாம், எ-று.

க-ரை. நற்குண முடையாரைச் சேருங்கள்; பிறன்பொருளைக் கவராதேயுங்கள்; தீக்குண முடையாரை யொழியுங்கள்; தீயசொற்களை வழங்காதிருங்கள்; காலன் வருவான்; இது உண்மையென்பதாம்.

வி-ரை. பெருங்குணம் - பெருமைக் கேதுவாகிய சாந்தமுதலிய நற்குணங்கள். பிறன்-அந்நியன். அஞ்ஞானம் கருமையாதலால் கருங்குணத்தார் என்றது அஞ்ஞானிகளை. அஞ்ஞானிகள் - அறிவிலாதார். கருங்குணத்தார் கேண்மை கழிமின் என்றமையால் அவரைக் கழித்தல் சொல்லாதே யமையும். "யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்னுந் திருக்குறளின் பொருளை அடியொற்றி இவரும் 'தீச்சொல்லே காமின்' என்றார். காத்தல்-தம்மிடத் துண்டாகாது தடுத்தல்; காவாராயின், அத் தீச்சொற் பயனாகிய துன்பத்தை யநுபவிப்ப ரென்றதாயிற்று. திண்ணிது என்பதில் திண்மை உண்மை யென்னும் பொருளில் வந்தது. (உசு)

வான்குருவிக் கூடரக்கு வாலுலண்டு கோற்றருதல்
தேன்புரிந்தி யார்க்குஞ் செயலாகா—தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன வென்னாரோ ரொருவர்க்
கொல்காதோ ரொன்று படும்.

ப-ரை. வான் குருவி கூடு - வாலிய தூக்கணங் குருவியினுற் செய்யப்படும் கூடும், அரக்கு - (பேரெறும்புகளாற் செய்யப்படும்) அரக்கும், வால்-வாலிய, உலண்டு - உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்பட்ட நூலும், கோல் தருதல்-(வேருெருவகைப் புழுக்களாற் செய்யப்பட்ட) கோற்கூடும், தேன் - தேனீக்களாற் றிரட்டப்பட்ட தேன்பொதியும், (ஆகிய இவ்வைந்தும்) புரிந்து-விரும்பி, யார்க்கும்-யாவர்க்கும், செயல் ஆகா - செய்தல் முடியா; (ஆதலால்) வல்லவர் - எல்லாம் கற்று வல்லவரும், தாம் புரீஇ - தாம் விரும்பி, வாய்ப்பன என்ஞர் - நமக்கிவை வாய்ப்பாகச் செய்யலாமென்று கருதவுமாட்டார், ஒரோவொருவர்க்கு-ஒவ்வொருவர்க்கு, ஒல்காது - குறையாது, ஒரொன்று - ஒரோவொரு அருமையாகிய செய்கை, படும்-உண்டா யிருக்குமாதலால், எ-று.

க-ரை. தூக்கணங் குருவியின்கூடு முதலியவற்றைச் செய்தற் கருமை நோக்கி, அவற்றை, எல்லாங்கற்று வல்லவரும் செய்யலா மென்று மனத்தினுல் நினைக்கவுமாட்டார் என்பதாம்.

வி-ரை. வான் என்பதற்கு அறிவினுல் மேம்பட்ட என்றுரைத்தலுமாம். அரக்கு, தேன் என்பவற்றைச் செய்தற்குரிய பேரெறும்பும், தேனீக்களும் வருவித் துரைக்கப்பட்டன. உலண்டு - கோற் புழு. புரீஇ-சொல்லிசை யளபெடை. ஒல்கல் - குறைதல். படுதல் - உண்டாதல். செய்தலருமை நோக்கி, வல்லவர் வாய்ப்பனவென்ஞர் என்பதில் என்ஞர் என்பதற்குச் செய்யக் கருதவுமாட்டார் என் றுரைக்கப்பட்டது. இதனுல், அற்பவுயிர்களாற் செய்யப்படுங் காரியங்கள் எல்லாங் கற்று வல்லவராலுஞ் செய்யலாகாதென்பது கூறப் பட்டது. (உஎ)

அறனட்டா னன்னெறிக்க ணிற்க வடங்கா
புறனட்டான் புன்னெறிபோ காது—புறனட்டான்

ஒருவ னறிவா னெல்லாமே யாதொன்று
மொருவ னறியா தவனு—மொருவன்
குணனடங்கக் குற்றமில் லானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

ப-ரை. எல்லாம் அறிவான் ஒருவனும் - எல்லாவற்றையும் அறிவானொருவனும், யாது ஒன்றும் அறியாதவன் ஒருவனும் - யாதொன்றையும் அறியாதானொருவனும், குணன் அடங்க இல்லான் ஆம் ஒருவனும் - குணமுழுது மில்லாதானொருவனும், குற்றம் இல்லானுமொருவன் - குற்றமுழுது மில்லாதானொருவனும், கணன் அடங்க கற்றானும் - நூற்றொகுதிமுழுதும் கற்றானொருவனும், இல் - இவ்வுலகிலில்லை, எ-று.

க-ரை. எல்லாமறிந்தவனும், யாதுமறியாதவனும், குணமில்லாதவனும், குற்றமில்லாதவனும், எல்லா நூல்களையுங் கற்று வல்லவனும் உலகத்திலில்லையென்பதாம்.

வி-ரை. அறிவானும் என்றவும்மை பிரித்து ஒருவன் என்பதனீற்றில் கூட்டப்பட்டது. அறியாதவனும் என்றவும்மை பிரித்து ஒருவன் என்பதனீற்றில் கூட்டப்பட்டது. அடங்க - முழுதும். குணம் குணன் எனவும், கணம் கணன் எனவும் போலியாயிற்று. கற்றானும் என்றவும்மை பிரித்து ஒருவன் என்பதனீற்றில் கூட்டப்பட்டது. கற்றானும் என மேல்வருதலால், கணன் நூற்றொகுதியென்றுரைக்கப்பட்டது. (கக.)

உயிர்நோய்செய் யாமை யுறுநோய் மறத்தல்
செயிர்நோய் பிறர்கட்செய் யாமை—செயிர்நோய்
விழைவு வெகுளி யிவைவிடுவா னாயி
னிழ்வன் றினிது தவம்.

ப-ரை. உயிர்நோய் செய்யாமை - பிறிதோருயிர்க்குத் துன்பஞ் செய்யாமையும், உறுநோய் மறத்தல் - பிறவுயிர்களால் நேர்ந்த துன்பத்தை மறந்துவிடுதலும், செயிர் நோய் பிறர்கண் செய்யாமை - கோபத்தால் பிறருக்குத் துன்பஞ் செய்யாமையும், (ஆகிய இம் மூன்றையும் ஒருவன் உடையனாய்) செயிர் நோய் விழைவு வெகுளி - குற்றத்தைச் செய்யும் துன்பத்தைத் தருகிற ஆசையும் கோபமும் ஆகிய, இவை - இவற்றை, விடுவானாயின் - விடுவானானால், தவம் - (அவன் செய்யும்) தவமானது, இழிவு அன்று - இழிவன்றி, இனிது - இன்பத்தைத் தருவதாகும், எ-று.

ப-ரை. பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்யாமையும், பிறவுயிர்களால் தனக்குவந்த துன்பத்தை மறத்தலும், கோபமிகுதியால் பிறர்க்குத் தீங்குசெய்யாமையும் ஆகிய இவற்றையுடையனாய், விழைவு வெகுளிகளை யொருவன் விட்டுவிடுவானாயின், அவனுடைய தவமானது அவனுக்கு இனிதாய் முடியுமென்பதாம்.

வி-ரை. உயிர் பிறர் என்றது முறையே அஃறிணையுயிரையும் மக்களையும் உயிர்நோய் செய்யாமை யுறுநோய் மறத்தல் என்பதற்கிணங்க, "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை' என்றார் பெருநாவலரும். மறத்தல் - நினைவிலுமில்லாமல் விட்டொழித்தல். விழைவு வெகுளி என்பவற்றை காமக்ரோதம் என்பர் வடநூலார். (௬௨)

வேட்பவன் பார்ப்பான் விளங்கிழைக்குக் கற்புடைமை
கேட்பவன் கேடில் பெரும்புலவன்—பாட்டவன்
சிந்தையா னாகுஞ் சிறந்த வுலகினுட்
டந்தையா னாகுங் குலம்.

ப-ரை. வேட்பவன் பார்ப்பான் - வேள்வி செய்பவன் பார்ப்பானாவான்; விளங்கிழைக்குக் கற்புடைமை - மாதுக்குக் கற்புடைமை

சிறந்தது; கேட்பவன் - பலநூல்களையும் ஆசிரியனை யடுத்துக் கேட்பவன், கேடு இல் - அழிவில்லாத, பெருர் புலவன் - பெரியபுலவனாவான்; அவன் - அப்புலவன், சிந்தையான ஆகும் பாட்டு - மனத்தானாராய்ந்து பாடும்பாட்டு, உலகினுள் - உலகத்தில், சிறந்தது - மேம்பட்டது; குலம் - ஒருவனது குலனுடைமை, தந்தையான் ஆகும் - அவனது தந்தையாலே அழகுபெற்று விளங்கும், எ-று.

க-ரை. யாகஞ் செய்பவன் பார்ப்பான்; கற்புடையவள் பெண்; பலநூல்கள் கேட்டறிந்தவன் பெரும்புலவன்; அவனாற் பாடப்படும் பாட்டு உலகிற் சிறந்தது; ஒருவனது குலனுடைமை யழகுபெற்று விளங்குவது அவனது தந்தையாலேயா மென்பதாம்.

வி-ரை. வேட்டல் - யாகஞ்செய்தல். விளங்கிழை - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். கற்பு - பதிவிரதாதர்மம். குலம் - குலனுடைமை, அதாவது உயர் குடிப்பிறப்பு. (௩௩)

வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிக
னுய்ப்பானே யாசா னுயர்கதிக்கு—உய்ப்பா
னுடம்பினார் வேலி யொருப்படுத்தூ ணாரந்
தொடங்கானேற் சேறற் றுணிவு.

ப-ரை. வைப்பானே-பொருளை யீட்டிவைப்பவனே, வள்ளல் - வள்ளலென்று சொல்லப்படுவான் ; வழங்குவான் - அப்பொருளைப் பிறர்க்குக் கொடுப்பவனே, வாணிகன் - வாணிகனென்று சொல்லப்படுவான்; உய்ப்பானே ஆசான் - (அக்கொடையினாலாய பயன் விளைவு மறுமைக்குத் தனக்கு விளைத்துக்கொள்ளுதலால்) ஒருவர்க்கு ஆசிரியனாவான், உயர் கதிக்கு உய்ப்பான் - உயர்கதியிற் செலுத்தவல்லோன், உடம்பின் ஆர் வேலி - உடம்பாகிய வேலியை, ஒருப்படுத்து (போக்கி)-ஒருப்படுத்து நீக்கி, ஊன் - அவற்றின்

தசையை, ஆர - உண்ண, தொடங்காரேனல் - தொடங்காராயின், சேறல் - (அவன்) உயர்கதியிற் செலுத்தல், துணிவு - உண்மையாம், எ-று.

க-ரை. பொருளீட்டி வைப்பவன் வள்ளல்; அதனை வழங்குவோன் வாணிகன்; அக்கொடைப்பயனைத் தனக்கு விளைத்துக் கொள்வோன் ஆசிரியன்; உயர்கதியிற் செலுத்தவல்லவன் குருவினை வதைத்து அதனை தசையை யுண்ணானாயின் அவன் உயர்கதியடைதல் உண்மையென்பதாம்.

வி-ரை. வள்ளல் - வரையாது கொடுப்போன். வழங்கல் - தானமாகக் கொடுத்தல். வாணிகன் - வியாபாரி. உய்த்தல் - செலுத்தல். உயர்கதி - மோக்ஷம். உடம்பின் என்பதில் இன் அல்வழிச்சாரியை. ஒருப்படுத்தல் - சம்மதப்படுத்தல். ஆர்தல் - உண்டல். தொடங்காரேனல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ. சேறல் - செல்லுதல். (௩௪)

வைததனா னாகும் வசைவணக்க நன்றாகச்
செய்ததனா னாகுஞ் செழுங்குலமுஞ்—செய்த
பொருளினா னாகுமாம் போக நெகிழ்ந்த
வருளினா னாகு மறம்.

ப-ரை. வைததனால் - (ஒருவன் பிறனை) வைததனால், வசை ஆகும் - (அவனுக்கு) வசையுண்டாகும்; நன்றாக வணக்கம் செய்ததனால் - நன்மை வணக்கம் என்பவற்றைப் பிறர்க்குச் செய்ததனால், செழுங்குலமும் ஆகும் - வளமையாகிய குடிப்பிறப்புமாகும்; செய்த பொருளினால் - ஈட்டின பொருளினால், போகம் - இன்பம். ஆகும் - உண்டாகும்; நெகிழ்ந்த - (பிறர்பொருட்டுத்) தன்மனம்நெகிழ்ந்த. அருளினால் - அருள்காரணமாக, அறம் ஆகும் - அறமுண்டாகும், எ-று.

க-ரை. ஒருவனை ஒருவன் வைததனால் வசையும், வணக்கத்தால் உயர்ந்த சிறப்பும், பொருள் செய்ததனால் இன்பமும், அருளினால் அறமும் உண்டாமென்பதாம்.

வி-ரை. வைசல் - திட்டுதல். வசை - பழி. வணக்கம் - பணிவு. செய்தபொருள் என்பதில் செய்த என்பது ஈட்டிய எனப் பொருள் பட்டது. போகம் - அனுபவம் - இன்பம். நெகிழ்தல் - உருகுதல். அருள் - காரணங்கருதாது ஒருங்கமைந்தா யெல்லாவுயிர்மீதுஞ் செல்லும் பெருங்கருணை. (௬௫)

இல்லியலார் நல்லறமு மேனைத் துறவறமு
நல்லியலி னாடி யுரைக்குங்கா — னல்லியற்
றானத்தாற் போகந் தவத்தாற் சுவர்க்கமா
ஞானத்தால் வீடாக நாட்டு.

ப-ரை. இல் இயலார் - இல்வாழ்க்கை யியற்கையாகவுடையார் (செய்த) நல் அறமும் - நல்ல அறமும், ஏனை துறவறமும் - மற்றைத் துறவிகள் செய்யும் நல்ல அறமும், நல் இயலின் - நன்மையாகிய முறையால், நாடி - ஆராய்ந்து, உரைக்குங்கால் - சொல்லுமிடத்து, நல் இயல் தானத்தால் போகம் - நல்லியலாகிய கொடையினால் செல்வநுகர்ச்சியும், தவத்தால் சுவர்க்கம் ஆ - தவத்தினால் சுவர்க்கமாகவும், ஞானத்தால் - ஞானத்தினால், வீடு ஆக - வீடாகவும், நாட்டு - நிலைபெறுத்துவாயாக, எ-று.

க-ரை. இல்லறத்தார் செய்த அறமும், துறவறத்தார் செய்த அறமும், ஆராயின், கொடையால் செல்வநுகர்ச்சியும், தவத்தால் சுவர்க்கமும், ஞானத்தால் வீடும் பெறுவரென்பதாம்.

வி-ரை. இல்-இல்வாழ்க்கை. இயலார் - இயல்பாகவுடையவர். நல்லியல்-நன்மையாகிய முறைமை, அதாவது ஒருபாற்கோடாமை.

(நழுவுதலிலாமை). தானம் - கொடுத்தல். போகம் - இன்பநுகர்ச்சி. வீடு - முத்தி. (௩௯)

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பு
உகிர்வனப்புங் காதின் வனப்புஞ்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

ப-ரை. மயிர் வனப்பும் - தலைமயிரா லுண்டாகும் அழகும். கண் கவரும் - (கண்டோரது) கண்களைக் கவர்தற்குரிய, மார்பின் வனப்பும் - மார்பினாலுண்டாகும் அழகும், உகிர் வனப்பும் - நகத்தாலுண்டாகும் அழகும், காதின் வனப்பும் - செவியினாலுண்டாகும் அழகும், செயிர் தீர்ந்த - குற்றம் நீங்கின, பல்லின் வனப்பும் - பல்லினாலுண்டாகும் அழகும், வனப்பு அல்ல - அழகல்ல; நூற்கு இயைந்த - நூல்கட்குப் பொருந்திய, சொல்லின் வனப்பே - சொல்லழகே, வனப்பு - அழகாகும், எ-று.

க-ரை. தலைமயிரினழகும், மார்பினழகும், நகத்தினழகும், செவியினழகும், பல்லினழகும் ஆகிய இவற்றினும், நூல்களிலுள்ள சொல்லழகே சிறந்த தென்பதாம்.

வி-ரை. மயிர்வனப்பு எனவாளாகூறினரேனும், அது ஆண்மக்கள் பெண்மக்களுடைய தலைமயிரையே குறித்தது. கண் கவர்தலாவது - பிறிதோரிடத்துச் செல்லாது தன்னிடத்தே பதிந்து பறிப்பரிதாய் நிற்குமாறு பார்ப்பவர்கள் கண்களை வசப்படுத்தல். மயிர் வனப்பு முதலிய ஐவகைவனப்பினும் கல்வியழகே சிறந்ததென்றற்கு இவ்வாறு கூறினர். இளமைப்பருவத்திலுள்ள மயிர்வனப்பு முதலியவை முதுமைப்பருவத்தில் நரை முதலியவற்றாற் கெட்டொழிதல் போலாது, கல்வியழகு மேன்மேலுஞ் சிறந்து நிற்றலால், 'நூற்கியைந்தசொல்லின் வனப்பேவனப்பு' என்றார். இதற்குதாரணம்: நாலடி

யார், "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்ச ளழகு மழகல்ல-நெஞ்சத்து, நல்லம் யாமென்னு நடுவு நிலைமையால், கல்வி யழகே யழகு." (௩௭)

தொழீஇ யடவுண்ணார் தோழரிற் றுஞ்சார
வழீஇய பிறர்பொருளை வெளவார்—கெழீஇக்
கலந்தபிற் கீழ்காணார் காணாய் மடவாய்
புலந்தபிற் போற்றார் புலை.

ப-ரை. தொழீஇ - தொழுத்தையானவள், அட - சமைத்து வைக்க, உண்ணார் - (அவ்வுணவை அறிவுடையார்) உண்ணமாட்டார்; தோழர் - நண்பரது, இல் - வீட்டில், துஞ்சார் - (தனியே புகுந்து) உறங்கமாட்டார்; வழீஇய - மறந்த, பிறர் பொருளை - பிறரது பொருள்களை, வெளவார் - கவர்ந்துகொள்ளமாட்டார்; கெழீஇ - தழுவி, கலந்தபின் - சிலரைநட்டபின்பு, கீழ் - (அவரது) கீழ்மையாகிய குணத்தை, காணார் - ஆராய்ந்து பார்க்கமாட்டார்; புலந்தபின் - (சிலரொடு) பகைத்தபின்பு, புலை - (அவரது) கீழ்மைக் குணத்தை, போற்றார் - போற்றுது அவரை வஞ்சித்துக் கெடுப்பார், எ-று.

க-ரை. தொழுத்தை சமைத்ததை யுண்டலும், தோழர்வீட்டில் தனியேபுகுந்துறங்கலும், பிறர்மறந்துவைத்த பொருளைக் கவர்ந்து கொள்ளலும், ஒருவரைச் சிநேகித்த பின்பு அவரது தீக்குணத்தை யாராய்தலும், ஒருவரைப் பகைத்தபின்பு அவரை வஞ்சித்துக் கெடுக்காது அவரது இழிகுணத்தைப் போற்றுதலும் அறிவுடையார் செயல்களன்றென்பதாம்.

வி-ரை. தொழுத்தை - அடிமைப்பெண். அடல் - சமைத்தல், வழுவிய எனற்பாலது வழீஇயவென அளபெடுத்தது. இது சொல்லிசையளபெடை. கெழீஇ என்பதுமது. காணாய் - பாராய். மடவாய்-

மகடூஉ முன்னிலை. இவ்வாறு மகடூஉ முன்னிலையாய்க் கூறல் கவி மரபு. இது "பல்லவத்தின் சந்தமடிய வடியான் மருட்டிய தாழ் குழலே", "வேய்புரையு மென்றோளி", "சிறுநுதற் பேரமர்க்கட் செய்ய வாயைய நுண்ணிடையாய்", "வாருமவட முந்துயிலு மூகிண்முலை வாணுதலே" என்றற்றொடக்கத்தனவற்று விளிது விளங்கும். புலத்தல் - பகைத்தல். (கஅ)

பொய்யாமை நன்று பொருணன் றுயிர்நோவக்
கொல்லாமை நன்று மொழிக்குங்கா—பல்லார்முற்
பேறுமை பேணுந் தகைய சிறிதெனினு
மாறுமை மாண்டார் மனம்.

ப-ரை. பொய்யாமை - பொய்சொல்லாதிருத்தல், நன்று - (ஒருவற்கு) நன்மையாம்; பொருள்நன்று-பொருள் செய்தல் நன்மையாம்; உயிர்-பிறிதோருயிர், நோவ - வருந்த, கொல்லாமை - கொல்லாதிருத்தல், நன்று - நன்மையாம்; மொழிக்குங்கால் - ஆராயுமிடத்து, பேணும் தகைய-(ஒருவன் தான்) விரும்புந் தன்மையவற்றை, பல்லார்முன் பேறுமை - பலரறிய விரும்பாமை, (நன்று - நன்மையாம்); மாண்டார்-மாட்சிமைப்பட்டாரது, மனம்-மனமானது, சிறிது எனினும் - சிறிதாயினும், மாறுமை-(மனைவாழ்க்கைக்கு மீள்கைக்கண்) ஒருப்படாமை, (நன்று - நன்மையாம்), எ-று.

க-ரை. ஒருவன் பொய் சொல்லாதிருத்தலும், பொருள் செய்தலும், பிறிதோருயிரைக் கொல்லாதிருத்தலும், தான் விரும்புமவற்றைப் பலரறிய விரும்பாமையும், தவசிகளுடைய மனம் இல்வாழ்க்கையில் மீளாமையும் நன்மையென்பதாம்.

வி-ரை. பொய்யாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்; உடன் பாட்டில் பொய்த்தல் எனவரும். பொய்யாமை யென்பதற்கு மெய்

சொல்லுதல் என்பது பொருள். பொருணன்று என்பதில் செய்த வென வொருசொல் வருவித்துச் சேர்த்துரைக்கப்பட்டது. கொழித்தல்-ஆராய்தல். பேணல் - விரும்பல். மாண்டார் - மாட்சிமையுடையவர், மனமிறந்தவர் எனினுமாம். பொய்யாமை நன்று என்றதனுல் பொய்த்தல் தீது என்பதும், பொருணன்று என்றதனுல் பொருள் செய்யாமை தீது என்பதும், கொல்லாமை நன்று என்றதனுல் கொல்லுதல் தீது என்பதும், பேணுமை நன்று என்றதனுல் பேணுதல் தீது என்பதும், மாணுமை நன்று என்றதனுல் மாண்டல் தீது என்பதும் பெறப்பட்டன. (கஃ)

பண்டாரம் பல்கணக்குக் கண்காணி பாத்தில்லா
ருண்டா ரடிசிலே தோழரிற்—கொண்டாரா
யாக்கைக்குத் தக்க வறிவில்லார்க் காப்படுப்பிற்
காக்கைக்குக் காப்படுத்த சோறு.

ப-ரை. பண்டாரம் - பண்டாரத்தினையும், பல் கணக்கு - பல கணக்கினையும், கண்காணி - கண்காணியையும், இல்லார் - தன் மனையிலிருள்ளுறைறையு மங்கையரையும், உண்டு ஆர் அடிசில்-தனக்குண்ணவாக்கு முணவினையும், பாத்து-பகுத்து, யாக்கைக்கு தக்க-மக்களுடம்பிற்குத்தக்க, அறிவில்லார்-அறிவிலாரையும், தோழன் கொண்டாராய் - தன்தோழரைப்போலக் கொண்டவராய், காபடுப்பின் - காவாவிடின், (அக்காவல்) காக்கைக்கு-காகத்திற்கு, சோறு காப்பு அடுத்த - சோற்றுக்காவலமைந்தாற்போலும், எ-று.

க-ரை. பண்டார முதலியோரைக் காவாவிடின், அக்காவல் சோற்றுக்காவற் றொழிலைக் காகத்திற் கிட்டாற்போலும் என்பதாம்.

உடையிட்டார் புன்மேய்வா ரோடுநீர் புக்கார்
படையிட்டார் பற்றேது மின்றி—நடையிட்டா

ரிவ்வகை யைவரையு மென்று மணுகாரே
செவ்வகைச் சேவகர் சென்று.

ப-ரை. உடை இட்டார் - (தமக்கஞ்சி) உடுத்த புடவையைப் போகவிட்டவர், புல் மேய்வார் - புற்பரிதரு வாயிலிட்டார், ஓடி நீர் புக்கார்-ஓடுகிற நீரிற் புகுந்தவர், படை இட்டார்-கைப்படையை விட்டவர், பற்று ஏதும் இன்றி - பற்றுச் சிறிதுமில்லாமல், நடை யிட்டார் - (ஓடமாட்டாது) நிலைதளர்ந்திருந்தவர், இவ்வகை ஐவரை யும் - இவ்வகைப்பட்ட ஐவரையும், செவ்வகை சேவகர் - செவ்வகை யினராகிய சேவகர், என்றும் - எந்நாளும், சென்று - நீங்குசெயடச் சென்று, அணுகார் - சேரமாட்டார், எ-று.

க-ரை. உடுக்கையிழந்தவர் முதலிய ஐவரையும் வருத்தாதொ ழிதல் வீரர்க்குரிய தருமமென்பதாம்.

வி-ரை. உடை-உடுக்கை, தொழிலாகுபெயர்; இது ஆடையெ ன்னும் பொருளுணர்த்துவது. படை - படுத்தற்குரியது. படுத்தல்- சொல்லுதல். ஆயுதம் என்பது பொருள். செவ்வகைச் சேவகர் என் றது-அறப்பொருள் செய்யுஞ்சேவகரை. இவர் உடையிட்டார் முத லிய ஐவரையும் சென்றணுகி வருத்தலாகாதென்ப திதனாற் போந்த பொருள். (சக)

பூவாதாள் பூப்புப் புறக்கொடுத் தாளிலிங்கி
யோவாதாள் கோல மொருபொழுதுங்—காவாதாள்
யார்யார் பிறர்மனையா ளுள்ளிட்டிவ் வைவரையுஞ்
சாரார் பகைபோற் கலித்து.

ப-ரை. பூவாதாள் - பூப்பில்லாத கன்னியும், பூப்பு புறக்கொடுத் தாள் - பூப்புத் தவிர்ந்தவளும், இலிங்கி - இலிங்கியும், ஒருபொழு தும் - ஒருகாலத்தும், கோலம் ஓவாதாள் காவாதாள் - கோலஞ்செய

தலையொழியாதவளாய்த் தன் கற்பைக்காவாத வேசையும், யார் யார் பிறர் மனையாள்-பிறராகிய யாவர்க்குமுரிய மனையாளும், உள்ளிட்ட இ ஐவரையும் - உள்ளிட்ட இந்த ஐவரையும், பகைபோல் சலித்து - பகைவரைப்போல வெறுத்து, சாரார் - (அறிவுடையார்) சேரார் எ - று.

க-ரை. பூப்பில்லாத கன்னி, பூப்பொழிந்தவள், இலிங்கி, வேசை, பிறன்மனைவி என்னும் இவ்வைவரையும் அறிவுடையார் சேரார் என்பதாம்.

வி-ரை. பூவாதாள்-திரளாதபெண். பூப்புப்புறக்கொடுத்தாள் - பூப்பு நின்றுவிட்டவள். இலிங்கி-தவஞ்செய்யுங் கன்னிகை. தன்னை யெப்பொழுதும் அலங்கரித்துக்கொண்டு, ஆடவரை மயக்குமலனாத லாலும், கற்புப்பேணுதவளாதலாலும், வேசையை, 'பூவாதாள்போல வொருபொழுதுங் காவாதாள்' என்றார். உள்ளிடல் - அடக்கல். சலித்தல் - வெறுத்தல். பகைபோல் - பகைவரை வெறுத்தல்போல. சார்தல் - பொருந்தல். பகை - பண்பாகுபெயர். (சஉ)

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்குந்
தெய்வதையு மெஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்மர் சிறப்பு.

ப-ரை. வருவாய்க்கு தக்க வழக்கு அறிந்து - தம் கணவரது வருவாய்க்குத் தகுதியையும் அதற்கேற்ப வழங்குதலையும் அறிந்து, சுற்றம் வெருவாமை வீழ்ந்து - சுற்றத்தார் வெருவாவண்ணம் அவர் களை விரும்பித்தழுவி, விருந்து ஓம்பி - விருந்தினரை உபசரித்து, திருவாக்கும் - செல்வத்தை மேன்மேலும் உயரச்செய்கிற, தெய்வத்தை - தேவதையை, எஞ்ஞான்றும் - எந்நாளும், தேற்றம் தெளி

வாகிய, வழிபாடு செய்வதே-வழிபடுதலைச் செய்வதே, பெண்டிர் சிறப்பு - மாதர்க்குச் சிறப்பாவன, எ-று.

க-ரை. தம் கணவரது வருவாயினளவை யறிதலும், அதற்கேற்ப வழங்குதலும், சுற்றத்தாரைத் தழுவலும், விருந்தினரை யுபசரித்தலும், தெய்வவழிபாடும், ஆகிய இவ்வைந்து தொழில்களும் மாதர்க்குச் சிறப்பாவன வென்பதாம்.

வி - ரை. வருவாய் - வருமானம். வழக்கு - வழங்கல், அதாவது செலவுசெய்தல். சுற்றம் - சூழ்ந்திருப்பவர், இது தொழிலாகு பெயர். வெருவாமை - எதிர்மறை வினையெச்சம். விருந்து - பண்பாகு பெயர். ஓம்புதல்-உபசரித்தல். தெற்ற எனப் பாடமோதி சுடக்கென வெனப் பொருள்கூறலு மாம். வழிபாடு - முதனிலைதிரிந்த தொழிற் பெயர்; முதனிலை வழிபடு. சிறப்பைத் தருமவற்றைச் சிறப்பென்றார் கருவியாகுபெயரான். (சசு)

நாள்கூட்ட மூர்த்த மவற்றோடு நன்றமைக்
கோள்கூட்டம் யோகங் குணனுணர்ந்து—நாள்கூட்ட
லுற்றானு மல்லா னுமைந்த முணர்வானாற்
பெற்றானட் கொள்க பெரிது.

ப-ரை. நாள் கூட்டம் - நாட்பொருத்தம், மூர்த்தம் - முகூர்த்தம், அவற்றோடு-அவற்றுடனே, நன்றாஅம்-நன்மையாகிய, அ கோள் கூட்டம் - அந்தக் கிரகப்பொருத்தம், யோகம்-யோகமும். குணன்-(இவற்றாலுண்டாகிற) நன்மையும், உணர்ந்து-ஆராய்ந்தறிந்து, பெற்றால்-(ஐவையைந்தும் நன்மையாயிருக்கிற) நாளைப் பெற்றால், ஐந்தும் உணர்வான்-இவ்வைந்தனையு மறிந்து சிலநன்மையாகிய காரியங்களைச் செய்வோனும், தோள்கூட்ட லுற்றானும் - (ஒருவனோடொருத்தியைத்) தோள் கூட்டலுற்றவனும், பெரிது நாள் கொள்க - மிகவும் நல்லநாளாகக் கொள்க, எ-று.

க-ரை ஒருவனோடொருத்தியைச் சேர்க்கவுற்றவனும், வேறு சில நற்காரியங்களைச் செய்யவுற்றவனும், நாட்பொருத்த முதலிய வைந்துமநன்மையா யமையப்பெற்ற நாளை யாராய்ந்தறிந்து, அந்த நாளை நல்லநாளாகக் கொள்க என்பதாம்.

வி-ரை மூர்த்தம் - முகூர்த்தம். கிரகம் - ஞாயிறு முதலாயின. தோள்கூட்டல் - தோள் புணர்வித்தல் "நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற் - பிறர்க்குரியா டோடோயா தார்" என்பது திருக்குறள். நாட்கொள்ளல - நன்னாளாகக் கோடல். (௩௬)

பேணொடக்கம் பேறு பெருந்தகைமை பீடுடைமை
நாணொடுக்க மென்றைந்து நன்றுஅடக்க—பூணொடுக்கம்
பொன்வரைக்கோங் கேர்முலைப் பூந்திருவே யாயினும்
தன்வரைத் தாழ்த்த லரிது.

ப-ரை. பேண் - உறவினரைப் பேணலும், அடக்கம்-அடக்கமுடைமையும், பேறு - (பிறரொருவனைப்) பேறுத, பெருந்தகைமை - பெருந்தன்மையும், பீடு உடைமை - பெருமையுடைமையும், நாண் ஒடுக்கம் - நாணத்தாலுண்டாகும் ஒடுக்கமும், என்ற ஐந்தும்- என்று சொல்லப்பட்ட ஐந்தனையும், (பொருந்தாது), பூண் ஒடுக்கம்-பூணடங்கின, பொன்வரை-பொன்மலைபோன்ற, கோங்கு ஏர்-கோங்கரும்பி னழகையுடைய, முலை - தனங்களையுடைய, பூ திருவே ஆயினும்-தாமரைமலரில் வாழ்கின்ற இலக்குமியேயாயினும், தன்வரை - (தன் கொழுநனைத்) தன்னளவின், தாழ்த்தல்-தாழ்த்துதல், அரிது- (நன்மையாதல்) இல்லை, எ-று.

க-ரை. ஒருத்தி, திருமகளை நிகர்த்தவளேயாயினும், சுற்றந்தழால் முதலிய ஐந்தனையும் கைவிட்டுத் தன்கணவனைத் தன்னளவிற் றாழ்த்துதல், அவளுக்கு நன்மையைத் தருதலில்லையென்பதாம்.

வி-ரை. பேண் - முதனிலைத்தொழிற்பெயர் அடக்கம் - ஒடுக்கம்; பகுதி அடங்கு. பேணல் - காத்தல் பீடு - பெருமை. பூண் - ஆபரணம். பொன்வரைக் கோங்கேர்முலை என்பதற்குப் பொன்மலையும் சோங்கரும்புமாகிய இவற்றினழகையுடைய தனம் எனினுமமையும். பூ - செந்தாமரைமலர் எனக்கொள்க மேல் திருவென வருதலான். தாழ்த்தல் - கீழ்ப்படுத்தல். அரிதாண்டின்மை குறித்தது.

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கு முலகு.

ப-ரை. வார்சான்ற - நீட்சிமிகுந்த, கூந்தல் - கூந்தலையுடையாய், வரம்பு - வயல்வரம்பு, உயர - உயரவே, நீர்சான்று - நீர் நிறைந்து, உயரவே - உயர்ந்தவரவே, நெல் உயரும் - நெல் உயர்ந்து வளரும்; சீர் சான்ற - சிறப்புமிக்க, தாவா - அழியாத, குடி உயர - குடிகள் உயரவே, தாங்கு அரு - பகைவரால் தாங்குதற்கரிய, சீர் - சிறப்பினையுடைய, கோ - அரசன், உயரும் - உயர்வான். (என்று) உலகு - இவ்வுலகமானது, ஓவாது உரைக்கும் - ஒழியாமற் சொல்லிநிற்கும் எ-று.

க-ரை. வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயர்வான் என்பதாம்.

வி-ரை. வார் - நீட்சி. சான்ற - சால என்னு முரிசொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம். வரம்பு என வாளா கூறினரேனும், மேல் வருவனவற்றிற் கேற்ப, வயல்வரம்பு என்றுரைக்கப்பட்டது. சான்று சால என்னு முரிசொல்லடியாகப் பிறந்த வினையெச்சம். இது உயர வென்னும் வினைகொண்டது. தாவா எதிர்மறைப் பெயரெச்சம். இது குடியென்னும் பெயர்கொண்டது. கோ என்னும் ஓரெழுத்

தொருமொழி னகரச் சாரியை பெறுது கோ என்றே நின்றது. எனறு என ஒருசொல் வருவித் துரைக்கபபட்டது. ஒவாது என்னும் வினையெசசம் உரைக்கும் என்னும் வினைகொண்டது. தாவா ஒயாது என்பவற்றிற்குப் பகுதிகள் முறையே தா ஒ. உலகு இட வாகுபெயராய் உலகிலுள்ளாரை யுணர்த்திற்று. உலகு-உயர்ந்தோர் எனினுமாம். வார்சான்ற கூந்தல்-அண்மைவிளி, மகடூஉ முன்னிலை.

அழியாமை யெத்தவமுஞ் சார்ந்தாரை யாக்கல்
பழியாமை பாத்தல்யார் மாட்டு—மொளியாமை
கன்றுசா வப்பால் கறவாமை செய்யாமை
மன்றுசார் வாக பலை.

ப-ரை. எ தவமும் - எவ்வகைப்பட்ட தவத்தினையும், அழியாமை - கெடுக்காமையும், சார்ந்தாரை - தம்மை வந்தடுத்தவரை, ஆக்கல் - உபகாரசெய்தலும், பழியாமை - பிறர்தம்மைப் பழியாமல், யார் மாட்டும் - யாவரிடத்தும், ஒளியாமை - மறைக்காமல், பாத்தல்-பகுத்துண்டலும், கன்று சாவ - கன்று இறத்தலும்,பால்கறவாமை-(அந்தக்கன்றையீன்ற தாய்ப்பசுவின்) பாலைக்கறவாமையும். மன்று சார்வு ஆக - மனறையடுத்திருக்க, மனை செய்யாமை - மனையெடா மையும், (ஆகிய இவை நன்மையென்று சொல்லுவர் பெரியோர்), எ-று.

க-ரை. தவத்தை யழிக்காமையும், அடைந்தாரை யாக்குதலும், பகுத்துண்டலும், கன்றுசெத்தபசுவைப் பால்கறவாமையும், மன்று சார்வாக மனையெடாமையும் நற்செயல்களா மென்பதாம்.

வி-ரை. தவத்தையழித்தலாவது-தவத்திற்கு இடையூறு செய்தல். தவத்திற் கிடையூறுசெய்தல் மகாபாதகமாதலால் அழியாமை யெத்தவமும் என அதனை முற்கூறிவற்புறுத்தினர் பழியாமை-எதிர் மறைத் தொழிற்பெயரன்று. எதிர்மறை வினையெச்சம். இதுவும்

ஓரியாமையை யாத்தல் என்றும் விளைகொண்டு முதுகலை நன்று சால என்றதனால் பால கறவாமை யென்றது அதன் காப்பு பசுவி னிடத்தென்பது பெறப்பட்டது. மன்று - சபை. நீதித்தலம் எனி னுமாம். மனைசெய்தல-வீடெடுத்தல் (வீடுகட்டுதல்). (௬௭)

நசைகொல்லார் நச்சியார்க் கென்றுங் கிளைஞர்
மிசைகொல்லார் வேளாண்மை கொல்லா—ரிசைகொல்லார்
பொன்பெறும் பூங்குணங்கின் மென்முலையாய் நன்குணர்ந்தா
ரென்பெறினுங் கொல்லா ரியைந்து.

ப-ரை. நச்சியார்க்கு - தம்மை விரும்பினவார்கு, நசை - விருப் பத்தை, என்றும் - எக்காலத்தும், கொல்லார் - கொல்லமாட்டார்; கிளைஞர் மிசை - தங்கிளைஞர் மிசையுமிசையை, கொல்லார்-கொல்ல மாட்டார்; வேளாண்மை கொல்லார் - உபகாரத்தைக் கொல்லமாட் டார்; இசை கொல்லார் - தமக்குவரும் புகழைக் கொல்லமாட்டார்; நன்கு உணர்ந்தார் - அறத்தை யறிந்தவர், என்பெறினும் எவ்வின் பத்தைப் பெறலாயிருப்பினும், இயைந்து - மனமிசைந்து, கொல் லார் - ஒருயிரையுங் கொல்லமாட்டார், பொன் பெறும்-பொன்னிற த்தைப்பெற்ற, பூ - அழகாகிய, சுணங்கின் - தேமலையுடைய, மெல் முலையாய - மெல்லிய தனங்களையுடையாளே, எ-று.

க-ரை நன்குணர்ந்தார், நசைகொல்லார், கிளைஞர்மிசைகொல் லார், வேளாண்மை கொல்லார், இசைகொல்லார், ஒருயிரையுங் கொல்லார் என்பதாம்.

வி-ரை. நசை - விருப்பம். கொல்லல் - கெடுத்தல். கிளைஞர் - உறவினர். மிசை - மிசையப்படுவது (சோறு); மிசைதல் - உண்டல். வேளாண்மை - ஒருவர் தமக்குச் செய்தநன்றி, என்பெறினும் என் றது எவ்வகைப்பட்ட மேம்பாட்டினைப் பெறலாயிருப்பினு மென்ற

படி. பொருட்பெருஞ் சுணங்கின் மென்முலையாய் என்றது மகடூஉ முன்னிலை. நந்த என்றது தருமத்தை, அதனினுமிக்க நன்மை பயப்பதொன்றின்மையான். (அ)

நீண்டநீர் காடு களர்நிவந்து விண்டோயு
மாண்ட மலைமக்க ளுள்ளிட்டு—மாண்டவ
ராய்ந்தன வைந்து மரணுடையானை
வேந்தனாக் காட்டல் விதி.

11-ம் பா. நீண்ட நீர் - மிகுந்த நீரும், காடு - காடும், களர் - சேறும், நிவந்து விண்தோயும் - உயர்ந்து ஆகாயத்தைத் தொடுகின்ற, மாண்ட மலை - பெரிய மலையும், (மாண்ட) மக்கள் - மாட்சிமைப்பட்ட காலாட்களும், உள்ளிட்டு - அகப்படுத்து, மாண்டவர் - பெரியோர், ஆய்ந்தன - ஆராய்ந்து தெரிந்தனவாகிய. ஐந்தும் - இவ்வைந்தினையும், அரண் ஆக உடையானை - தனக்கு அரணாக உடையவனை. வேந்தன் ஆக் காட்டல் - அரசனாக நியமித்தல், விதி - விதியாகும், எ-று.

க-ரை நீர், காடு, சேறு, மலை, காலாட்கள் என்னுமிவ் வைந்தனையும் அரணாக வுடையவனை அரசனாக நியமித்தல் விதியாகு மென்பதாம்.

வி-ரை நீண்ட நீர் - ஆழ நீளங்களுள்ள நீர், காடு - குறுங்காடு பெருங்காடுகள். களர் - காலாழுஞ் சேற்றுநிலம். மாண்டமலை - 'விசும்பிற் றுச்சோலி நெறியன்ன சினநெறிமேல் மறைதாங்க, கசும்பிற் றன்னளியான் றுதைந்தா லொக்குமைய மெய்யே, இசும்பினிற் சிறைக்கு மேற்கரிது'' என்றபடியே, பகைவரணுகாமை வெருவி யோட்டெடுத்தற் குரியமலை. மாண்டமக்கள் - போர்த்தொழிலிற் கைவந்தமக்கள். மாண்டவர் - கல்வி கேள்வி யறிவொழுக்கங்களிற் சிறந்தவர். மாண் தகவர் எனப்பிரித்து, மாட்சிமைப்பட்ட தவத்தினை

யுடையவா னெனுரைத்தலாம். மாண்ட என்னும் அடை மரத்துக்குக் கூட்டப்பட்டது. அரண் - காவல் விதி - முறைமை. (௧௯)

பொச்சாப்புக் கேடு பொருள்செருக்குத் தான்கேடு
முற்றாமை கேடு முரண்கேடு—தெற்றெனத்
தொழின்மகன் றனோடு மாறினென்றும் உழு
மகற்குக் கேடினுரை.

ப-ரை. பொச்சாப்பு கேடு - மறதி கேடாம், பொருள் செருக்கு கேடு - பொருளை மிகுதியாயுடைமையாற் களிக்கல் கேடாம், முற்றாமை கேடு - ஞான அறிவு முதிராமை கேடாம், முரண் கேடு - பிறரொடு மாறுபடுதல் கேடாம்; தெற்ற - தெளிவாக, தொழின் மகன் றனோடு - தனக்குத் தொழில் செய்யு மகனோடு, மாறு இன் - மாறுபட்டுச் சிறவாமையின், என்றும் - எப்பொழுதும், உழுமகற்கு - உழுமகனுக்கு, கேடின் உரை - கேடாகச் சொல்லப்பட்டவை, எ-று.

க-ரை. மறதி, பொருட்செருக்கு, பேரறிவின்மை, முரண், தொழின்மகனோடு மாறுபடல் இவ்வைந்தும் உழுமகனை உடையவாயின, அவன் கெட்டொழிதல் திண்ணமென்பதாம்.

வி-ரை. பொச்சாப்பு - கடைப்பிடியின்மை, கடைப்பிடி - கருமமுடிக்குந் துணிவு. பொருள் செருக்கு - பொருள் மிகுதியுடைமையானவரும் செருக்கு. செருக்கு - களிப்பு. செருக்குத்தான் கேடு என்பதில் தான் அசை. தொழின்மகன்றனோடு என்பதில் தன சாரியை. முற்றல் - அறிவு முதிர்தல். முரணல் - பகைத்தல். தொழின் மகன் - வேலைக்காரன். மாறுபடல் சிறத்தற்காகாதலால், மாறின் என்பதற்கு மாறுபட்டுச் சிறவாமையின் எனப்பொருள் கூறலாயிற்று. உழுமகன் - உழுதொழில் செய்து வாழுமகன். கேடினுரை - கேடாகச் சொல்லுக எனப் பொருள்படலால் இன் அல்வழிச்சாரியை (௨0)

கொல்லாமை நன்று கொலைதீ தெழுத்தினைக்
கல்லாமை தீது கதந்தீது — நல்லார்
மொழியாமை முன்னே முழுதுங் கிளைஞர்
பழியாமை பல்லார் பதி.

ப-ரை. கொல்லாமை நன்று - ஒருயிரையுங் கொல்லாமை நன்மையாம்; கொலை தீது-கொல்லுதல் தீமையாம்; எழுத்தினை கல்லாமை தீது-எழுத்தைக் கற்றுக்கொள்ளாமை தீமையாம்; கதம் தீது - பிறரைக் கோபித்தல் தீமையாம்; நல்லார் மொழியாமை முன்னே - அறிவுடையார் தமக்குச் சொல்வதற்கு முன்பே, கிளைஞர் முழுதும் பழியாமை - தன்னைச் சேர்ந்தவரெல்லாரும் பழியாதவழி யொழுகுவான், பல்லார் - பலர்க்கும், பதி - இறைவனாதற்குரியன், எ-று.

க-ரை. ஒருயிரையுங் கொல்லாதிருத்தல் நன்மை, கொல்லுதல் தீமை, எழுத்தைக் கல்லாமை தீமை, கோபம் தீமை, அறிவுடையார் சொல்வதற்கு முன்பே ஒருவனாலும் பழிக்கப்படாத நல்வழியில் நடத்தலையுடையோன் பலர்க்கும் இறைவனாயிருத்தற்குரியன் என்பதாம்.

வி-ரை. "அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல், பிறவினை யெல்லாந் தரும்."

"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங், கொல்லாமை சூழு நெறி."

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற், செல்லா துயிருண்ணுங் கூற்று."

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்கதான்பிறிது, இன்னுயிர் நீக்கும் வினை."

என்றற் றொடக்கத் தான்றோர் செய்யுட்களான் மிகச் சிறந் தெடுத்துக் கூறப்பட்டமையான், இவரும் 'கொல்லாமை நன்று' என்றார். கொலை - தொழிற்பெயர். எழுத்தினைக் கல்லாமை - வித்தையைக் கல்லாமை. கதம் - கோவம். பதி - தலைவன். (௬௧)

உண்ணாமை நன்றவா நீக்கி விருந்துகண்மா
றெண்ணாமை நன்றிகழ் தீதெளியா—ரெண்ணின்
னரியரா வார்பிறரிற் செல்லாரே யுண்ணார்
பெரியரா வார்பிறர் கைத்து.

ப-ரை. அவா நீக்கி - (துறந்து) அவாவினை யொழித்து, உண்ணாமை - உண்ணாது நோற்றல், நன்று - நன்மையாம்; விருந்து விருந்தினரை, கண்மாறு எண்ணாமை - கண்மாறுதல் நினையாமை, நன்று - நன்மையாம்; எளியார் இகழ்தல் - தம்மி னெளியாரை யிகழ்ந்துரைத்தல், தீது - தீமையாம்; எண்ணின் - ஆராயுமிடத்தில், அரியர் ஆவார் - பெறுதற் கரியராவார் (யாரெனின்), பிறர் இல் செல்லாரே-பிறரில்லாளை விரும்பி அவரிடத்திற் செல்லாதவரே; பெரியர் ஆவார் - பெரியராவார் (யாரெனின்), பிறர் கைத்து உண்ணார் - பிறர்பொருளை யுண்ணாதவரே, எ-று.

க-ரை. ஆசை யொழித்துத் துறந்து உண்ணாது நோற்றல் நன்மை; விருந்தினரைக் கண்ணோட்டஞ் செய்தல் நன்மை; எளியாரை யிகழ்தல் தீமை; பிறர்மனை நோக்காதவர் அரியர்; பிறர்பொருளுண்ணாதவர் பெரியர் என்பதாம்.

வி-ரை. உண்ணாமை நோற்றற்கே யாதலால், உண்ணாமையென்பதற்கு உண்ணாது நோற்றல் என்றுரை வரையலாயிற்று. விருந்து - பண்பாகுபெயர். கண்மாறெண்ணாமை - கண்ணோட்டஞ் செய்தல். எளியார் இகழ்தல் என்றமையால் தம்மினெளியா ரென்பது தானே பெறப்பட்டது. இல் - இடவாகுபெயர். கைத்து - பொருள் (பொருள்). (௬௨)

மக்கட் பெறுதல் மடனுடைமை மாதுடைமை
யொக்க வுடனுறைத லூணமைவு—ஒக்க
வலவலை யல்லாமை பெண்மகளிர்க் கைந்துந்
தலைமகனைத் தாழ்க்கு மருந்து.

ப-ரை. மக்கள் பெறுதல் - தான் மக்களைப் பெறுதலும், மடன் உடைமை - அடக்க முடைமையும், மாது உடைமை - அழகுடைமையும், ஒக்க உடன் உறைதல் - (கணவனது) கருத்துக்கிசைய அவனோடுறைதலும், ஊண் அமைவு - (அவனுண்ணும்) உணவை விரும்புதலும், ஒக்க - கூடிய, ஐந்து - ஐந்து குணங்களும், அலவலை அல்லாமை - அற்ப காரியங்களை விரும்பாமையால் பெண் மகளிர்க்கு - பெண்டிர்க்கு, தலைமகனை - தம் கொழுநனை, தாழ்க்கும் - தம்மிடத்தில் வணக்குகிற, மருந்து - மருந்தாகும் எ-று.

க-ரை மக்கட்பேறும், அடக்க முடைமையும், அழகுடைமையும், கணவனுடைய கருத்துக்கிசைய அவனோடுறைதலும், அவனுண்ணும் உணவை விரும்புதலும் ஆகிய இவ்வைந்து குணங்களும் பெண்டிர்க்கு இருக்குமாயின், அவை அவர் கணவரை வணக்கும் மருந்தாகும் என்பதாம்.

வி-ரை மகளிர்க்கு மக்கட்பேறுபோலச் சிறந்ததொன்றின்மையான் அதனை முற்கூறினார். மடன் - மடம் என்பதன் போலி, இது அறியாமையெனப் பொருள்படுவதாயினும் இங்கு அடக்கமெனப் பொருள்பட்டது. மாது-விருப்பம், அது இங்கு விருப்பத்தைத் தருவதாகிய அழகை யுணர்த்திற்று. ஊணமைவு - கணவன் உண்டு எஞ்சின மிச்சிலையுண்ண விரும்புதல். அலவலை-அற்பகாரியம். தலைமகன் - ஒருசொல், இது கணவனென்னும் பொருட்டு. தாழ்த்தல் - வணக்குவித்தல். (௩௩)

கொண்டான் கொழுந னுடன்பிறந்தான் றன்மாமன்
வண்டார்பூந் தொங்கன் மகன்றந்தை—வண்டாரா
யாப்பார்பூங் கோதை யணியிழையை நற்கியையக்
காப்பார் கருது மிடத்து.

ப-ரை. கொண்டான்-கணவனும், கொழுநனுடன் பிறந்தான்-கணவனுடன் பிறந்தவனும், தன் மாமன் - தன்மாமனும், வண்டு ஆர் - வண்டுகள் மொய்க்கின்ற, பூ தொஙகல் - புஷ்பமாலையை யணிந்த, மகன் - மகனும், தந்தை - தந்தையும், யாப்பு ஆர் - தொடுத்தலமைந்த, பூ கோதை - மலர் மாலையை யணிந்த, அணியிழையை - ஒருமாதை, கருதுமிடத்து - நினைக்குமிடத்து, நன்கு இயைய - நன்மையுண்டாக, காப்பார் - காப்பவராவர், வண்தாராய் - வளவிய பூமாலையை யுடையவனே, எ-று.

க-ரை. கணவன், கணவனுடன் பிறந்தவன், மாமன், மகன், தந்தை, இவ்வைவரும் ஒரு மாதைக் கற்புக்கழிவு வராமற் காப்பவராவர் எனபதாம்.

வி-ரை. வண்டாராய் என்றது மகடூஉ முன்னிலை. வண்டார் பூநதொஙகன் மகன் என்றமையால அறிவறிந்த மகனெனக்கொள்க. அணியிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர்; ஆபரணமணிந்த பெண்ணென்பது பொருள். நன்கியையக் காத்தலாவது - கற்பாகிய நன்மை யமையக் காத்தல், இது சிறைக்காவல். யாப்பு - தொழிற்பெயர்; கட்டுதலென்பது பொருள். கோதை - மாலை. (ருச)

ஆம்பல்வாய் கண்மனம் வார்புருவ மென்றைந்து
தாம்பல்வா யோடி நிறைகாத்த—லோம்பார்
நெடுங்கழைநீண் மூங்கி லெனவிகழ்ந்தா ராட்டுங்
கொடுங்குழை போலக் கொளின்.

ப-ரை. ஆம் - உண்டாகிய, பல் - பல்லும், வாய் - வாயும், கண் - கண்ணும், மனம் - மனமும், வார் புருவம்-நீண்டபுருவமும், என்ற ஐந்தும் - என்று சொல்லப்பட்ட வுறுப்பைந்தையும் (கண்டு), தாம் பல்வாய் ஒடி - தாம் பலவிடங்களிலோடி, நிறை காத்தல் ஓம் பார் - தமது நிறையைக் காவாத ஆடவர், ஆட்டும் - அசைவிக்கிற, கொடுங்குழை - கொடுங்குழை யணிந்த பெண்ணை, நெடு கழை நீள் மூங்கில் என - நெடிதாய்த் திரண்ட நீண்மூங்கில்போலக் கருதி, இகழ்ந்தார் - இகழ்ந்தாராய், போல - அமமூங்கிலைப்போல, கொ ளின - கொள்வாராயின், (அவ்வாடவர் நிறைகாத்த லோம்புவர்) எ-று.

க-ரை. பல்லும், வாயும், கண்ணும், மனமும், புருவமும், ஆகிய ஐந்துறுப்பையும் உடைய பெண்களை மூங்கில்போலக் கருதி யிகழ்ந்த ஆடவர், தமது நிறை காப்பவராவர் என்பதாம்.

வி-ரை. மாதரை மூங்கில்போலக்கொண் டிகழ்த லாவது, மூங்கிலிலுள்ள முத்து அவர் பல்லாகவும், மூங்கிலின் குழல் அவர் வாயாகவும், மூங்கிலின்கண் அவர் கண்ணாகவும், மூங்கிலின் பொய்ப் பட்ட வுள்ளம் அவர் மனமாகவும், மூங்கிலின் வில் அவர் புருவ மாகவும் கொண்டிகழ்தல். இவ்வகையாய்க் கருதினால் அவர்மே லன்பு நிகழாது வெறுப்புண்டா மென்றதாயிற்று. குழல் - மூங்கிலி னுட்புரை. கண்-மூங்கிற்கணு. உள்ளம்-உள்ளிடம். (ருரு)

பொன்பெறுங் கற்றான் பொருள்பெறு நற்கவி
யென்பெறும் வாதி யிசைபெறு—முன்பெறக்
கல்லார்கற் றாரினத் தரல்லார் பெறுபவே
நல்லா ரினத்து நகை.

ப-ரை. கற்றான் - கற்று வல்லவன், பொன் பெறும் - பொன் னைப் பெறுவான்; நல் கவி - பாடவல்லவன், பொருள் பெறும் -

(அரசனால்) எல்லாப் பொருள்களையும் பெறுவான்; வாதி - வாது செய்து வெல்லவல்லவன், எனபெறும்-எதுபெறுவானெனின், இசை பெறும் - (வென்றான் என்னும்) புகழைப் பெறுவன்; முன்பெற சால முண்டாக, கல்லார் - (கல்வி) கல்லாதாரும், கற்றார் இனத் தர் அல்லார - கற்றாரினத்த ரல்லாதாரும், நல்லார் இனத்து - நல்லோர் கூட்டத்தினிடமே, நகை பெறுப - அவரால் நகைக்கப்படு தலைப் பெறுவர், எ-று.

க-ரை. கற்றுவல்லவர் பொன்பெறுவன்; கவிபாட வல்லவன் அரசனால் நன்குமதிக்கப்பட்டு அவனு லெல்லாப் பொருள்களையும் பெறுவான்; வாதுசெய்து வென்றவன் புகழ்பெறுவன்; கல்லாதவ ரும், கற்றாரினத்த ரல்லாதாரும் நல்லோர்களால் நகைக்கப் பெறு வர் என்பதாம.

வி-ரை. கவியேற்றுக் கொள்ளுதற் குரியவன் அரசனாதலால் நற்கவி பொருள்பெறும் எனபதற்கு நல்ல கவிபாட வல்லவன் அரச னால் எல்லாப் பொருள்களையும் பெறுவான் என்று பொருள் கூற லாயிற்று. வாதி - தர்க்கவாதஞ் செய்பவன். முன்பெற - இளமைச் காலத்தில் கல்லார் என்பதற்குச செயப்படு பொருளாகிய கல்வி வருவிக்கப்பட்டது. நகை-நகைக்கப்படுதல். நல்லார் என்றது கற்று வல்ல பெரியோரை. (நக)

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—பொல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தா
னுயி னழித லறிவு.

ப-ரை. நல்ல - (பிறர்செய்த) நல்லனவற்றை, வெளிப்படுத்து வெளியாக்கி, தீய - (பிறர்செய்த) தீயனவற்றை, மறந்தொழிந்து - நினையாது மறந்தொழிந்து, உயிர்க்கு - (இடையூறு நேரிட்ட) பிற

வுயிர்களுக்கு, ஒல்லை - விரைவில், ஊற்றங்கோல் ஆகி - ஊன்றுகோலாகி, ஒல்லும் எனின் - தனக்கியலுமாயின், பிறர் பொருள்கண் - பிறர்பொருளிடத்தில், மாயம் - வஞ்சனைசெய்தலை, மாற்றுக - ஒழிக; மானத்தால் - மானத்தின்பொருட்டு, அழிதல - தான் சாதலை, ஆயின் - (ஒருவன்) ஆராய்வனாயின், அறிவு - (அவனுக்கதுவே) அறிவாவது, எ-று.

க-ரை. பிறர் செய்த நன்மையை வெளிப்படுத்தித், தீமையை மறந்து, பிறவுயிர்களுக் கிடையூறு நேரிட்டால் அவ்விடையூற்றை யொழித்து ஊன்றுகோலாகி, பிறர்பொருளை வஞ்சித்த லொழிந்து, மானத்தின்பொருட்டுச் சாதலே நன்மையென் றொருவன் ஆராய்வானாயின், அதுவே அவனுக்கறிவாவது என்பதாம்.

வி-ரை. மறந்து என்றது மறந்தொழிந்து என்றமையால் மனத்து நினைத்தலுமாகா தென்றதாயிற்று. ஊற்றங்கோல் - ஊன்றுகோல். ஒல்லுதல் - இசைதல். ஆய்தல் - ஆராய்தல். மானத்தால் என்பதில் ஆல் என்னுமூன்றுவது நான்காவதன் பொருட்டுப் பொருளில் வந்தது. (௫௭)

தன்னிலையுந் தாழாத் தொழினிலையுந் துப்பெதிர்ந்தா
ரின்னிலையு மீடி லியனிலையுந்—துன்னி
யளந்தறிந்து செய்வா னரசமைச்சன் யாதும்
பிளந்தறியும் பேராற்ற லான்.

ப-ரை. தன் நிலையும் - தனது நிலைமையினையும், தாழா - தாழ்தலில்லாத, தொழில் நிலையும் - (தான் தொடங்கிச் செய்யும்) வினையினது நிலைமையினையும், துப்பு - வலியினால், எதிர்ந்தார் - (தன்னோடு) எதிர்த்தவராகிய பகைவரிடத்துளதாகிய, இன் நிலையும் - இனிய நிலைமையினையும், ஈடு இல் - கேடில்லாத, இயல் நிலையும் - உலகவழக்கு நிலைமையினையும், துன்னி - முன்புகுந்து, அளந்து

அறிந்து - ஆராய்ந்தறிந்து, செய்வான் - செய்வோன், அரசன் - அரசனாவான்; யாதும் - எல்லாவற்றையும், பிளந்து அறியும் - பாகுபடுத்தறிகின்ற, பேராற்றலான் - பெரிய ஆற்றலையுடையவன், அமைச்சன் - அமைச்சனாவான், எ-று.

க-ரை. தனது நிலைமை, தான் செய்யத் தொடங்கின வினையினது நிலைமை, வந்தெதிர்ந்த பகைவரது நிலைமை, உலகியலின் நிலைமை, என்பவற்றையாராய்ந்து செய்பவனே அரசனாவான்; இவற்றையேயன்றி மற்றெல்லாக் காரியங்களையும் பகுத்தறிய வல்லவனே அமைச்சனாவான் என்பதாம்.

வி-ரை. தாழ்தல் - தாமதித்தல். துப்பு - வலி. ஈடு - அழிவு. இயல் - உலகியல். அளத்தல் - பிரமாணங்களால் அளவிடல். யாதும் என்றது அரசனுக்குச் சொன்ன நான்கேயன்றி மற்றெல்லாவற்றையு மென்றபடி. ஆற்றல் - வினைமுடிக்குந் திறம். (௫அ)

பொருள்போக மஞ்சாமை பொன்றுங்காற் போந்த
வருள்போகா வாரறமென் றைந்து—மிருடீரக்
கூறப் படுங்குணத்தான் கூர்வேல்வல் வேந்தனாற்
றேறப் படுங்குணத்தி னான்.

ப-ரை. பொருள் - பொருளும், போகம் - இன்பமும். அஞ்சாமை - (இடுக்கண் வந்தால் அகற்று) அஞ்சாமையும், பொன்றுங்கால் - பிறிதோருயிர் அழியவந்த விடத்து, போந்த அருள் - மிக்க அருளும், போகா - நீங்காத, ஆர் - அரிய, அறம் - அறமும், என்ற ஐந்தும் - என்று சொல்லப்பட்ட இவ்வைந்தும், இருள் தீர - குற்றந்தீர, கூறப்படும் - சொல்லப்படுகிற, குணத்தான் - தன் குணங்களாக வுடையவன், கூர் - கூரிய, வேல் - வேற்படையையுடைய, வல் வேந்தனால் - வலிய அரசனால், தேறப்படும் - (ஒரு கருமத்தின்

மேற் செலுத்தத் தக்கவனென்று) தெளியப்படுகிற, குணத்த னென் - குணத்தை யுடையவனென்று சொல்லப்படுவான், எ-று.

க-ரை. பொருளும்.இன்பமும்.இடுக்கண்வந்த காலத்து அதற் கஞ்சாமையும், பிறிதோருயிர் அழியவந்தவிடத்து அதற் கிரங்கும் அருளுடைமையும், அருமையாகிய அறமும், என்று சொல்லப்பட்ட இவ்வைந்தனையு முடையவன், அரசனு லொருகருமத்தின்மேற் செலுத்துதற் குரியனுவான் என்பதாம்.

வி-ரை. இன்பமுதலியவற்றை நுகர்தல் பொருளில்வழி கூடா மையின், பொருளை முன்வைத்தார். அஞ்சாமை யென்றது இடுக்க ணழியாமையை. இடுக்க ணழியாமையாவது - வினையினகண் முயல் வான், தெய்வத்தானுதல், பொருளின்மையானுதல், மெய்வருத்தத் தானுதல் தனக்கிடுக்கண் வந்துழி, அதற்கு மனங்கலங்காமை "இடு க்கண் வருங்கா னகுக வதனை, அடுத்தூர்வ தஃதொப்ப தில்" என பது திருக்குறள். அறம்போலச் சிறந்தது மக்களுயிர்க்குப் பிறி தொன்றின்மையான் 'ஆரறம்'என்றார். என்றைந்தும் என்பதில், சிலே மொழி யீற்றகரம் தொகுத்தல். தேறல்-தெளிதல் (நட்புதல்). (கரு)

நன்புலத்து வையடக்கி நாளுமா டோம்போற்றப்
புன்புலத்தைச் செய்தெருப போற்றியபின்—னின்புலத்தின்
பண்கலப்பை யென்றிவை பாற்படுப் பானுழுமேவான்
நுண்காப்பை நூலோது வார்.

ப-ரை. நன் புலத்து - விளைபுலத்திலுள்ள, வை-வைக்கோலை, அடக்கி - (தன்னிடத் துள்ளதாகத்) திரட்டி, நாளும்-நாள்தோறும், மாடு-உழுபகடுகளை, போற்றி-பாதுகாத்து, புன் புலத்தை - புல்லிய புலத்தை, செய்து - நன்புலமாகத் திருத்தி, எருபோற்றியபின - எருவினுல் அதனைப் போற்றின பின்பு, பண் - பண்ணப்பட்ட, கல

ப்பை என்றிவை - கலப்பை யென்பவைகளை, இன்புலத்தின்பால் படுப்பான் - நன்புலத்தின் பகுதிப் படுப்பவன், உழவோன் - உழவ னென்று (சொல்லுவர்), நுண் - நுண்ணிய, கலப்பை நூல் - உழவு நூலை, ஓதுவார்-ஓதியுணர்ந்த அறிவுடையார், எ-று.

க-ரை. விளை புலத்திலுள்ள வைக்கோலைத் திரட்டித் தன்னி டத்திற் சேர்த்து, உழுபகடுகளைக் காப்பாற்றி, புன்புலத்தை நன் புலமாகத் திருத்தி, எருப்பெய்த பின்பு, கலப்பை முதலியவற்றை அந்த நன்புலத்தின்பாற் படுப்பவன் உழவனென்று சொல்லுவா உழவுநூலோதி யுணர்ந்த அறிவுடையோர் என்பதாம்.

வி-ரை. நன்புலம்-நன்செய், இதனை நஞ்சை யென்பது உலக வழக்கு. அடக்கல்-தன்னிடத்திற் சேர்த்தல். மாடோ என்றுமோகா ரம் இசைநிறை. புன்புலம் - புன்செய, இதனைப் புஞ்சை யென்பது உலகவழக்கு. எருப்போற்றல்-எருப்பெய்தல். செய்தல் - திருத்தல். இன்புலம் - நன்செய; இது இன்பந்தருதலால் 'இன்புலம்' என்றார். என்ற இவை யெனற்பாலது என்றிவையென நிலைமொழி யீற்றகரம் தொகுத்தலாயிற்று. உழவோன் என்பதனீற்றில் என்று என ஒரு சொல்வருவித் துரைக்கப்பட்டது. (௫0)

ஏலாமை நன்றீதல் தீதுபண் பில்லார்க்குச்
சாலாமை நன்றுநூல் சாவினுந் — தாலாமை
நன்று தவறிரி செய்தற் றெவ்பாமை நீ
யின்று நாறியாங் கன்றிலம்.

ப-ரை. ஏலாமை - (ஒருபொருளை ஒருவரிடத்தீ சென்றிரந்து அவர் கொடுக்க) ஏற்றுக்கொள்ளாமை, நன்று - நன்மையாம்; பண்பு இல்லார்க்கு - நற்குண மில்லாதவர்க்கு. ஈதல் - (அவர் வேண்டிய தொருபொருளை) கொடுத்தல், தீது - தீமையாம்; நூல் சாலாமை - நற்குண மில்லாதவர்க்கு நூல்களை) நிரம்ப அறிவியாமை, நன்று -

நன்மையாம்; சாயினும் சாலாமை நன்று - சாய்ந்தாலும் ஒருவன் சால்புடையனல்லாமை நன்மையாம்; நனி தவம் செய்தல் - மிகுதியாய தவஞ்செய்தல், தீது - தீமையாம், என்பாரை - என்று சொல்லுவோரை, இன்றுகாறு - இன்றளவும், யாம் கண்டிலம் - நாம் கண்டிலேம், எ-று.

க-ரை. ஒருபொருளை யொருவரிடத்துச் சென்று இரந்து அதனை யவர் கொடுக்க ஏற்றுக்கொள்ளாமை நன்று; நற்குணமில்லாதவர்க்குக் கொடுத்தல் தீது, நற்குணமில்லாதவர்க்கு நூல்களை நிரம்பக் கற்பியாமை நன்று; ஒருவன் சால்புடையனல்லாமை நன்றென்றும், மிக்க தவஞ்செய்தல் தீதென்றும் சொல்லுவோரை இதுவரையும் யாம் கண்டிலேம் என்பதாம்.

வி-ரை. ஏலாமை சாலாமை யென்பன எதிர்மறைத் தொழிற் பெயர்கள். இவற்றிற்குப் பகுதிகள் முறையே ஏல் சால் என்பன. பண்பு - குணம், அதுபற்றி நற்குணத்தைக் குறித்தது. சாலாமை யென்பது நிரம்பக் கற்பியாமை யெனவும் சால்புடைய னல்லாமை யெனவும் இருவகையாய்ப் பொருள் கொள்ளக்கிடந்தது. சாய்தல் - கெடுதல். தம்போல்வாரை யுளப்படுத்த 'யாம் கண்டிலம்' என்றார். 'இன்றுகாறு யாங்கண்டிலம்' என்றமையால் இனிக் காண்போமோ வென்னு மையம் நிகழ்தற் கிடமாயிற் றென்க. (சுக)

அரம்போற் கிளையடங்காப் பெண்வியக்குந் தொண்டு
மரம்போன் மகனுமாறாய் நின்று— பரம்போகக்
கள்ளநோய் காறு மயலேறு மாதுமே
உள்ளநோய் வேண்டா வுயிர்க்கு.

ப-ரை. அரம்போல் - அரம்போலத் தன்னைத் தேய்க்கின்ற, கிளை - உறவும், அடங்கா - தனக்கடங்காத, பெண் - மனைவியும், வியக்கத்தொண்டு - அடங்காதன செய்யும் அடிமையும், மரம்

போல் மகன் - மரம்போன்ற தன் புதல்வனும், மாறு ஆய் நின்று - மாறுபட்டு நின்ற, கரம்போல-நஞ்சுபோல, கள்ளம நோய்காறும் - வஞ்சனையாகிய நோயைச் செய்கிற, அயல் - அயலிருப்பும், ஐந்தும் - ஆகிய இவ்வைந்தும், ஆகும் எல் - உளவாயின், உயிர்க்கு - உயிர்களுக்கு, உள்ளநோய் - மற்றொரு மநோவியாதி, வேண்டா - வேண்டப் படாது, எ-று.

க-ரை. அரம்போலத் தன்னைத் தேய்க்கின்ற உறவும், தனக் கடங்காத மனைவியும், அடங்காதன செய்யும் அடிமையும், மரம்போன்ற தன் புதல்வனும், நஞ்சுபோல நோயைச் செய்கிற அயலிருப் பும், ஆகிய இவ்வைந்தும் ஒருவனுக் குளவாயின், அவனுயிர்க்கு வேறொரு மநோவியாதி வேண்டப்படாது என்பதாம்.

வி-ரை. அரம்போல என்றமையால் அதன்றொழிலாகிய தேய்த்தல் வருவிக்கப்பட்டது. கிளை - தொழிலாகுபெயர். தொண்டு - பண்பாகுபெயர். மரம்போல மகன் என்றது மரம்போல் அறிவில் லாதமகன என்றபடி. கரம் - நஞ்சு. அயல் - அயன்மை, இது பண் பாகு பெயராய அயலிருப்பாரை யுணர்த்திற்று. எல் - எனின் என் பதன் மரூஉ. உள்ளம - உள்ளிடம், அது அங்குள்ள மனத்தை யுணர்த்தலால் இடவாகுபெயர். உயிர் என்றது மக்களுயிரை அரம் போற் கிளை முதலியவற்றை யுணர்தற்குரிய ததுவே யாதலான். கிளை முதலியவற் றிறுதியில் எண்ணும்மைகள் தொக்கன. (சுஉ)

நீரற நன்று நிழனன்று தன்னில்லுட்
பாரற நன்றுபாத் துண்பானேற்—பேரற
நன்று தளிசாலை நாட்டற் பெரும்போக
மொன்றுமாஞ் சால வுடன்.

ப-ரை. நீர் அறம் - நீரறஞ் செய்தல், நன்று - நன்மையாம்; நிழல் நன்று - நிழலறஞ்செய்தல் நன்மையாம்; தன் இல்லுள் - தன்

வீட்டில், பார் அறம் நன்று - பிறர் உறைய இடங்கொடுத்தலாகிய அறம் நன்மையாம்; பாத்து - பிறவுயிர்களுக்குப் பகிர்ந்து, உண்பானேல் - உண்பானாயின், பேர் அறம் - (அது) பெரிய அறமாம்; தளி சாலை-கோயிலோடு சாலைகளை, நாட்டல்-நிலைபெறுவித்தல், நன்று - நன்மையாம்; (இவ்வைந்தனையுஞ் செய்தவர்க்கு) பெரும்போகம் - பேரின்பம், உடன் - உடனே, சால - மிகுதியாக, ஒன்றும் - உண்டாகும், எ-று.

கருத்துரை. நீர் அறம், நிழலறம், பாரறம், பாத்துண்டலாகிய அறம், கோயிற்சாலைகளை நிலைபெறுவித்தலாகிய அறம், என்னும் இவ்வைந்தனையுஞ் செய்தார்க்கு உடனே பேரின்பம் வாய்க்கும் என்பதாம்

விசேடவுரை. நீரறம் - தண்ணீர் வார்த்தலாகிய தருமம். நிழலறம் - சோலை முதலியவற்றால் நிழலையுண்டாக்கி அதுவாயிலாக வருவோரது இளைப்பாற்றுதலாகிய தருமம். பாரறம் - தன் வீடு நாடி வருவோர்க்குத் தங்கியிருக்குமிடங் கொடுத்தலாகிய தருமம். பாத்துண்டல் - உண்டற்குரிய எல்லாப் பொருள்களையும் பிறருக்குப் பகிர்ந்துண்டல். தளி-கோயில். சாலை - கோயிலைச்சார்ந்த சாலை நாட்டல் - அழியாது நிலைபெறச் செய்தல். ஒன்றுமாம் என்பதில் ஆம் அசையிடைச்சொல். "பணியுமா மென்றும் பெருமை சிறுமை, அணியுமாந் தன்னை வியந்து" என்றுந் திருக்குறளில் ஆமிரண்டும் அசை நிலைகளாப் வந்தமை காண்க. சால - உரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம்; இது ஒன்றும் என்னும் வினைகொண்டது. ()

பிடிப்பிச்சைப் பின்னிறை யையங்கூழ் கூற்றே
டெடுத்திரந்த வுப்பிச் துணையோ—டடுத்துடன்
சிறுபய மென்னார் சிதவலிப வீவார்
பெறுபயன்பின் சாலப் பெரிது.

ப-ரை பிடிப்பிச்சை - ஒரு பிடியுள்ளடங்குந்தம் பிச்சை, பின்னிரை - விரலிறையுள்ளடங்கும் பிச்சை, ஐயம் - உண்டோ இல்லையோ வென்றையப்படும் பிச்சை, கூழ் - கூழ்வார்த்தல், கூற்றோடு எடுத்திரந்த உப்பு - ஒருவன் சொல்லப்பட்ட உடுத்திரந்த உப்பு, இத்துணையோடு அடுத்த - இத்துணையும் பொருந்தி, சிறுபயன் என்றோ- சிறுப்பனைத் தருமென்றென்று நினையாதவராய், சித்தவலிப்பு - மனவுறுதியோடு, ஈவார் - கொடுப்பவர், பின் - பின்பு, பெறுபயன் - அடையும் பயன், சால பெரிது - மிகப்பெரிது, எ-று

க-ரை. பிடிப்பிச்சை முதலியவை சிறியவை, இவைதரும் பயனும் சிறியனவென்று நினையாது கொடுப்பவர், பின்பு பெறும்பயன் மிகப்பெரிது என்பதாம்

வி-ரை பிச்சை - பிச்சைச்சோறு. விரலிறை - விரற்சந்திலடங்கும் பிச்சை ஐயம் - சந்தேகம் கூழ் - மாச்சாதம் ஒடு - பிக்ஷாபாத்ரம் இத்துணை - இவ்வளவும். சித்தவலிப்பு - சித்வலிப்பெனத் தொகுத்தல் பெற்றது சித்தம் - மனம் பிடிப்பிச்சை முதலியவை தரும் பயன் சிறிதென றெண்ணாமல் மனவுறுதியோடு கொடுப்பவர் இக்கொடையால் பின்பு பெறும்பயன் மிகப் பெரிதெனப் திதனுற கூறப்பட்டது "இறப்பச் சிறிதென்னு தில்லென்னு தென்றும், அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க - முறைப்புச்சின், ஐயம்புகூடந் தவசி கடிஞைபோல், பைய நிறைத்து விடும்' என்பது நாலடியார் (௯௪)

வெந்தீக்காண் வெண்ணெய் மெழுகுநீர் சோமன்றுப்
பந்தன் மகற்சார்ந்த தந்தையென் —றைந்தினு
மொன்றுபோ லுண்ணெகிழ்ந் தீயிற் சிறிதெனினுங்
குன்றுபோற் கூடும் பயன்.

ப-ரை. வெம் தீ - வெப்பமாகிய நெருப்பை, காண் - கண்ட வெண்ணெய் - வெண்ணெயும், மெழுகு - மெழுகும், நீர் சோமன்

நீர் சேர்ந்தமண்ணும், உப்பு-உப்பும், அந்தம்-அழகையுடைய, மகன் சார்ந்த - மகனைத்தழுவிய, தந்தை - தகப்பனும், என்ற ஐந்தினுள் - என்று சொல்லப்பட்ட ஐந்தினுள்ளே, ஒன்றுபோல் - ஒன்றுபோல, உள நெகிழ்ந்து - (இரவலரைக்கண்டு) மனமிரங்கி, ஈயின் - ஒருவன் கொடுப்பானாயின், சிறிது எனினும்-(ஈயப்பட்டபொருள்) சிறிதாயினும், பயன் - (அதனுலுளதாகும்) பயன், குன்றுபோல் கூடும்-மலைபோல மிகப் பெரிதாய் வந்துசேரும், எ-று.

க-ரை. நெருப்பைக்கண்ட வெண்ணெய் முதலியபொருள்களி லொன்றைப்போல மனமுருகி இரவலர்க்கு வேண்டும்பொருள் சிறிதாய இனயந்தவளவிற் கொடுத்த வொருவனுக்கு அச்சிறுகொடையா லுண்டாகும்பயன் மலைபோல மிகப்பெரிதா மென்பதாம்.

வி-ரை. நெருப்பைக்கண்ட வெண்ணெய் மெழுகு என்பவை போலவும், நீர்சேர்ந்தமண் உப்பு என்பவைபோலவும், மகனைத் தழுவிய தந்தைபோலவும், இரவலரைக்கண்டு மனநெகிழ்ந்து ஒருவன் கொடுக்கும் பொருள் சிறிதாயினும் அக்கொடையால் அவனுக்குண்டாகும் பயன் மலைபோல மிகப்பெரிதா மெனபதிதனற் கூறப்பட்டது. வெண்ணெய் முதலியவற்றினிறுதியில் எண்ணும்மைகள தொக்குநின்றன. இவவாறு மன நெகிழ்ந்தியாத ஈகையாற் பயனில்லை யென்பதும் இதனாற்போந்த பொருள். காண் வெண்ணெய் - வினைத் தொகை நிலைத்தொடர். நெருப்பைக் காண்டலும் விரைந்துருகுவன வெண்ணெய் மெழுகுகளாதலால் அவற்றை முற்கூறினார். (கரு)

> குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்
> துளந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்டுப்
> பாகு படுங்கிணற்றோ டென்றிவ்வைம் பாற்படுத்தா
> னேகுஞ் சுவர்க்கத் தினிது.

ப-ரை. குளம் தொட்டு - குளத்தைக் கல்லி, கோடு பதித்து - மரக்காவைநட்டு, வழிசீத்து-வழிசீத்துத் திருத்தி, உள்ளம் தொட்டு-

(மேடாயின நிலங்களை)உள்ளே தோண்டி, உழுவயல் ஆக்கி-உழுவயலாகச்செய்து, வளம் தொட்டு-வளம்படத்தோண்டி, பாகுபடும் கிணறு ஏழு - பாகுபடுத்தப்பட்ட கிணறெடுக்கவோடுகூடி, என்ற இவ்வைம்பால் படுத்தான் - என்ற இந்த ஐந்து பகுப்பையுஞ் செய்தவன், சுவர்க்கத்து - சுவர்க்க லோகத்தில், இனிது - இனிதாக, ஏகும் - செல்வான், எ-று.

க-ரை. குளந்தொட்டுதல் முதலிய அறங்களைந்தனையும் செய்தவன், சுவர்க்கலோகத்தை யடைவா னென்பதாம்.

வி-ரை. தொடுதல் - தோண்டுதல். கோடு-மரக்கிளை, அது சினையாகுபெயராய் மரத்தை யுணர்த்தி, அது அவ்வாகுபெயராப் பதநாலை யுணர்த்தினமையால் இது இருமடியாகுபெயர். பதித்தல்- இருக்கச்செய்தல். உள்ளம் - உள்ளிடம். பாகுபடுதல் - பகுக்கப்படுதல். செய்யவேண்டிய பகுப்புகளெல்லாஞ் செய்தல். இனிது ஏகும் என்றது, இடையூறு ஒன்றுமின்றிப் பெரும்பாம்பாய் வீழ்ந்த நகுஷன்போலாது இடையூறின்றிச் செல்வான் என்றபடி. (௯௬)

போர்த்து முரிந்திட்டும் பூசியு நீட்டியு
மோர்த்தொரு பான்மறைந் துண்பானேல் — ஓர்த்த
வறமாமேற் சொற்பொறுக்க வன்றேற் கலிக்கட்
டுறவறமெய் பொய்யிலை யாமே வாய்.

ப-ரை. போர்த்தும் - முழுமெய்யும் தோன்றாமற் போர்த்தும், உரிந்திட்டும்-உச்சித்தலையைக் களைந்தும், பூசியும்-உடம்பு முழுதும் நீறுபூசியும், நீட்டியும்-சடையைநீட்டியும், ஓர்த்து ஒருபால்மறைத்து-ஆராய்ந்து உடம்பில் ஒரு பக்கத்தை மறைத்தும், உண்பான் - உண்டற்கு, மேய் ஓர்த்த - மேவி யாராய்ந்து கொண்டனவாகிய இவ்வேடங்களைந்தும், மேல் சொல் அறம் ஆம - மேலோர் சொல்லிய துறவறமே; பொறுக்க-(துறவறமாயின் பிறர்சொல்லிய கடுஞ்சொற்களை) பொறுத்துக் கொள்க; அன்றேல் - பொறாராயின், கலிக்கண் - இக்

கலிகாலத்தில், துறவறம் பொய் - துறவறம் பொய்யாம்; இல்லறமே வாய் - இல்லறமே மெய்யாம், எ-று.

க-ரை. முழுமெய்யுந் தோன்றாமற் போர்த்தல் முதலிய வேடங்களைக் கொண்டு மேலோர்சொல்லிய துறவறத்துக் குரியனவே யாயினும், பிறர்சொல்லுங் கடுஞ்சொற்களைப் பொறாராயின், அத்துறவறத்தாற் பயனில்லை, இல்லறமே பயனுடைத் தென்பதாம்.

வி-ரை. போர்த்தும் முதலிய வும்மைகள் எண்ணும்மைகளாதலால் மறைத்து என்பதனீற்றிலும் அவ்வும்மை சேர்க்கப்பட்டது. உண்பான் என்பதில் பான் எதிர்கால வினையெச்ச விகுதி. மேவியென்பது மேய் என்றாயது. வாய்மை - மெய், இது வாய் என ஈறு தொகுத்தலாயிற்று போர்த்தல் முதலிய வேடங்களாற் பயனில்லை. துறவறத்திற்குரிய பொறுமை யில்லையாயின் அத்துறவானது பொய்த்துறவேயென்ப திதனாற் போந்தபொருள். "உற்றநோய் நோன்றலுயிர்க்குறுகண் செயயாமை, அற்றே தவத்திற் குரு" என்பது திருக்குறள். (கஎ)

தான்பிறந்த வின்னினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற் பாடுணர்ந்து—தான்பிறராற்
சாவ வெனவாழான் சான்றோராற் பல்யாண்டும்
வாழ்க வெனவாழ்த னன்று.

ப-ரை. தான் பிறந்த இல் நினைந்து - தான் பிறந்த குடியை நினைத்து, தன்னை கடைப்பிடித்து - தன்னை நல்லொழுக்கத்தில் வழுவாதபடி கடைப்பிடித்து, தான் பிறரால் கருதற்பாடு உணர்ந்து - தான் பிறரால் மதிக்கப்படுதற்குரிய செய்கைகளை யறிந்து, தான் பிறரால் சாவ என வாழான் - தான் பிறரால் செத்தொழிக வென்று சொல்லும்படி யொழுகாது, சான்றோரால் - பெரியோரால், பல் யாண்டும் - பல வருடத்தளவும், வாழ்க என - வாழ்கவென்று,

சொல்லும்படி, வாழ்தல் - ஒருவன் உயிர் வாழ்ந்திருத்தல், நன்று - நன்மையாம், எ - று.

க-ரை. ஒருவன் தான் பிறந்த குடியின் பெருமையை நினைத்தல் முதலியவற்றை யுடையனாய உயிர்வாழ்தல் நன்மையா மென்பதாம்.

வி-ரை. இல் - குடி, இது இதன் பெருமையைக் குறித்தலால் முதலாகுபெயர். சடைப்பிடித்தல் - உறுதியாய்ப் பற்றுதல். வாழுநன் - முற்றெச்சம். சான்றோர் - கல்வியறி வொழுக்கங்களால் நிறைந்தவர், சால் என்பது இதன் பகுதி. 'சான்றோரால் பல்லாண்டும் வாழ்க வென' என்றது பெரியோர் ஒருவனது நல்லொழுக்கங் கண்டு மனமகிழ்ந்து இவன் இவ்வுலகத்தில் பல்லாண்டும் இனிது வாழ்ந்திருப்பானாகவென்று ஆசிகூறும்வண்ணம் என்றபடி. (சுஅ)

> நெடுக்கல் குறுக்கல் துறைநீர்நீ டாடல்
> வடுநீர் பகல்வா யுறையிய — வடுத்தீரா
> வாகுமந் நான்கொழித் தைந்தடக்கு வானின்
> வேகும்பம் வேண்டான் விடும்.

ப-ரை. (ஒருவன்) நெடுக்கல் - மயிரைச்சடையாக நீட்டுதலும், குறுக்கல் - மயிரைக் குறைத்தலும், துறைநீர் - கங்கை முதலாகிய நதித்துறைகளின் புண்ணிய தீர்த்தங்களில், நீடு ஆடல் - நெடிதாகப் போய் ஆடுதலும், வடுநீர் பகல் - குற்றம் நீங்கின பகற்காலத்தில், வாயுறை - உண்ணுதலும் என்று சொல்லப்படுகிற, வடுத்தீரா ஆகும் - குற்றம் நீங்காதனவாகிய, அ - அந்த, நான்கும் ஒழித்து - நான்கையு மொழித்து, ஐந்து அடக்குவானாயின் - ஐம்புலன்களையும் அடக்குவானாயின், (அவன்) வே - மயானத் தீயில் வேதற்குரிய, கும்பம் - குடம்போன்ற உடம்பினை, வேண்டான் விடும் - விரும்பாதவனாகி விட்டொழிவான், எ - று.

க-ரை ஒருவன் மயிரைச் சடையாக நீட்டுதல் முதலிய நான கையும் ஒழித்து, ஐம்புலன்களையும் அடக்குவானாயின் அவன் இந் தச் சரீரசம்பந்தத்தை யொழித்துப் பிறவியற்றவனாவான் என்ப தாம்.

வி-ரை நெடுக்கல் - பிறவினை நெடுக்கச்செய்தல் என்பது பொ ருள் குறுக்கல் என்பதுமது, குறுக்கச்செய்தல் என்பது பொருள் துறை - நீர்த்துறை வாயுறை - உணவு. ஐம்புலன்களாவன - சத்த பரிச ரூப ரச கந்தங்கள் வே • மூகனில்லத் தொழிற்பெயர், வேதல் என்பது பொருள் குடம் உடைந்தொழிதல்போல அழிந்தொழித லால் உடம்பைக் 'கும்பம்' என்றார் கும்பம் - உவமையாகுபெயர். வேண்டான் முற்றெச்சம். வேகும்பம் வேண்டான்-விடும்பிறவியில லாதவனாவா னென்றபடி "மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம், பழித்த தொழித்து விடின்" என்பது திருக்குறள். (சு கூ)

கொன்றான் கொலையை யுடன்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்—கொன்றதனை
யட்டா னிடவுண்டா னைவரினு மாகுமெனக்
கட்டெறிந்த பாவங் கருது.

ப-ரை. கொன்றான் - ஒருயிரைக் கொன்றவன், கொலையை உடன்பட்டான் - கொலைக்கஞ்சாமல் உடன்பட்டவன், கோடாது - நாணாமல், கொன்றதனை கொண்டான் - கொல்லப்பட்ட தோருயிர் நின்ற வுடம்பாகிய மாமிசத்தை விலைக்குக் கொண்டவன், கொழிக் குங்கால் - ஆராயுமிடத்து, கொன்றதனை அட்டான் - கொல்லப் பட்டதனுடைய ஊனைச்சமைத்தவன், இட உண்டான் - சமைத்த தனை யிடவுண்டவன (என்று சொல்லப்படுகிற', ஐவரினும்-இந்த ஐவ ரிடத்தும், கட்டு எறிந்த பாவம்-வரம்பழித்ததனா லுண்டாகிய பாவ மானது, ஆகும் என-நிகழும் என்று, கருது-நீ கருதுவாயாக, எ-று.

க-ரை. ஒருயிரைக்கொன்றவன், கொலைக்கு உடன்பட்டவன், கொன்றவனை விலைக்குக் கொண்டவன், அதனைச் சமைத்தவன், சமைத்ததனையுண்டவன் என்னும் இவ்வைவரும் பாவிகளென்பதாம்.

வி-ரை. கொலை - தொழிற்பெயர், கொல்லுதல் என்பது பொருள். உடன்படல்-சம்மதித்தல். கோடல்-நாணல். அஞ்சல். கொழித்தல் - ஆராய்தல். அடுதல் - சமைத்தல். கட்டெறிதல் - வரம்பு கடத்தல், மேலோர் கொலை செய்யலாகாதென விதித்த ஏற்பாட்டைக் கடந்தல். இதற்கு உதாரணம் : கொலைமறுத்தல், "கொன்றான் கொலச்சொன்னான் கூசவறுத்தானட்டான்" என்று முதற்குறிப்பினையுடைய செய்யுள். (எ0)

சிறைக்கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநா
ளுறைகிடந்தா ரொன்றிடையிட் டுண்பார்—சிறைக்கிடந்து
முற்றனைத்து முண்ணு தவர்க்கீந்தார் மன்னவராய்க்
கற்றனைத்தும் வாழ்வார் கலந்து.

ப-ரை. சிறை கிடந்தார் - சிறையின் கண் கிடந்தவரும், செத்தார்க்கு நோற்பார்-செத்தவர்க்கு நன்மைவேண்டி உண்ணாது நோற்பவரும், பலநாள் உறை கிடந்தார்-பலநாளும் தமது பிணிக்கு மருந்தாக உண்ணாது கிடந்தவரும், ஒன்று இடையிட்டு உண்பார் - ஒரு நாளிடையிட்டுண்பவரும், பிறை கிடந்து-பிறையா யிருந்து, முற்றனைத்தும் - அது நிரம்புமளவும், உண்ணாதவர்க்கு - உண்ணாதவரும் ஆகிய இவ்வைவருக்கும், ஈந்தார் - உணவு கொடுத்தவர்கள், மன்னவர் ஆய் - அரசராய்ப் பிறந்து, அனைத்தும கலந்து கற்று - எல்லா நூல்களையும் ஒருமிககக்கற்று, வாழ்வார் - நீடுவாழ்வார்கள், எ - று.

க-ரை. சிறைகிடந்தார் முதலிய ஐவருக்கும் உணவு கொடுத்தவர்கள் கல்வியறிவுள்ள அரசராய் நீடுவாழ்வார்களென்பதாம்.

வி-ரை. சிறை - சிறைச்சாலை, காவற்சாலை. உண்ணாது நோற் றல் - உபவசித்தல். பலநாளுறை கிடந்தார் - பலநாளும் உண்ணாது கிடந்தவர் (லங்கணஞ்செய்தவர்). ஒருநாளிடையிட்டுண்பார் - இரண்டு நாளுக்கோர்காம உண்பவர். பிறைக்கிடந்து முற்றனைத்து முண் ணார் - சாந்திராயண விரதங்காப்பவர், இவர் தவசிகளெனப்படுவர். வாழ்வார் என்றது பிறவியற்று என்று மொருதன்மையராய முத்தி யுலகில் வாழ்ந்திருப்பார் என்றபடி. (எக)

ஈன்றெடுத்தல் சூல்புறஞ் செய்தல் குழவியை
யேன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை—யான்ற
வழிந்தாரை யில்லைத்தல் பேரறமா வற்ற
மொழிந்தார் முதுநூலார் முன்பு.

ப-ரை. ஈன்று எடுத்தல் - தாய் தானீன்ற குழவியை யோம்பி வளர்த்தல், சூல் புறஞ்செய்தல் - தான் கொண்ட சூலை யழியாது புறப் படுத்தல். குழவியை - (வளர்ப்பவரில்லாத) குழவியை, என்று எடுத் தல் - ஏன்று வளர்த்தல், சூல் ஏற்ற கன்னியை - சூல்கொண்ட கன்னி யையும், ஆன்ற அழிந்தாரை - மிகவொழிந்தவரையும், இல்வைத்தல் - தன் வீட்டில் வைத்துப் பாதுகாத்தலும், (ஆகிய இவ்வைந்தும) முதுநூலார் - பழைய நூலறிவுள்ள பெரியோர், முன்பு - முற்காலத் தில், பேர் அறம் ஆ - பெரிய அறமாக, அற்ற மொழிந்தார் - மிகவும் சொன்னார்கள், எ - று.

க-ரை ஈன்றெடுத்தல் முதலிய ஐந்தும் பெரிய அறமாக முற் காலத்தில் நூலறிவையுடைய பெரியோர் சொன்னார்கள் என்பதாம்.

வி-ரை. ஈன்றெடுத்தல் ஏன்றெடுத்தல் என்பவற்றில் எடுத் தல் வளர்த்தல் என்னும் பொருட்டு. புறஞ்செய்தல் - வெளிப்படுத்தல், மகப்பெறுவித்தல் எனினுமாம். ஈன்றெடுத்தல் - கண்டெடுத்த குழ வியை வளர்த்தல், சூலேற்ற கன்னி - கருப்பங்கொண்ட கன்னி.

ஆன்றவழிந்தாள் - அழிந்த மனையாள் என்றலு மொன்று. முதுநூலார்-வேதாகமாதிகளாகிய பழைய நூல்களை யாராய்ந்தறிந்தவர். என்று எற்ற என்பவற்றிற்குப் பகுதி எல். பேறுமாமொழிந்தார் எனவியையும். (எ௨)

வலியழிந்தார் மூத்தார் வடக்கிருந்தார் நோயால்
நலியழிந்தார் நாட்டறைபோய் நைந்தார்—மெலிவொழிய
வின்னவரா மென்னரா யீந்த வொருதுற்று
மன்னவராச் செய்யு மதித்து.

ப-ரை. வலி அழிந்தார் - வலியழிந்தவர், மூத்தார் - முதியர், வடக்கிருந்தார்-உழைத்துண்ணமாட்டாத சோம்பர், நோயால் நலிபு அழிந்தார் - பிணியினால் நலிந்தழிந்தவர், நாடு அறைபோய நைந்தார் - தமது நாடுவிட்டுப்போய்த் தளர்ந்தவர், (என்று சொல்லப்படுகிற இவ்வைவருடைய) மெலிவு ஒழிய - தளர்ச்சி நீங்கும்படி, இன்னவர் ஆம் என்னார் ஆய - இன்னாரவரென்று ஆராயாமல், ஈந்த - கொடுத்த, ஒரு துற்று - ஒரு கவளவுணவு, (கொடுத்தவரை அடுத்த பிறவியில்) மதித்து - கணித்து, மன்னவர் ஆ செய்யும் - அரசராகச் செய்யும், எ - று.

க-ரை. வலியழிந்தார் முதலிய வைவருக்கும் ஒருதுற்றுணவு கொடுத்தவர் அவ்வறப்பயனால் அரசராய்ப் பிறப்பார் என்பதாம்.

வி-ரை. வலி - சரீரபலம். மூத்தார்-வயது முதிர்ந்தவர். வடக்கிருந்தார் - உழைத்துண்ணமாட்டாத அசக்தர் நலிபு - செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அறைபோதல் - ஒடிப்போதல். இன்னவர் ஆம் என்னாராய் - உற்றார் அயலாரென்று ஆராயாமல். ஒருதுற்று - சிறிதுணவு எனினுமாம். ஒருதுற்றுக் கொடுத்தவர்க்கே இங்ஙனம் அரசராகப்பிறத்தல் பயனெனின், விசேடமாக அன்னதா

னம் செய்பவர்க்குண்டாகிற பயன் இவ்வளவென்று மதித்துரைத்த லியையாதென்றவாறாயிற்று. (எங)

கலங்காமை காத்தல் கருப்பஞ் சிதைந்தா
லிலங்காமை பேரறத்தா லீற்றம்—விலங்காமைக்
கோடல் குழவி மருந்து வெருட்டாமை
நாடி னறம்பெருமை நாட்டு.

ப-ரை. கருப்பம் - வயிற்றுட் கருவானது, கலங்காமை - அழியாமல், காத்தல்-காத்தலும், (கருப்பம்)சிதைந்தால்-கருப்பம் சிதைந்தால், இலங்காமை - (பிறர்க்கு) வெளிப்படாமல், பேர் அறத்தால் ஈற்றம் - மறையப்பெயர்த்து வாங்குதலும், குழவி-குழவியை, விலங்காமை கோடல்-இடைவிலங்காமற் செய்து கொள்ளுதலும், மருந்து - (குழவிபிறந்து நோய்கொண்டால் அதற்கு) மருந்தும், வெருட்டாமை - (அக்குழவியை) அச்சுறுத்தாமையும், (ஆகிய இவ்வைந்தினையும்) நாடின் - ஆராயின், பெருமை அறம் - பெரிய அறமென்று, நாட்டு - நிலைபெறுத்துவாயாக, எ - று.

க-ரை. கருப்பம் கலங்காமை காத்தல் முதலிய ஐந்தும் பேரறமாக நாட்டுவாயாக என்பதாம்.

வி-ரை. கலங்காமை இலங்காமை விலங்காமை என்பன எதிர்மறை வினையெச்சங்கள், இவற்றுள் ஆமை மூன்றும் வினையெச்ச விகுதிகள். வெருட்டாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். இலங்குதல் - பிறர்க்குப் புலப்படுதல், ஈற்றம் - ஈன்றல். விலங்காமை - விலகாமை. வெருட்டாமை யென்பதற்குப் பகுதி வெருட்டு, இது பிறவினைப்பகுதி; தன்வினைப்பகுதி வெருள். அறம் பெருமையென்பன முன்பின்னாகமாற்றிப் பொருள் கொள்ளப்பட்டன. (எச)

கூலாமை கூலிற் படுந்துன்ப மீன்றபி
னலாமை யேற்றல் வளர்ப்பருமை—சால்பவை

வல்லாமை வாய்ப்ப வறிபவ ருண்ணுமை
கொல்லாமை நன்றுற் கொழித்து.

ப-ரை. சூலாமை (துன்பம்) - சூல்கொள்ளாமையால் வருந் துன்பமும், சூலின்பமும் துன்பம் - சூலினுலுண்டாகுந் துன்பமும், ஈன்ற பின் ஏலாமை - குழவியைப் பெற்றபின்பு அதனை யேற்றுக் கொள்ளாமை, ஏற்றால் வளர்ப்பு அருமை - ஏற்றுக்கொண்டால் அதனை வளர்த்தலருமை, சால்பவை வல்லாமை - (வளர்த்தபிள்ளை) சால்புகுணங்களை மாட்டாமையும், (ஆகிய இவ்வைந்தினையும்,) வாய்ப்ப அறிபவர் - வாய்ப்ப உணர்வோர், கொழித்து - ஆராய்ந்து, கொல்லாமை - ஒருயிரைக் கொல்லாமையும், உண்ணுமை - (அதன் தசையை) உண்ணுமையும், நன்று - நன்மையாம், எ-று.

க-ரை. சூல்கொள்ளாமையால் வருந்துன்பமுதலியவைந்தினையும் நன்குணர்ந்த பெரியோர், ஒருயிரைக் கொல்லாமையும் அதன் தசையை யுண்ணுமையும் நன்றென்பதாம்.

வி-ரை. சூலாமை - சூல் என்னும் பெயரடியாகப்பிறந்த எதிர்மறைத் தொழிற்பெயர். சூலல்-கருக்கொள்ளல். வளர்ப்பு-தொழிற்பெயர். சால்பு - நிறைகுணம். வாய்ப்பவறிதல் - நன்குணர்தல். கொழித்தல் - ஆராய்தல். கொல்லாமை - கொலைசெய்யாமை. உண்ணுமை - ஊனுண்ணுமை. கொல்லாமை உண்ணுமை யென்பன எதிர்மறைத் தொழிற்பெயர்கள். ஆல் - அசை. (எ௩)

சிக்கர் சிதடர் சிதலைப்போல் வாயுடையார்
துக்கர் துருநாமர் தூக்குங்காற்—றொக்க
வருநோய்கள் முன்னுளிற் றீர்த்தாரே யின்று
மொருநோயு மின்றிவாழ் வார்.

ப-ரை. சிக்கர் - தலைநோயுடையாரையும், சிதடர் - பித்துடையாரையும், சிதலைப்போல் வாய் உடையார் - வாய்ப்புற்றுடையாரை

யும், துக்கர் - கயநோய் கொண்டாரையும், துருநாமர் - மூலநோய் கொண்டாரையும், தூக்குங்கால் - ஆராயுமிடத்து, தொக்க - கூடி வருத்துகின்ற, அரு நோய்கள் - தீர்த்தற்கரிய நோய்களை, முன்னாளில் - முற்காலத்தில், தீர்த்தாரே - தீர்த்தவரே, இந்நாள் - இக்காலத்தில், ஒருநோயும் இன்றி வாழ்வார் - ஒருபிணியுமில்லாமல் சுகமாய் வாழ்ந்திருப்பவர், எ-று.

க-ரை. தலைநோயுடையார் முதலிய ஐவரையும் அவர்படுந் துன்பங்களினின்று முற்காலத்தில் ஒழித்தவரே இக்காலத்தில் ஒரு நோயுமில்லாமல் வாழ்ந்திருப்பவர் என்பதாம்.

வி-ரை. சிதல் - கறையான், அது இங்கு அது உறையும் புற்றைக் குறித்தது. துக்கம் - கயநோய் (க்ஷயரோகம்). துருநாமம் - மூலவியாதி. நோய் - துன்பம். முன்னாள் இந்நாள் என்றது முற்பிறப்பையும் இப்பிறப்பையும். (எக)

பக்கம் படாமை யொருவர்க்குப் பாடேற்றல்
தக்கம் படாமை தவமல்லாத்—தக்கா
ரிழியினர்க்கே யானும் பசித்தார்க ணீதல்
கழிசினங் காத்தல் கடன்.

ப-ரை. ஒருவர்க்கு பக்கம் படாமை - எல்லாவுயிர்க்கும் ஒத்தலும், பாடு ஏற்றல் - படுந்துன்பமாற்றுதலும், தக்கம் படாமை - ஒரு பொருளினிடத்தும் பற்றுப்படாமையும் ஆகிய இம்மூன்றும், தவம் - தவத்தார்க்குரிய குணங்களாம்; தவம் அல்லா - தவஞ்செய்தலில்லாத, தக்கார் - தகுதியாகிய இல்வாழ்வார்க்கு, இழி இனர்க்கேயானும் - இழிகுலத்தார்க்கேயாயினும், பசித்தார்கண் ஈதல் - பசித்தவர்க்கு உணவு கொடுத்தலும், கழிசினம் காத்தல் - மிகுகோபத்தைத் தடுத்தலும், கடன் - குணங்களாம், எ-று.

க-ரை. பக்ஷபாத மில்லாமை முதலிய மூன்றும் துறவறத்தார்க்கும், பசித்தவர்க்குணவு கொடுத்தலும் மிகுகோவத்தைத் தக்காத்தலும் இல்லறத்தார்க்கும் தகுதியாகிய குணங்க ளென்பதாம்.

வி-ரை. பக்கம்படாமை-ஒருபக்ஷத்திற் சாயாமை, இது நடுவுநிலைமை யெனப்படும். தக்கம்படாமை-ஒரு பொருளினும் பற்றின்றி யிருத்தல். இழியினர் - இழிவாகிய இனத்தார். இனம் - குலம். ஆயினும் எனற்பாலது ஆனும் எனத் தொகுத்தலாயிற்று. பசித்தார்கண் என்பதில் **கண்** என்னும் ஏழனுருபு நான்கனுருபின் பொருளில் வந்தது. (எஎ)

புண்பட்டார் போற்றுவா ரில்லாதார் போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்—கண்கண்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து.

ப-ரை. புண்பட்டார்கண் - போரின்கண்ணே புகுந்து புண்பட்டவரிடத்தும், போற்றுவார் இல்லாதார்கண் - பாதுகாக்கும் களைகணில்லாதவரிடத்தும், போகு உயிரார்கண் - உயிர்போகுந் தன்மையை யுடையவரிடத்தும், கண்கெட்டார்கண்-குருடரிடத்தும், கால் இரண்டும் இல்லாதார்கண்-இரண்டு கால்களுமில்லாதவராகிய முடவரிடத்தும், கண்பட்டு - கண்ணோடி, ஆழ்ந்து நெகிழ்ந்து-மனமிகுதியாய் நெகிழ்ந்து, அவர்க்கு - (புண்பட்டார் முதலிய) அவ்வைவருக்கும், ஈந்தார் - அவர் வேண்டுவனவாகிய உணவு முதலியவற்றைக் கொடுத்தவர், கடைபோக மகிழ்ந்து வாழ்ந்து கழிவார் - இடையூறுபட்டொழியாமல் கடைபோக மகிழ்ந்து வாழ்ந்து கழிவார், எ - று.

க-ரை. புண்பட்டவர் முதலிய ஐவர்க்கும் மனமிரங்கி அவர் வேண்டுவன கொடுத்தாதரித்தவர், நெடுங்காலம் இடையூறின்றி மகிழ்ந்து வாழ்ந்து கழிவார் என்பதாம்.

வி-ரை. புண்பட்டார் - போர்முகத்திற் சென்று காயம்பட்டவர். போற்றுதல்-பாதுகாத்தல். களைகண்-ஆதரவு, புகல். கண்கெட்டார் - கட்பார்வை யழிந்தவர் எனினுமாம். வேண்டுவன - உணவு முதலியவை. இடையூறு - தடை, துன்பம். கடைபோகவாழ்தல் - முடிவுபோக வாழ்தல். கழிதல் - உடம்பைவிட்டு நீங்குதல். (எஅ)

பஞ்சப் பொழுது பாத்துண்பான் காவாதா
னஞ்சா துடைபடையுட் போந்தெறிவா—னெஞ்சாதே
யுண்பதுமு னீவான் குழவி பலிகொடுப்பா
னெண்பதின் மேலும்வாழ் வான்.

ப-ரை. பஞ்சப்பொழுது - சிறுவிலைக்காலத்தில், பாத்து உண்பான் - பலர்க்கும் பகிர்ந்து பின்பு தானுண்பவன், காவாதான்-தன்னிடத்துள்ள பொருளைக் காவாது பிறருக்கே யுதவுவோன், உடை படையுள்-உடைந்த தன் படையினுள்ளே, அஞ்சாது போந்து-அஞ்சாமற் புகுந்து, எறிவான் - (பகைவர் படையை)எறிந்து (தன்படையை உய்யக்கொள்பவன்), எஞ்சாதே - ஒருநாளுமொழியாமல், உண்பது - தானுண்பதை, முன் - முன்னே, ஈவான் - பிறர்க்குக் கொடுத்துப் பின்னுண்பவன், குழவி பலிகொடுப்பான் - பசித்த குழவிகளுக்குச் சோறளிப்பவன், (ஆகிய இவ்வைவரும்) எண்பதின் மேலும் - எண்பது வயசுக்கு மேலும், வாழ்வான் - சுகமாக உயிர் வாழ்ந்திருப்பான், எ - று.

க-ரை. பஞ்சக்காலத்தில் பலர்க்கும் பகிர்ந்து பின்பு தானுண்பவன் முதலிய ஐவரும் எண்பது வயதுக்குமேலும் சுகமாக உயிர் வாழ்ந்திருப்பார் என்பதாம்.

வி-ரை. பஞ்சம் - சிறுவிலைக்காலம். பகுத்து எனற்பாலது பாத்து என மரூஉவாயிற்று. அஞ்சாது போந்து எனவியையும். பஞ்சப்பொழுது என்பதனீற்றில் எழனுருபு தொக்கது. குழவிபலி-நான்

காம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். பலி - சோறு. வாழ்வான் என்ற குறிப்பால் எண்பது வயதைக் குறித்தது. வேண்டப்படுவன வாகிய இசையெச்சங்கள் வருவித் துரைக்கப்பட்டன. பாத்துண்டல் எல்லாக்காலத்தும் போறமேயாயினும் சிறுவிலைக் காலத்தில் அது செய்தல் மிகச்சிறந்து காட்டுமென்பது தோன்ற 'பஞ்சப்பொழுது பாத்துண்பான்' என்றும், அச்சிறப்பு நோக்கியே அதனை முன்னெடுத்தும் கூறினார். (எகூ)

வரைவில்லாப் பெண்ணை வையார் மன்னைப்புற் றேறூர்
புரையில்லார் நள்ளார்போர் வேந்தன் வரைபோற்
கடுங்களிறு விட்டுழிச் செல்லார் வழங்கார்
கொடும்புலி கொட்கும் வழி.

ப-ரை. வரைவு இல்லா-விவாகமில்லாத, பெண் - (பொதுப்) பெண்டிரை, வையார் - (தமக்கு மனைவியாகத் தமது வீட்டில்) வைத்துக்கொள்ளார்; மன் - நிலைபெற்ற, ஐ - ஐந்தலையுடைய, புற்று - புற்றின்மேல், ஏறூர் - ஏறமாட்டார்; புரை இல்லார் - தமக்கொப்பில்லாதாரை, நள்ளார் - நட்புக்கொள்ளார், போர் வேந்தன் - போர்த்தொழிலில் வல்ல அரசனது, வரைபோல - (உருவத்தால்) மலைபோன்ற, கடுங்களிறு - கடுங்களிறு, விட்டுழி - விடுபட்டவிடத்து, செல்லார் - அதனெதிரே போகார்; கொடும்புலி - கொடிய புலிகள், கொட்கும் - சுழலாநின்ற, வழி - காட்டுவழியில், வழங்கார் - நடவார் (அறிவுடையார்), எ - று.

க-ரை. அறிவுடையார் பொதுப்பெண்டிர் விழைவு முதலியவற்றைச் செய்யார் என்பதாம்.

வி-ரை. வரைவு-வரைதல், தொழிற்பெயர்; இது மணஞ் செய்தல் என்னும் பொருளது. வரைவில்லாப்பெண் என்றதனால் பொதுப் பெண் என்பது விளங்கிற்று. இவர் ஒருவரையே மணம்புரிந்துகொ

ள்ளாது பலர்க்கும் போகமாதரா யிருத்தலால் இவர்க்குப் பொதுப் பெண்டிர் என்னு மிப்பெயர் வழங்கலாயிற்று. மன் னை என்பதற்கு மிகுதியாக நைந்த எனினுமாம். மிகுதியாக நைதலாவது பழைய தாய்த் தலைமழுங்கி யிருத்தல். புரை - ஒப்பு. இல்லார் - இல்லாரை யெனப் பொருள்படலால் இரண்டனுருபு தொக்கது. வரைபோல் என்ற வுவமையால் உருவப்பெருமையும் கருநிற முதலியனவுங் கொள்க. கடுமை - கொலைத்தொழில் வன்மை. விட்டவுழி விட்டுழி யெனத் தொகுத்தல் பெற்றது. கொட்கல் - சுழலல். கொடும்புலி கொட்கும் என்னும் அடையால் வழி காட்டுவழி யென்பது பெறப் பட்டது. வையார் முதலியவற்றிற்கு வினைமுதலாகிய அறிவுடையார் என்பது வருவிக்கப்பட்டது. (அ0)

தக்கார் வழிகெடா தாகுந் தகாதவ
ருக்க வழியரா யொல்குவர்—தக்க
வினத்தி னாகும் பழியும் புகழு
மனத்தி னாகு மதி.

ப-ரை. தக்கார் - தகுதியுடையாரது, வழி - சந்ததி, கெடாது ஆகும் - என்றுந் தளராது விருத்தி யடைவதாகும்; தகாதவர் - தகுதியற்றவர், உக்க வழியராய் - அழிந்த வழியை யுடையவராய், ஒல்குவர் - தளர்வார்; பழியும் புகழும் - (ஒருவனுக் குளவாகும்) பழியும் புகழும், தக்க இனத்தினன் ஆகும் - அவன்சேர்ந்த இனத் தினு ளுளவாகும்; மதி - அறிவானது, மனத்தினன் ஆகும் - (ஒருவ னது) மனத்தினளவே யுண்டாகும், எ-று.

க-ரை. தகுதியுடையார் சந்ததி யென்றுங் குன்றாது எழில் பெற்று விளங்கும்; தகுதி யில்லாதார் சந்ததி குன்றிக் குறையும்; ஒருவனுக்குப் பழியும் புகழும் அவன் சேர்ந்த இனத்தி னுளவா கும்; அறிவானது அவனது மனத்தினளவே யுண்டாகும் என்பதாம்.

வி-உரை. தக்கார் - தகுதியுடையார் (நடுவுநிலைமை யுடையவர்). தகாதவர் அஃதில்லாதவர். இவ்விருவர்க்கும் எச்ச முண்மையும் இன்மையும் குறிகளாதலால், 'தக்கார் வழிகெடா தாகுந் தகாதவர், உக்க வழியரா யொல்குவர்' என்றார். "தக்கார் தகவில ரென்ப தவரவ ரெச்சத்தாற் காணப் படும்" என்பது திருக்குறள். எல்லார்க்கும் அறிவு அவரவர் மனத்துளதாயினும் அது அவரவர் சேர்ந்த இனத்தளவாகவே விளங்கும் என்பது தோன்றும்வண்ணம், 'தக்க வினத்தினானாகும் பழியும் புகழும்' என்றார். "மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானாம், இன்னா னெனப்படுஞ் சொல்" என்பது திருக்குறள். தக்க வினத்தினானாகும் பழியும் புகழும் என்றாராயினும் தீயினத்தாற் பழியும் நல்லினத்தாற் புகழும் உளவாமெனக்கொள்க.

கழிந்தவை தானிரங்கான் கைவாரா னச்சா
னிகழ்ந்தவை யின்புறா னில்லார் — மொழிந்தவை
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரா
லின்மொழியா லேத்தப் படும்.

ப-உரை. (ஒருவன்) கழிந்தவை - இறந்த பொருட்கு, தான் இரங்கான் - தானிரங்காதவனும், கைவாரா - தனக்குக் கைவாராதவற்றை, நச்சான் - விரும்பி வருந்தாதவனும், இகழ்ந்தவை - பெரியோரா லிகழப்பட்டவற்றை, இன்புறான் - விரும்பாதவனும், இல்லார் - பொருளில்லாதவர், மொழிந்தவை - இரந்து வேண்டிக்கொண்டவற்றை, மென்மொழியால் - இன்சொல்லோடு, உள் மகிழ்ந்து - மனமகிழ்ந்து, ஈவான் - கொடுப்பவனும், ஏல் - ஆயின், (அவன்) விண்ணோரால் - தேவர்களால், இன்மொழியால் - இன்சொற்களால், ஏத்தப்படும் - துதிக்கப்படுவான், எ-று.

க-உரை. ஒருவன் இரவலர் விரும்பின பொருள்களை இன்சொல்லோடு வழங்குதல்முதலிய நற்செயல்களை யுடையனாயின், அவன்

தேவர்களால் இன்சொற்களைக்கொண்டு துதிக்கப்படுவான் என்பதாம்.

வி-ரை. கழிந்தவை - நிகழ்ந்தவை. இரங்கல் - அநுதபித்தல். கைவாரா - கைகூடாதவை. நசைஇ - விரும்பல், இது நத்தல் எனவும் வழங்கும். இகழ்ந்தவை - பழிக்கப்பட்டவை, அவை தீச்செயல்கள். இன்புறல் - விரும்பல். இல்லார் - ஒரு பொருளுமில்லாத வறியர் மொழிந்தவை - கேட்டவை மென்மொழி - பணிமொழி. எல் எனின என்பதன் மரூஉ. விண்ணோர் - சுவர்க்க லோகத்தை யிடமாகவுடையவர், இது இடத்தான் வந்தபெயர். (அஉ)

காடுபோற் கட்கினிய வில்லம் பிறர்பொரு
ளோடுபோற் றாரம் பிறந்ததா—யூடுபோய்க்
கோத்தின்னா சொல்லானாய்க் கொல்லானேற் பல்லவ
ரோத்தினா லென்ன குறை.

ப-ரை. (ஒருவன்) கட்கு இனிய - கண்ணுக்கினிய, இல்லம் - பிறருடைய இல்லத்தை, காடுபோல் - காடுபோலக்கொண்டு விரும்பாமல், பிறர் பொருள் - பிறர்பொருளை, ஓடுபோல் - ஓடுபோலக் கொண்டு விரும்பாமல், தாரம் - பிறன் மனையாளை, பிறந்த தாய - தான் பிறத்தற் கிடமாயிருந்த தாயாகக்கொண்டு விரும்பாது, ஊடுபோய் - பிறரிடத்தே சென்று, கோத்து - தொடுத்து, இன்னா சொல்லானாய்-பழிமொழிகளைச் சொல்லாதவனாய். கொல்லானேல் - ஒருயிரையுங் கொல்லாதவனாயின், (அவனுக்கு) பல்லவர் - பெரியார் பலரும் கூறிய, ஓத்தினால் - நூல்களால், என்ன குறை - என்ன குறையுண்டு, எ-று.

க-ரை. ஒருவன் பிறரது அழகிய இல்லத்தைக் காடுபோலவும், பிறர்பொருளை ஓடுபோலவும், பிறன் மனையாளைத் தன்தாயாகவும் கருதி விரும்பாமல், பிறரைப் பழித்துரையாமல், ஒருயிரையுங் கொ

ல்லா திருப்பாணயின், அவனுக்குப் பெரியோர் சொல்லிய நூல்க ளால் என்ன குறையுண்டு என்பதாம்.

வி-ரை. காடுபோல் என்றதனுனே கருதலும் விரும்பாமையும் பெறப்பட்டன. பிறர்பொருள் காடுபோல் என்றதற்கும், தாரம் பிற நத்தாய் என்பதற்கும் இவ்வாறே யுரைத்துக்கொள்க. பிறர் என்பது இல்லதிற்கும் தாரத்திறகும் கூட்டி யுரைக்கப்பட்டது. கோதுதல்- கற்பித்தல் (கோவை செய்தல்) பல பெரியோர்சொன்ன நூல்களிற் பொதிந்திருப்பது வேதசாரமேயாதலால் அவற்றை 'ஓத்து' என்றார். ஓத்து - வேதம். என்னகுறை யென்றது அந்நூல்களால் அவனைக் குறைகூறக் கிடந்த தொன்றுமில்லை யென்றபடி. (அரு)

தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணார் பழிபாவம்—பாற்பட்டா
ரேற்றவா தின்புற்று வாழ்வன விடழியக்
கூற்றுவப்பச செய்யார் கொணர்ந்து.

ப-ரை. பாற்பட்டார் - நன்னெறியின்பாற்பட்டவர், தோல் கன்று காட்டி - தோலாற்செய்த கன்றினைக்காட்டி, கறவார் - பசு வைக் கறவார்; பாற்பட்டார் - நன்னெறிப்பட்டவர், கறந்தபால் - அவ்வாறு கறந்தபாலை, உண்ணார் - பருகார்; பழி பாவம் - பழியை யும பாவத்தையும், [illegible] - தம்மேல் ஏற்றுக்கொண்டு, அவா வாது-விரும்பாமல், இன்புற்று - தம் கிளைகளோடு இனபுற்று, வாழ் வன-வாழ்வனவாகிய உயிர்களை, ஈடு அழிய-(அவற்றின்) பெருமை குன்ற, கொணர்ந்து-கொண்டுவந்து, கூற்று உவப்ப செய்யார்-கூற்று வன் விரும்பக் கொலைசெய்யார், எ - று.

க-ரை. நன்னெறிப்பட்டவர் தோற்கன்று காட்டிப் பசுவின் பாலைக் கறத்தல் முதலிய தீசசெயல்களைச செய்யார் என்பதாம்.

வி-ரை. தோற்கன்று காட்டலாவது இறந்துபோன கன்றின் தோலையுரித்து அதனுள் வைக்கோலைப் பொதிந்து அதனை உயிர்க் கன்றுபோல் அதன் தாய்ப் பசுவுக்குக் காட்டுதல். பாற்பட்டார் என்பது சிறவார் என்பதனோடு கூட்டி யுரைக்கப்பட்டது. பழிபாவம் - உம்மைத்தொகை. அவாவாது என்றபாலது அவாது எனத் தொக்கதலாயிற்று. இன்புற்று வாழ்தல் - மனமகிழ்ந்து வாழ்தல். செய்தல் - கொலைசெய்தல், இது கூறுவப்ப என மேல்வருதலாற் பெறப்பட்டது. (௮)

நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரையென் றைந்தும்—தொகையொடு
மூத்தோ ரிருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாத்தா ரறிந்தவ ராய்ந்து.

ப-ரை. நகையொடு - சிரிப்புடன், மந்திரம் - செவிச்சொல்லும், நட்டார்க்கு - தம் உறவோர்பொருட்டு, வாரம் - பக்ஷபாதமாய்ப் பேசுதலும், பகையொடு - பலரோடு பகை கொள்ளுதலுடனே, பாட்டு உரை - பாட்டுக்குப் பொருள் சொல்லுதலும், என்ற - என்று சொல்லப்பட்ட, ஐந்தும் - இவ்வைந்தும், தொகையொடு - கூட்டத்தோடு, மூத்தோர் - பெரியோர், இருந்துழி - இருக்குமிடத்தில், வேண்டார் - விரும்பார் அறிவுடையோர், (இந்த நீதியை) ஆய்ந்து அறிந்தவர் - ஆராய்ந்தறிந்தவர், முதுநூலுள் - பழைய நூல்களில், யாத்தார் - கட்டுரைத்து வைத்தார், எ-று.

க-ரை. பெரியோர் கூடியிருக்குமிடத்தில், நகைமுதலிய ஐந்தனையும் அறிவுடையோர் செய்யாரென்பதாம்.

வி-ரை. நகை - தொழிற்பெயர், பகுதி நகு, விகுதி ஐ. மந்திரம் - இரகசியம், அது இங்குச் செவிச்சொல்லின் மேலதாயிற்று. வாரம் - அன்பு, அது இங்குப் பக்ஷபாதத்தைக் குறித்தது. பகை -

பாவுபடல் (வேறுபடல்); இதற்குப் பகுதி-பகு, ஐ-தொழிற்பெயர் விகுதி. இதனை விரோதமென்பர் வடநூலார் உரை- உரைகூறுதல். என்றுரைத்தும் என்னைத்தும் எனத் தொகுத்தல் பெற்றது. தொகை தொகுதல், இதுவும் தொழிற்பெயர்; பகுதி - தொகு, விகுதி-ஐ. மூதறிந்தார்-வயதாலும் அறிவாலும் முதிர்ந்தவர் இருந்தழி இருந்த வழி யென்பதன் தொகுத்தல் விகாரம்; வழி - இடம். பாசதம் - பொறுக்கவைத்தல்; "செவிச் சொல்லுஞ் சேர்ந்தகையு மவிந்தொழுகல் ஆன்ற பெரியா ரகத்து" என்னுந் திருக்குறளை யிதற்குதாரணமாகக் கொள்ளலாம். (அ)

வைத்தா ரொருவ னினிதீய வாழ்த்திய
செய்த்தா ருரையை யறிவானே—னைப்க
வறிவறி யாவான் டெனவுரைப்பார் வாயுட்
டறிவெறியார் தக்காரே தாம். (அ[illegible])

.... (அ[illegible])

.... (அ[illegible])

.... (அ[illegible])

.... (௯[illegible])

.... (௯[illegible])

....
நெடும்பகை யொன்றா அயர்தன்
வையகத் தளியா னினைவையென்றும் [illegible]
செய்யைய [illegible] றாமாற் றோர்த்து.

சத்தமெய்ஞ் ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்டவீ டுள்ளிட்டாங்—கத்தக
விவ் வைந்து மறிவான் றலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து.

ப-ரை. சத்தம்-வழக்குநூலும், மெய்ஞ்ஞானம்-சொன்முடிபு நூலும், தருக்கம் - தருக்கநூலும், சமயம் - சமயநூலும், வித்தகர் - அறிவின்மிக்கோர், கண்ட - செய்த, வீடு - வீட்டுநூலும், உள்ளிட்டு - உட்பட, அத்தக இவ்வைந்தும்-அத்தகைமையான இவ்வைந்தனையும், அறிவான் - அ[illegible]யறிபவன், சிந்திப்பின் - ஆலோசிக்குமிடத்தில், சிறந்து - சிறப்படைந்து, தலை ஆய சிட்டன் - தலைமையாய சிட்டனாவான், எ-று.

க-ரை. சத்தநூல் முதலிய ஐந்துமறிந்தவன் தலைமைபெற்ற சிட்டனென்று சொல்லப்படுவான் என்பதாம்.

வி-ரை. ஆங்கு-அசை. சிட்டன்-மேலானவன். தலை-தலைமை (முதன்மை). சிறத்தல் - மேம்படுதல். தருக்கம் - நியாயசாத்திரம். சமயநூல்-உட்சமயம் புறச்சமயங்களைப் பிரதிபாதிக்கும் நூல்கள்.

கண்ணுங்காற் கண்ணுங் கணிதமே யாழ்நேரே
டெண்ணுங்காற் சாந்த மிலக்கணக்கிட்—டெண்ணுத
லிட்டவிவ் வைந்து மறிவா னிடையாய
சிட்டனென் றெண்ணப் படும்.

ப-ரை. கண்ணுங்கால் - நினைக்குமிடத்து, கண்ணும்-நினைக்கத்தகிய, கணிதம் - கணிதமும், யாழ்நேரே-யாழ்நூலுடன், எண்ணுங்கால் - ஆலோசிக்குமிடத்து, சாந்தம்-சந்தமமைத்தல், இலக்கணமிட்டு - இலக்கணமும், எண்ணுதல் - எண்ணல், இட்ட-ஏற்படுத்தப்பட்ட, இவ்வைந்தும் - இந்த ஐந்தொழில்களையும், அறிவான் -

அறிந்து செய்யவல்லவன், இடை ஆய சிட்டன் என்று-இடையாகிய சிட்டன் என்று, எண்ணப்படும் - எண்ணப்படுவோன், எ-று.

க-ரை. கணிதநூல் முதலிய ஐந்தனையும் கற்றுவல்லவன் இடையாகிய சிட்டனென்று சொல்லப்படுவோன் என்பதாம்.

வி-ரை. கண்ணுங்கால் எண்ணுங்கால் என்னும் வினையெச்சங்கள் எண்ணப்படும் என்னும் வினைகொண்டு முடிந்தன. இதில் கணிதம், யாழ்வாசித்தல், சந்தனமரைத்தல், இலைநறுக்கல், அவற்றை பொன்றுதல் என்னைந்துதொழில்களடங்கியிருக்கின்றன. நடுவுக்கு-முதனிலைத் தொழிற்பெயர். இட்ட என்னும் பெயரெச்சம் ஐந்து என்னும் பெயர்கொண்டு முடிந்தது. அறிவான்-வினையாலணையும்பெயர். கண்ணல்-நினைத்தல். (கச)

நாணிலன் நன்கு நள்ளாதான் பெரியார்ப்
பேணிலன் பிறர் சேவகன்—ஏணில்
பொருந்திய பூண்முலையார் சேரிகைத் தில்லான்
பருத்தி பகர்வுழி நாய்.

ப-ரை. நாண் இலன் - நாணமில்லாதவன், நாய்-நாயோடொப்பான்; நன்கு நள்ளாதான் - நன்மையாகப் பிறரொடு நட்புக்கொள்ளாதவன், நாய-நாயோடொப்பான்; பெரியார் பேணிலன்-பெரியாரைப் பேணாதவன், நாய்-நாயோடொப்பான்; பிறர் சேவகன்-பிறரிடத்துச் சேவகஞ்செய் துயிர்வாழ்வோன். நாய் - நாயோடொப்பான்; ஏண் இல் - பெருமையில்லாத, பூண் பொருந்திய- ஆபரணங்களையுடைய, முலையார்-தனங்களையுடையவராகிய பொதுப்பெண்டிர் வாழ்கின்ற, சேரி - சேரியின்கண், கைத்து இல்லான்-கைப்பொருளின்றி அவர் மீதுள்ள ஆசையாற் சென்று திரிவோன், பருத்தி பகர்வுழி-பருத்தி விற்குமிடத்திற் போய்நிற்கின்ற, நாய் - நாயோடொப்பான், எ-று.

க-ரை. நாணமில்லாதவன் முதலிய ஐவரும் நாயைநிகர்ப்பவர் என்பதாம்.

வி-ரை. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற மக்கள் அப்பேற்றக்குரிய நாணுடைமை முதலிய பெருங்குணமில்வழி அவர் மிகவும் இழிபிறப்பினரென்றெண்ணப்படுவராதலின் அவரை 'நாய' என்றிழித்துக் கூறினர். இழிவிற் கெல்லையாய்ச் சிறந்து நிற்பது நாயென்றல வெளிப்படை. நாணிலன் முதலியோரை ஒருவர்க்கொருவர் இழிவிற் சிறந்தோராக வுய்த்துணர்ந்து கொள்க. குலப்பெண்டிருள் புணர்முலையாரிருப்பினு மிருக்கலாம்; பொதுப்பெண்டிர் அவ்வாறிருக்கலாகா தென்றற்கு, 'பொருந்திய பூண்முலையார்' என்றார். அவர் பூண் முலையாராயிருத்தல் ஆடவரை மயக்குதற்கென்க. சேரிசெரு. எண் - மனநிலை யெனினுமாம். (கரு)

நாணெளிது பெண்மை நகையெளிது நட்டானே
லேணெளிது சேவக னேற்பெரியார்ப—பேணெளிது
கொம்பு மறைக்கு மிடையா யளியன்மீ
தம்பு பறத்த லரிது.

ப-ரை. கொம்பு-வஞ்சிக்கொம்பை, மறைக்கும்-மறைக்கின்ற, இடையாய்-இடையையுடையவளே, பெண்மை - (ஒருத்தி) பெண்மைக்குணமுடையளாயின், (அவளுக்கு) நாண் எளிது-நாணமெளிதாகும்; நட்டானேல்-ஒருவனோடொருவன் நட்டானாயின், (அவனுக்கு) நகை எளிது-மகிழ்ந்து நகுதலெளிதாகும்; சேவகனேல் - ஒருவன் சேவகனாயின், (அவனுக்கு) எண் எளிது-வலிசெலுத்த லெளிதாகும்; பெரியார்-குணத்தாற் பெரியாராயின், (அவர்க்கு) பேண் எளிது-பிறரைப் பேணுத லெளிதாகும்; அளியன்மீது-(யாவரிடத்தும்) அருளுடையான்மேல், அம்பு பறத்தல் - பிறரெய்யும் அம்பு விரைந்து செல்லுதல், அரிது - அரிதாகும், எ-று.

க-ரை. பெண்குணமுடையாள் முதலாயினோராகிய நால்வரிடத்தில் நாண் முதலியவை யுளவாக வெளிதாகும்; யாவரிடத்தும் அருளுடையான்மேல், பிறரெய்யும் அம்பு விரைந்து செல்லுதல் அரிதாகு மென்பதாம்.

வி-ரை. கொம்புமறைக்கு மிடையாய் என்றது மகடூஉ முன்னிலை (விளி). கொம்பு - பூங்கொம்பு எனினுமமையும். நாண் - நாணுடைமை. பெண்மை - பெண்மைக்குரிய குணங்கள்; அவை: நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பனவாம். நட்டல் - நட்புக்கோடல் (நேசித்தல்). நாண் பேண் - முதனிலைத் தொழிற்பெயர்கள். சேவகன் - வீரன். எண் - வலி. அளி - யாவர்மீதும் ஒருதன்மைத்தாய அருளுடைமை; இதுவாயிலாக அன்னதானம் முதலியவை நிகழுமாகலான் ஈகையாளனை 'அளியன்' என்றார். பறத்தல் - விரைந்துசேறல்.

இன்சொலா லாகுங் கிளைமை யியல்பில்லா
வன்சொல்லி னாகும் பகைமைமன்—மென்சொல்லி
னொய்வில்லா வாரருளா மவ்வரு ணன்மனத்தான்
வீவில்லா வீடாய் விடும்.

ப-ரை. இன்சொலான் - (ஒருவன் சொல்லும்) இன்சொல்லி னால், கிளைமை - உறவாந்தன்மை, ஆகும் - உளதாகும்; இயல்பு இல்லா - நற்குணமில்லாத, வன்சொல்லின் - வன்சொல்லினால், பகைமை - பகைகள், ஆகும் - உளவாகும்; மன் - மிகுதியாகிய, மென்சொல்லின் - மென்சொல்லினால், ஒய்வு இல்லா - தளர்வில்லாத, ஆர் அருள் - அரிய அருளானது, ஆம் - உண்டாகும்; அ அருள் - அந்த அருளினை யாகிய, நல் மனத்தால் - (ஒருவனது) நல்லமனத்தினால், வீவு இல்லா - அழிவில்லாத, வீடு ஆய்விடும் - வீடு உண்டாய்விடும், எ - று.

க-ரை. இன்சொல் முதலியவற்றால் உறவு முதலியவை யுளவா மென்பதாம்.

வி-ரை. இன்சொல்-உறவாகிய உறுதியைத் தருஞ்சொல். வன்சொல் - பகையாகிய அழிவைத் தருஞ்சொல். இயல்பு-குணம்; அது ஈண்டு நற்குணத்துக்காயிற்று. கிளைமை பகைமை யென்பன அவற்றையுடையார் மேலனவாதலால் பண்பாகுபெயர்கள். மன் - அசைநிலை யெனினுமாம். அருள்பெற லரும்பேறுதலால் அதனை 'ஆருள்' என்றார். வீவு - அழிவு; இது தொழிற்பெயர். வீடு-முத்தி. ஆய்விடும் என்பதில் விடும் துணிவுப்பொருண்மை விகுதி. (கூஎ)

தக்க திளையான் றவஞ்செல்வ னூண்மறுத்த
றக்கது கற்புடை யாள்வனப்புத்—தக்க
தழற்றண்ணென் றோளா ளறிவில ளாயி
னிழற்கண் முயிறாய் விடும்.

ப-ரை. இளையான் - இளையவன். தவம் - (துறந்து) தவஞ்செய்தல், தக்கது - தகுதியுடைத்து; செல்வன் - செல்வமுடையோன், ஊண் மறுத்தல் - உணவை வெறுத்து விரதங்காத்தல், தக்கது-தகுதியுடைத்து; கற்பு உடையாள் - கற்புடையவளது, வனப்பு - அழகானது, தக்கது-தகுதியுடைத்து; அழல்-நெருப்பு, தண் என்-தண்ணிதென்று சொல்லுதற்குரிய, தோளாள் - தோள்களையுடையவளாகிய ஒருவன் மனைவியானவள், அறிவு இலள் ஆயின்-அறிவற்றவளாயின், நிழல்கண் - நிழலினிடத்து, முயிறு ஆய்விடும்-முயிற்றோடொக்கும், எ - று.

க-ரை. இளையான் முதலியோர் தவஞ்செய்தல் முதலியவை தகுதியுடையன; ஒருவன் மனையாள் அறிவின்றி யொழுகுவளாயின் அவ்வொழுக்கம் நிழலில் முயிறிருந்தாற்போலும் என்பதாம்.

வி-ரை. இளையான்-இளமைப்பருவமுடையவன். "உற்றநோய் நோன்றல்" முதலிய தொழில்கள் முதுமைப்பருவத்தில் செய்வனே

நடத்த வியலாதாதலால், 'தக்கதிலையான்றவம்' என்றார். ஊண்மறுத்தல் என்றதனால் உபவாசாதிகளென்பது பெறப்பட்டது. 'கற்புடையாள் வனப்புத் தக்கது' என்றமையால், கற்பிலாள் வனப்புத் தகுதியற்றது என்பது தானே வெளியாயிற்று. 'அழற்றண்ணென் றோளாள்' என்றது தோளின்தண்மை மிகுதியைக் குறித்தது. அறிவிலள்-அறிவின்றி யொழுகுதலையுடையாள். நிழல்-மாநிழல். முயிறு - ஓர்வகை யெறும்பு. (கஅ)

பொய்யாற் சுவர்க்கம்வா யானிரயம் பொருள்செய்யா
மையார் மடந்தையால் வாழ்வினிது— மெய்யன்றான்
மைந்தக நீண்ட மலர்க்கண்ணாய் தீதன்றா
லெத்தவ மாளும் படல்.

ப-ரை. பொய்யால்-பொய்ந்நெறி யொழுக்கத்தால், சுவர்க்கம் - சுவர்க்கமுளதாம், வாயால் நிரயம் - மெய்ந்நெறி யொழுக்கத்தால் நிரயமுளதாம், பொருள்செய் ஆம் - பொருள்தேடுதல் இனிதாகும், மை ஆர் - குற்றம்பொருந்திய, மடந்தையால் - மனையாளோடு கூடி, வாழ்வு - இல்லின்கண் வாழ்தல், இனிது - இனிதாம், (என்று சிலர் சொல்லுதல்) மெய் அன்று ஆல்-மெய்யன்றாதலால், மை தக நீண்ட-மையெழுதத் தகுதியாக நீண்ட, மலர் - குவளைமலர்போன்ற, கண்ணாய் - கண்ணையுடையாளே, எத்தவம் - எவ்வகையாகிய தவத்தையாயினும், ஆள்படல் உம்-ஆளுதலைச் செய்தலும், தீது அன்று - தீதன்று (நன்மையேயாம்), எ - று.

க-ரை. பொய்ந்நெறி யொழுக்கத்தாற் சுவர்க்கமுண்டு என்றல் முதலிய வீண் வார்த்தை பேசுவாரும் உளர்; ஆயினும், தவஞ்செய்தலும்மெய்ந்நெறி யொழுக்கமுமே சிறந்தன வென்பதாம்.

வி-ரை. பொய் - பொய்யநெறியி லொழுகுதல். வாய்மையால் எனற்பாலது வாயிலென மை குறைந்து நின்றது. செய-முதனிலைத் தொழிற்பெயர். மை - அஞ்சனம், கருமை யெனினுமாம். தகுதல் - பொருந்துதல். மலர் என வாளா கூறினுமேனும் கண்ணுக்குவமை யாகப் புணர்க்கப்பட்டதனால் குவளைமலரென் றுரையுரைக்கப்பட்டது. தீதன்று என்றமையால் நன்றாம் என்றவாறாயிற்று. 'எத்தவமாரும் படல் தீதன்று' என்றமையால் இல்வாழ்வொழித்துத் தவத்தின் மேற் சேறலே நன்றென்பது தெற்றென விளங்கிற்று. (௬௧)

> புல்லறத்தி னன்று மனைவாழ்க்கை போற்றுடைத்தே
> னல்லறத்தா ரோடு நடக்கலா—நல்லறத்தார்க்
> கட்டிட்டுண் டாற்றவாழ்ந் தார்களே யிம்மையி
> லட்டிட்டுண் டாற்றவாழ் வார்.

ப-ரை. புல் அறத்தின் - புல்லிய துறவறத்தினும். மனைவாழ்க்கை - இல்வாழ்க்கையானது, நன்று - நன்மை பயப்பதாய்; போற்று உடைத்தேல் - (இழ்வாழ்க்கைநெறியிற் றவறுது அதனை) போற்றி யொழுகின், நல் அறத்தாரோடு நடக்கலாம்-நல்ல துறவறத்தாரோடு வைத்தெண்ணப்படலாம்; நல் அறத்தார்க்கு - நல்ல துறவறத்தார்க்கு, அட்டு - சமைத்து, இட்டு-பகிர்ந்திட்டு, உண்டு - (பிறகு) தாமுமுண்டு, ஆற்ற வாழ்ந்தார்களே-மிகவுமினிதாக (முற்பிறப்பில்) வாழ்ந்தவர்களே, இம்மையில் - இப்பிறப்பில், அட்டு இட்டு உண்டு-சமைத்திட்டுண்டு, ஆற்ற வாழ்வார் - மிகுதியாக வாழ்ந்திருப்பவர், எ - று.

க-ரை. துறவறத்தார் முதலியோர்க்குக் களைகணாயிருத்தலால் இல்வாழ்க்கையே சிறந்ததென்பதாம்.

வி-ரை. மனைவாழ்க்கை நன்று என்றதனாலே துறவு தீது என்பது தானே விளங்கிக்கிடக்கவும் புல்லறமென்றல் மிகையாகாதோ

மெ[illegible]ினை; ஈகாது, என்பர். ''[illegible] பொருளெல்லாமிதுகளா லில்
வாழ்க்கை, பிறந்தாரி லெல்லாரும் புகழுதல்'. ''ஒருவனைப் பட்
டபிர விலைவாழ்க்கையைச் சுருக்கிப் பிறப்பழிப்பதில்லாமிறைவது, ''அற
த்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற், போஓய்ப் பெறுவ
தெவன்''. ''துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்
வானென்பான் றுணை', ''இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்
க்கும் நல்லாற்றி னின்ற துணை' என்றற்றொடக்கத் தாண்டேவர் செய்
யுங்களான் மனைவாழ்க்கைச் சிறப்பும் அறவோர் வாழ்க்கை யியல்பும்
தெரிந்தெனை விளங்குதலானென்க. முத்திக்கு வித்தாதலாற் றுற
றற்ற துறவறத்தை 'நல்லறம்' என்றார். (க00)

ஈவது நன்றுதீ தீயாமை நல்லார்
மேவது நன்றுமே வாதாரோ—டோவாது
கேட்டுத் தலைநிற்க கேடில் உயர்கதிக்கே
ஓட்டுத் தவவூர்ந்து நிற்கு மது.

ப-ரை. ஈவது-(பிறர்க்கு ஒருபொருளை) கொடுப்பது, நன்று - நன்மையாம்; ஈயாமை-கொடாமை, தீது - தீமையாம்; நல்லார்-நல்லோர், மேவாதாரோடு - பொருந்தாதவரோடு, மேவது-பொருந்தியிருப்பது, நன்று - நன்மையாம்; ஓவாது-இடையறாமல், கேட்டு - (நன்னெறிக்குக் காரணமாகிய நூற்பொருளை) கேட்டு, தலை - (அந்நெறியின்) கண்ணே, நிற்க - நிற்றலைச்செய்க; (நின்றால் அந்நிலை) கேடு இல் - அழிவில்லாத, உயர் - உயர்ந்த, கதிக்கு - வீட்டுநெறியின்கண்ணே, ஓட்டு - விரைந்துசெல்லுஞ் செலவின்கண், தவ ஊர்ந்து நிற்கும் - மிகுதியாக மேம்பட்டு நிற்கும், எ - று.

கு-ரை. பிறர்க்கு ஒருபொருளைக் கொடுப்பது நன்று; கொடாமை தீது; பொருந்தாதவரோடும் பொருந்தியிருப்பது நன்று; நன்

னூற்பொருளைக்கேட்டு நன்னெறியில் நிற்கக்கடவன்; அந்நிலை அவ
னுக்கு வீட்டுநெறிக்குத் துணையாம் என்பதாம்.

வி-ரை. "நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம், இல்லெ
னினு மீதலே நன்று" என்ற திருக்குறட்கேற்க, 'ஈவது நன்றுதீ
தீயாமை' என்றார். பகைகோடல் ஒருவாற்றானும் நன்மை பயவா
தாதலால், 'மேவது நன்று மேவாதாரோடு' என்றார். "கேடிலுயர்கதிக்
கே யோட்டுத் தவநிற் கூர்ந்து' என மேல்வருதலால், கேட்டு என்
பதற்கு நன்னூற்பொருளைக் கேட்டு என்றுரை யுரைக்கப்பட்டது.
வீட்டினது பெறலருமையும் பெருமையும் தோன்ற, கேடில் என்ற
தகையாது உயர் என்னும கதியை விசேடித்தார். ஓட்டு - விரை
செலவு. தவ - மிகுதிப்பொருடரும் உரிச்சொல். ஊர்தல் - மேம்
படுதல். (௧0௧)

உண்ணிடத்து மொன்னார் மெலிவிடத்து மந்திரங்கொ
ளெண்ணிடத்துஞ் செல்லாமை நன்றலையே—யெண்ணி
யுரைப்பூசல் கோற லுயர்தவமேற் கங்கைக்
கரைப்பூசை போற்றக் கடை.

ப-ரை. உண் இடத்தும் - பிறர் உண்ணுமிடத்தும், ஒன்னார் -
பகைவர், மெலிவு இடத்தும் - தளர்ந்தவிடத்தும், மந்திரம் கொண்டு -
மந்திராலோசனையை மேற்கொண்டு, எண் இடத்தும் - ஆலோசிக்கு
மிடத்தும், செல்லாமை - போகாமையே, தலை - தலையாய வொழுக்க
மாம்; எண்ணி - ஆராய்ந்து, உரை - சொல்லுஞ் சொல்லில், பூசல் -
மாறுபடுதலானது, உயர் - உயர்ந்த, தவம் மேல் - தவவேடத்தை மேற்
கொண்ட காலத்தில், கோறல் - ஓருயிரைக்கொன்று தின்கை,
போற்ற - ஆராயுமிடத்து, கங்கைக்கரை - கங்காநதிக் கரையி லுட்
கார்ந்திருக்கிற, பூசை - பூனைபோல, கடை - கடையாய வொழுக்க
மாம், எ - று.

க-ரை. பிறருண்ணுமிடத்தும், மெலிந்திருக்கிற பசைவிடத் தும், பிறர் மந்திராலோசனை செய்யுமிடத்தும் போய்நிற்கத்தகா தன்று, தான் சொல்லுஞ் சொல் பொல்லாதபடியாமையான் நன்று, தவவேடம் பூண்டவொருவன் குயிலைக் கண்டு அதன் தசையை யுண்டல், சக்கைக்கனியி லுடகாரந்திருக்கி பூனைபோலக் கடையாகிய கூடா வொழுக்கமாம் என்பதாம்.

வி-ரை. பிறருண்ணுமிடத்திற் சென்றால் அவர் அருவருப்பார் களாதலும், மெலிந்த பசைவார்மேற் சேறல் அறமன்றாகலாலும், பிறர் ஒரு காரியத்தைக் குறித்து ஆலோசிக்குமிடத்துச் சென்றால் அவர் வெறுப்பவராகலாலும், 'உண்ணுங்கண் டோன்றா மெலிவிடத்தும் மந் திரங்கொண் டெண்ணுமிடத்துஞ் செல்லானே காணுங்கால்லியே' என்றா கானே கேற்ற பொருளில் வந்த கலை-முதலானவை. மந்திரம் ஆலோசி யம். ஆசல் - மாறுபாடு. கொல்லுங்கல் இனார் யாதலால் கோரல் என்ப தறுக்க கொண்டு சினைக் கென்னுரைக்கப்பட்டது. பூசை-பூனை. 'பூசை பாய்ந்தன மாசறு மலர்' என்பது திவாகரம். 'பசை யுறுயார் பாற்கட லுறப்புப் பூசைமுற்றுப் பெருப்பு புக்கன' என் பது கம்பராமாயணம். (கoஉ)

பத்தினி சேவகன் பொத்தில் கடிந்தவசி
பொத்தில் பொருட்டிறந்தார் செவ்வியான்—பொத்தின்றி
வைத்தார் வழக்குஞ் சான்றவர்தஞ் செம்மை
செத்தாலறக சிறந்து.

ப-ரை. பத்தினி-பத்தினியும், சேவகன்-சேவகனும், பொத்து இல - குற்றமில்லாத, கடிந்தவசி - கடிந்தவசியும், பொத்து இல - குற்றமில்லாத, பொருள் திறத்து - பொருட்டிறத்தில், செவ்வியான் - செவ்வியுடைய தேறப்படுவோனும், பொத்து இன்றி - குற்றமில்லா மல், வைத்தார் வழக்கு-அரசனாலே முதன்மையாக நியமிக்கப்பட்-

வருடைய சால்பும், (ஆகிய இவ்வைவரும்) சான்றாரா - மேலோரா வார்; செம்மை - (இவருடைய) செம்மைக் குணங்களை, செத்தால் - (இவர்) இறந்துபட்டால், சிறந்து அறிக - மிகுதியாக அறிக, எ-று.

க-ரை. பத்தினி, சேவகன் முதலியோருடைய செம்மைக் குணங்கள், அவரிறந்தபின் மிகவும் உலகத்தாரால் அறியப்படும்.

வி-ரை. பத்தினி - இது கற்புடை மாதையும் நன்மனையாளை யும் குறிக்கும். சேவகன் - வீரன். தவசி - தவஞ்செய்வோன். கடுந் தவசியென்றது அங்கபாகாதிகளை வெறுத்து என்பெழுந்தியங்கும் யாக்கையனாய் நிற்கும் கடுந்தவத்தோனை. இவனுக்குப் பொத்தா வது கூடாவொழுக்கம். பொருட்டிறத்துச் செவ்வியானுதலாவது - ஒருவர் தன்னிடத்து நம்பிவைத்த பொருளை வஞ்சித்துக் கவர்ந்து கொள்ள நினையாமை. பத்தினி சேவகன் முதலியோர் உயிர்வாழுங் காலத்திலும் இறந்தபின்பு புகழ் மிக்கு விளங்குவராதலால், 'அவர் தஞ்செம்மை செத்தாலறிக சிறந்து' என்றார். (கoரு)

வழிப்படரல் வாயல் வருந்தாமை வாய்மை
குழிப்படரல் தீசொற்க ளோடு—மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துயக் கற்றவ
ராய்ந்து விடுத லறம்.

ப-ரை. வழிப்படரல்-பிறர்வழிச்சேறலும், வாயல்-வாய்த்தகாரி யங்களில், வருந்தாமை - முயன்ற மனம் வருந்தாமையும், வாய்மை குழிப்படரல்-மெய்ம்மையல்லா நெறியிற் சேறலும், தீ சொற்களோடு- பிறரைப்பழித்துரைக்குஞ் சொற்களோடு, மொழிப்பட்ட-பெரியோ ரால் சொல்லப்பட்ட வொழுக்கநெறியை, காய்ந்துவிடுதல்கள்-வெறு த்துவிட்டொழியுந் தொழில்களும், (ஆகிய) ஐந்து-ஐந்தும், உய்ய கற் றவர் - தாம் உய்ந்துபோம் வழியைக் கற்றவராகிய அறிஞர், ஆய் ந்து - ஆராய்ந்து, விடுதல் - விடுவது, அறம் - அறமாகும், எ - று.

க-து. பிறர்மனைச்சேறல் முதலிய வைந்தையும் விட்டொழிதலே அறிவுடைமை யென்பதாம்.

வி-ரை. வழி - நெறி. படர்தல் - செல்லுதல். வாயல் - மொழி; ஆகுபெயர். வாய்மை - மெய்ம்மை. பிறர்மனையைச் சேர்தலின் மேற்பட்ட தீமையொன்றில்லையாதலால் முற்கூறினர். 'தீச்சொல்' என்றே மொழிந்தொழிக்கார் உயர்ந்தோர் - உயர்ந்த பெரியோர் கற்றோர். ஆய்தல் - இவற்றின் உள்ளவாறு நோக்குதலாகிய ஆராய்தல். பெரியோர் சொல்லைக் கடத்தலின்று மிகத் தீங்கு பயப்பதொன்றின்மையான் 'மொழிப்பட்ட காய்ந்துவிடுதல்' என அதனைக் கொண்டமை தோன்ற இறுதியில் வைத்தார். வழிப்படாதல் முதலியவைகளும் முறையே ஒன்றினொன்று மிக்கன. உய்தல் - பிழைத்தல், அது பிறவித் துன்பத்தினின்றுந் தப்புதல். படர்தல் - நடத்தல் எனினுமாம். (கபச)

மல்லிவர்தோள் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்து
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினால்—கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான்.

ப-ரை. மல்லிவர்தோள் - மற்றொழிலில் மிகுந்த பயத்தை யுடைய, மாக்காயன் - மாக்காயனது, மாணாக்கன் - மாணவகனாகிய, மாநிலத்து - இந்தப் பெரிய நிலவுலகத்தில், பல்லவர் - பலருடைய, நோய் - பிறவிப் பிணியை, நீக்கும் - ஒழிக்கின்ற, பாங்கினால் - அழகுடனே, கல்லா - கற்காத, மறு - மறுத்தலால், பஞ்சந்தீர் - சிறுவிலைக்காலத்தை யொழிக்கின்ற, மழைக்கை - மேகம்போலுங் கையினையுடைய, மாக்காரியாசான் - மாக்காரியாசான் என்பவன், சிறுபஞ்சமூலம் - சிறுபஞ்சமூலம் என்னும் இந்நூலை, செய்தான் - இயற்றினான், எ - று.

க-ரை. காரியாசான் என்பவன் இந்தச் சிறுபஞ்சமூலத்தைச் செய்தளித்தான் என்பதாம்.

வி-ரை இந்நூலாசிரியராகிய காரியாசான் என்பவர் மாக்காய[illegible] னார் மாணாக்கராதலால் 'மல்லியாசான் மாக்காயன் மாணாக்[illegible] என்னார் [illegible] காரியா[illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கூற்று கலைமா - [illegible]ழியக் காரணம். [illegible] இத் தொகுத்த [illegible] காரியாசான் - காரியாசிரியர். ([illegible])

சிறுபஞ்சமூலம்

மூலமும் உரையும் முற்றிற்று.

அறிவிப்பு.

இ[illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] தெரியவில்லை. கல்வி[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அச்சிட்டு[illegible] [illegible] [illegible].

கடவுள் துணை.

சிறுபஞ்சமூலம்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

சிறுபஞ்சமூலம் செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலை,

91, தம்புசெட்டி வீதி, சென்னை.

நைடதம் மூலமும் உரையும் (புதியபதிப்பு) 27-லிதகிராப் படங்களும், ஒரு உயர்ந்த ஆப்டோன் படமும் ... 2 0 0

திருவெங்கைக்கோவை மூலமும் உரையும் (புதியபதிப்பு) உயர்ந்த கிலிட்டு பயிண்டுடன் 2 8 0

விநோதரசமஞ்சரி (புதிய பதிப்பு) கிலிட்டு பயிண்டு ... 1 2 0

கைவல்லியம் (ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளியற்றிய தத்துவார்த்ததீபமென்னும் உரையுடன்) ... 2 0 0

இந்து பைபில் என்னும் ஆரியர் சத்தியவேதம் : (உபநிஷத்துக்கள் முதலிய இந்துமதத்தின் உண்மைகள்) ... 1 12 0

தாயுமானவர் பாடல் (அரும்பதக் குறிப்புடன்) சுவாமிகள் படத்துடன் (உயர்ந்த கிலிட்டு பயிண்டு) ... 1 0 0

அகஸ்தியர் தேவாரத்திரட்டு மூலமும் உரையும் ... 0 12 0

அறப்பளீசுரசதகம் மூலமும் உரையும் 0 10 0

அறப்பளீசுரசதகம் மூலம் 0 2 0

குமரேசசதகம் மூலம் 0 2 0

திருவேங்கடசதகம் மூலம் 0 2 0

தண்டலையார்சதகம் மூலம் 0 1 0

கோவிந்தசதகம் 0 0 9

எம்பிரான்சதகம் 0 1 0

சிவசங்கரசதகம் 0 0 9

ஷை ஏழுசதகமும் ஒரே கட்டடமாகிய சதகத்திரட்டு ... 0 9 0

குசேலோபாக்யானம் மூலம், பதவுரை, பொழிப்புரை, விசேஷவுரை (28-படங்களுடன்) 3 0 0

மேற்படி மூலம் (அரும்பதப் பொருளுடன்) ... 0 6 0

திராவிட பூர்வகாலக் கதைகள்... ... ... 0 8 0

திராவிட மத்தியகாலக் கதைகள் 0 8 0

தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள் 1 0 0

ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் (வேதாந்த நூல்) 4 0 0

பஞ்சதசப் பிரகரணம் (வினாவிடை) 1 0 0

பக்தலீலாம்ருத வசனம் (82-பக்தர்களின் சரித்திரம்) ... 8 0 0

பிரபோத சந்திரோதய வசனம் 1 0 0